சமூக-அரசியல்-பண்பாட்டுக் காலாண்டிதழ்

# மானுடம்

சான்றோர்க்கு அணி

*சிறப்பாசிரியர்*
**மெய். சேதுராமலிங்கம்**

*பொறுப்பாசிரியர்*
**வை. தேவதாசு**

*நிர்வாக ஆசிரியர்*
**யுகன்**

*ஆசிரியர்*
**தங்க. செங்கதிர்**

*இணை ஆசிரியர்கள்*
**த. இளங்கண்ணன்**
**பேரா. வை. வைரமணி**
**நிறைமதியன்**

*ஆசிரியர் குழு*
**நா. பேரறிவாளன் - மு. எழுநிலவன்**
**அறச்செல்வன் - மா. சிற்றரசன்**

*நெறியாளர் குழு*
**ச. இராசு**
**வழ. சி. அசோக்குமார்**

*தட்டச்சு*
**தன்மானம்**

*தொடர்புக்கு:*
**மானுடம்,**
*11-10, 4C, பழனிச்சாமி காம்பவுண்ட்,*
*இமையம் நகர், எஸ். ஆலங்குளம்,*
*மதுரை - 14.*

*அலைபேசி:*
63835 70936 / 63826 72836 / 90035 98674

*மின்னஞ்சல்:*
***maanudammagazine@gmail.com***

*பக்கம்*
96

*அச்சு*
**அனலி-தேவகோட்டை**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மரணமும் மரணத்துக்குப் பிந்திய துயரமும்<br>- நிக்சன் பாலா | 7 |
| 2. | ஐந்தாம், எட்டாம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு - ஓர் பார்வை<br>- முனைவர் கா. அ. மணிக்குமார் | 22 |
| 3. | இன அழித்தொழிப்பிற்குக் கட்டியம் கூறும் குடியுரிமை மறுப்புச் சட்டம்<br>- இரா. முரளி | 27 |
| 4. | ஹீரோ ஹீரோதான்<br>- கலகல வகுப்பறை சிவா | 35 |
| 5. | நீதியும் தீர்ப்பும் : இந்திய இறையாண்மையின் புது வடிவம்<br>- ஜமாலன் | 39 |
| 6. | பத்துவயதில் பயமுறுத்தும் பொதுத்தேர்வு<br>- முனைவர் முருகையன் பக்கிரிசாமி | 50 |
| 7. | உலகமயமும் நுகர்வியப் பண்பாடும்<br>- தங்க. செங்கதிர் | 54 |
| 8. | இந்தியாவின் பாதுகாப்புச் சட்டங்கள்<br>- பகவதி பிரசாத்<br>*தமிழில்:* நிழல்வண்ணன் | 62 |
| 9. | கூன்பாண்டியன் - அலாவுதீன் உத்தௌஜி - திருஞான சம்பந்தர்<br>- யுகன் | 71 |
| 10. | நீலப் பொருளாதாரமும் மீனவர் இன அழிப்பும்<br>- மெய். சேது ராமலிங்கம் | 75 |
| 11. | சுளுந்தீ : காலந்தோறும் பற்றிப் படரும் அதிகாரத்தின் பெருநெருப்பு<br>- இரா. மோகன்ராஜன் | 83 |

சமூக-அரசியல்-பண்பாட்டுக் காலாண்டிதழ்
மானுடம்
சான்றோர்க்கு அணி

மானுடம் வாசகர்களுக்கு வணக்கம்!

நடிகர் ரஜினிகாந்த் அவர்களின் அரசியல் நுழைவு மிக நீண்டகாலமாக அவரது திரைப்படங்களில் பூடகமாகவும் அவரது இரசிகர்கள் எனப்படுவோர்களால் வெளிப்படையாகவும் அறிவிக்கப்பட்டு வந்த பரபரப்பு அடுத்த ஆண்டில் முடிவுக்கு வரும் எனத்தோன்றுகிறது. 2021 இல் ரஜினிகாந்த் ஒன்று நிச்சயமாக அரசியல் கட்சி தொடங்குவார் அல்லது அதிலிருந்து பின்வாங்குவார் என்பது இறுதியாகிவிடும். அதிக பட்சமாக அவர் அரசியல் கட்சி தொடங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் வருமானவரித்துறையினரால் ஏற்படப்போகும் அனர்த்தங்களை விட அரசியல் கட்சி தொடங்குவதே தனது முதுமைக்கும் தனது புகழுக்கும் சொத்துக்களுக்கும் சரியானதும் இலகுவானதும் என்றே ரஜினி முடிவெடுக்க முடியும். தன்னை இயக்கும் சக்திகளுக்குப் பணிவதைத் தவிர வேறு தேர்வுகள் அவருக்கில்லை.

ரஜினிகாந்த் அவர்கள் தமிழரல்லாத தென்மராட்டியர் என்பதும் தமிழக நலன்சார்ந்த கோரிக்கைகளில் அவர் தமிழர்களின் நலன்களுக்கு எதிராக முடிவு எடுக்கக் கூடியவர் என்றும் அவரது ஆன்மீக அரசியல் என்பது பாரதிய ஜனதாவின் கொள்கைகளோடு பெரிதும் ஒத்துப்போகக் கூடியவை என்றும் பொதுமக்களின் உரிமைப் போராட்டங்களில் அரசின் குரலாக காவல்துறையின் அடக்குமுறைகளுக்கு நியாயம் கற்பிப்பவராக அரசியலற்ற அரசு எந்திரத்தின் ஆளாக குரல் கொடுப்பவர் என்ற விமர்சனங்கள் தமிழ்த்தேசிய அரசியல் பேசுபவர்கள், மனித உரிமையாளர்கள், மாநில உரிமை பேசுபவர்கள், அரசு எதிர்ப்பு போராட்டக்காரர்கள் போன்ற பல பிரிவினரால் அவர்மீது நீண்டகாலமாகச் சொல்லப்பட்டு வருகிறது.

இக்குற்றச்சாட்டுகள் அனைத்தையும் பொய்யானவை என்று கூறிவிட இயலாது. அவரது தனிப்பட்ட அரிதான இயல்பண்பை அளவீடாக வைத்துக் கொண்டு சமூகம், அரசியல், பொருளாதாரக் கண்ணோட்டத்தில் முற்போக்கான அம்சங்களை அவர் கொண்டிருப்பார் என்று பாமரத்தனமாக நம்பிவிட முடியாது. பெரிதும் அரசு எந்திரத்தின் முக்கிய பகுதியான காவல்துறை, இராணுவம் போன்றவற்றின் செயல்பாடுகளை புனிதத்தன்மை மிகுந்ததாக

கேள்விக்கிடமற்றதாகக் கொள்ளவேண்டும் என்பது போன்ற அவரது கருத்துக்கள் பாசிசத்துடன் நெருக்கம் கொள்வதை கவனிக்க வேண்டும். தனது இரசிகர்களில் மிகப்பெரும்பான்மையினர் அரசியலற்ற உதிரி வர்க்கத்தினர்களாக இருப்பது மேற்சொன்ன கருத்துக்கு இணக்கமாகச் செல்கிறது.

ரஜினியின் அரசியல் வருகை உறுதியானால் அவரது 'ஜெய் ஹிந்த்' என்ற முழக்கத்தின் பின்னே ஒழிந்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் 'ஏக இந்தியா' என முன்மொழியப்பட்டு தமிழகம் இதுவரை கொண்டிருந்த பிராமண எதிர்ப்பு, வேதமத எதிர்ப்பு, தமிழ் மொழி, இனம், பண்பாடு, தொன்மை, மரபு போன்றவற்றுக்கும் மாநில உரிமைகள், சுற்றுச் சூழல், இயற்கை வளச் சுரண்டல் எதிர்ப்பு கருத்துக்களுக்கும் மிக நெருக்கடிகளை இனிவரும் காலங்களில் கொடுக்கப்போகிறது என்பது தெளிவாகிறது. அவரே முடியாது என்றாலும் தமிழகத்தில் காலூன்ற ரஜினிபோன்ற சக்திகளை முன்னிருத்துவதைத் தவிர வேறு வழியேதும் பாரதிய ஜனதாவுக்கு இல்லை என்பதால் முதுகில் கத்தியை வைத்துக் கொண்டேனும் ரஜினியை தள்ளிக் கொண்டுவந்து அரசியல் அரங்கில் தள்ளிவிட்டுவிடுவதில் அக்கட்சி உறுதியாக இருப்பது தற்சமயம் அவரது அரசியல் கருத்துக்கள் நிமிடத்துக்கு நிமிடம் மாற்றி மாற்றிப் பேசுவதிலிருந்து அவதானிக்க முடிகிறது.

எம்.ஜி. ஆர். போன்றவர்கள் சினிமாவினால் ஏற்பட்ட கவர்ச்சி, வசீகரம் போன்றவற்றை தனது அரசியல் பிரவேசத்துக்குப் பயன்படுத்தினார் என்றாலும் அவர் திராவிட அரசியல் சார்ந்தவராகவே சினிமாவிலும் முன்னிலைப்படுத்தப்பட்டார். திராவிட அரசியலின் சினிமா திருவுருவாக அவர் இருந்தார். எனவே அவரது இரசிகர்களும் அரசியல் ரசிகர்களாகவே இருந்தனர். எனவே அவர் அரசியல் கட்சி தொடங்கியதும் இரசிகர்கள் அப்படியே கட்சித் தொண்டர்களாக மாறினார்கள். ரஜினிகாந்தோ எவ்வித கொள்கை கோட்பாடுகளுமற்ற திரைப்படங்களைத் தந்தவராக தன்னை முன்னிருத்தும் 'சூப்பர்மேன்' போன்று செயல்பட்டு சூப்பர் ஸ்டார் ஆனவர். எனவே அவரது இரசிகர்கள் என்பவர்கள் வெறும் ரஜினியின் சினிமா இரசிகர்கள்தான். வெறும் சினிமா ரசிகர்களை தான் உருவாக்கும் கட்சிக்கு தொண்டர்களாக ஆக்குவது மிகவும் கண்டிக்கத்தக்கது. பணத்தைப் பெற்றுக் கொண்டு நடித்துவிட்டு தான் கொண்டிருக்கும் அரசியல் கருத்துக்களை இதுவரை வெளிப்படையாகச் சொல்லாமல் வைத்திருந்து நடிப்பினால் ஈர்க்கப்பட்ட ரசிகர்களைத் தான் தொடங்கவிருக்கும் அரசியல் கட்சிக்குத் தொண்டர்களாக மடைமாற்றுவது எங்கும் இல்லாதது. அறம் மீறிய அரசியல் நடவடிக்கை. தவறான முன்னுதாரணம் கொண்டது.

தமிழகத்தை தமிழரே ஆளவேண்டும் என்ற குரல்கள் பரவலாக உரக்க ஒலிக்கத் துவங்கியுள்ள காலத்தில் ரஜினியின் அரசியல் நுழைவு செய்திகள் இன்னமும் முக்கியத்துவம் பெறத்துவங்கியுள்ளது. எனவே அக்குரல்களுக்கு பரவலாக எதிர்ப்புகளும் உள்ளன. தமிழகத்தை தமிழரே ஆளவேண்டும் என்பதை ஓர் இனவாத குரலாகக் கொள்ளமுடியாது. அது மண் நலன்சார்ந்த கோரிக்கையாக - சனநாயகக் குரலாகத்தான் கருதவேண்டும். ஆனால் தமிழகத்தின் ஆகப்பெரும்பான்மை மக்களின் ஏற்பைப் பெற்ற கோரிக்கையாக அது பரிணமித்தால்தான் தமிழகத்தின் குரலாகக் கருதமுடியும்.

அதே நேரம் ரஜினி அரசியல் கட்சி தொடங்கக் கூடாது என்றோ அரசியலில் நுழையக் கூடாது என்றோ கூறுவது சரியான கருத்தா என யோசிக்க வேண்டும். யாரும் அரசியல் கட்சி தொடங்கலாம். ஆட்சியைப் பிடிக்கலாம். தமிழகத்தின் முதல்வராகலாம். அது சட்டப்படியும் நியாயப்படியும் சரியானதே. அவரை ஏற்பதாக மறுப்பதா என்பதை பெரும்பான்மைத் தமிழக மக்களே முடிவு செய்யப்போகிறார்கள் என்பதால் அதை யாரும் தடுக்க முடியாது. ரஜினிகாந்த் அவர்களின் சமூக, அரசியல், பண்பாடு, பொருளாதாரம் பற்றிய கண்ணோட்டத்தில் இருக்கும் பிற்போக்கு, மத, பாசிச் கருத்துக்களை - அபாயங்களை பரப்புரை செய்து அவரைக் களத்தில் தோற்கடிப்பதே அவரை எதிர்ப்பவர்களின் - மக்கள் நலனில் அக்கறை கொள்பவர்களின் சரியான நடவடிக்கையாக இருக்க முடியும். இதுவே அறம் சார்ந்த அரசியல். ஆட்டத்திற்குள் நுழையவிடாது தடுப்பது அவருக்குச் சாதகமான பரப்புரையாக மாறி வெற்றியைப் பெற்றுத்தரக் கூடிய வாய்ப்புகளை அரசியல் சூழல் ஏற்படுத்திவிடக் கூடும். எச்சரிக்கையாகச் செயல்படவேண்டிய தருணமிது.

மானுடம் உரிய பருவ காலத்தில் பயணிக்கத் தொடங்கியிருக்கிறது. வாசகர்கள் தொலைபேசி வாயிலாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, கடிதங்கள் வாயிலாகவோ தங்களது விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் தெரிவிக்கலாம். செழுமை மிக்க மானுடமாக வளர ஆதரவு தரக் கோருகிறோம். படியுங்கள், பரப்புங்கள்.

நன்றி !

தோழமையுடன்,

'மானுடம்' ஆசிரியர் குழு.

1

# மரணமும் மரணத்துக்குப் பிந்திய துயரமும்

## நிஜத்தடன் நிலவன்

பிறப்பும், இறப்பும் உலகத்தின் அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒன்று. அதனை எம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும் நம்மைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்து செல்லும் அன்புக்குரிய உறவுகளின் இறப்புத் துயரத்தை பலரால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

அதன்விளைவுகள் உள, உடல் மாற்றங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றன. அந்தவகையில் இறப்பு என்பது உடலில் இருந்து ஆன்மா பிரிந்து செல்வதையே குறிப்பிடுகின்றது. இதனை மரணம் எனவும் அழைப்பர். மரணமானது இயற்கை மரணமாகவோ அல்லது அகால மரணமாகவோ நிகழலாம். மரணத்துயர் என்றால் என்ன என வரையறுப்போமாயின் பெரும்பாலும் இழப்பினைத் தொடர்ந்து அதுவும் அன்புக்குரியவரின் மறைவினைத் தொடர்ந்து ஏற்படுவதாகும். இது இழவிரக்கம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இது எல்லோருக்கும் ஏற்படும் சாதாரண நிகழ்வு. ஆனால் ஒருசிலரில் இதன் தாக்கம்

அசாதாரண நிலையினை அடையலாம். இவ்வாறு மரணத்துயரில் உள்ள மக்களது பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வாக மரணச்சடங்குக் கிரியைகளைப் பின்பற்றுவதன் மூலம் அந்தத்துயரத்திற்குரிய தீர்வினைப் பெறமுடியும் என்பதாக அமைகின்றது. அதாவது மதசடங்குக் கிரியைகளைப் பின்பற்றுவதன் மூலம் துயரத்தினைக் குறைத்துக்கொள்ளமுடியும் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

மாறாக மேற்கூறப்பட்ட மதச் சடங்குக்கிரியைகளைப் பின்பற்றாத விடத்து பாரிய உளவியல் தாக்கங்களுக்கு உட்படுகின்றனர். அதாவது குற்றஉணர்ச்சி போன்ற மனவடுக்களுக்கு உள்ளாகின்றனர். எனவே இத்தகைய உள, உடல் பிரச்சினைகளுக்கு மக்களுக்கு மரணமும் மரணத்துயரும் உளத்தாக்கத்தை ஏற்படுத்துவதோடு அதனை கவனியாது விடும்போது உளநோய், மனச்சோர்வு போன்ற உளரீதியான பிரச்சினைகள் ஏற்பகின்றன.

முதன்மை நோக்கமாக மரணத்துயரில் இருப்பவர்கள் மத மரணச் சடங்குக்கிரியைகள் ஒழுங்குமுறையாகச் செய்வதனூடாக அவர்கள் மரணத் துயரிலிருந்து மீண்டெழுவதனைக் கண்டறிதல், மத மரணச்சடங்குக் கிரியைகள் செய்யாமல் தற்பொழுதும் மரணத்துயருடன் இருப்பவர்களைக் கிரியைகள் செய்வதை ஊக்குவித்தல். இழப்புத்துயர் உள்ளோரின் உளநலத்தினை அறிதல் போன்றன உளநலச் சிகிச்சை மற்றும் ஆற்றுப்படுத்தலாகும்.

மத மரணச் சடங்குக்கிரியைகள் ஒழுங்கு முறையாக செய்பவர்கள் அதனை செய்யாதவர்களைவிட விரைவாக மரணத்துயரிலிருந்து மீண்டெழுகின்றனர். சமூக கூட்டிணைவு, ஆதரவு என்பன மரணத்துயரினைக் குறைக்கின்றது. இறுதி மரணக்கிரியைகளில் மனம்விட்டு அழுது புலம்பல் அவர்களின் மனப்பாரத்தினைக் குறைக்கும் அத்துடன் உடல், உளத்தூய்மையை ஏற்படுத்துகின்றன.

**மரணமும் மரணத்திற்குப் பிந்தியதுயரமும்**

மதத்தில் காணப்படும் மரணச் சடங்குக்கிரியைகள் எவ்வாறு துயர் நிவாரணியாகச் செயற்படுகின்றது. இழப்புத் துயர் நீண்டு செல்லும்போது மிகையாக வெளிப்படுத்தப்படும் போதும் அது நோயியல் வலுநட்டம் பெறுகின்றது. இந்நிலை அசாதாரணமானதே. இத்தகைய நிலைமைகளில் பீதி மற்றும் இழப்பினை நினைவுகூறும் பொருட்களைத் தவிர்த்தல் பயன்தரும்.

சிலசந்தர்ப்பங்களில் இழவிரக்கத் தொழிற்பாடு அதிகரித்து மிகையான கோபாவேசத்திற்கு உட்பட்டவர்களாகக் காணப்படலாம். மேலும் சிலசந்தர்ப்பங்களில் தொழிற்பாடு மந்தமாகி

எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கிக் காணப்படலாம். இப்படியான சந்தர்ப்பங்களில் தன்னை அழித்தல் மற்றும் தற்கொலை எண்ணங்களால் பாதிக்கப்பட்டிருப்பார். தன்னம்பிக்கை இழந்து காணப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. எந்தத் தூண்டுதலிற்கும் துலக்கமற்றுக் காணப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இத்தகையவர்களுக்குக் கண்டிப்பாக உளநலச் சிகிச்சைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் 'மரணத்துயர்' வெளிப்படுவதற்குத் தாமதமாதலும் நோயியல் வலுவூட்டம் பெறுவதற்குக் காரணமாக அமையலாம். நோயியல் வலுவூட்டம் பெறுவதற்கு வேறு அனேக காரணிகளும் உள்ளன.

1. திடீரென ஏற்படும் இழப்பு
2. மிக நெருங்கிய உறவின் இழப்பு
3. இழப்புக்குள்ளானவர் அந்த உறவில் பெருமளவு தங்கியிருத்தல்
4. இழப்பிற்குப் பின்னர் பாதுகாப்பற்ற உணர்வில் இருத்தல்
5. இழப்பின் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாமை
6. இழப்புடன் வேறுபல பாதகமான நிகழ்வுகள் ஏற்படல்
7. இழப்பிற்கு உட்பட்டவர் சமூக ஆதரவினை இழந்திருத்தல்

இத்தகைய சந்தர்ப்பங்களில் பெருமளவில் இழவிரக்கம் நோயியல் வலுவூட்டம் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் அண்மைக்கால உள்நாட்டு யுத்தம், அனர்த்தங்களில் உறவுகளை இழந்தவர்கள் மேற்குறிப்பிட்ட காரணிகளைப் பெருமளவில் கொண்டுள்ளனர். எனவே, அவர்களில் உளநோயியல் வலுவூட்டம் ஏற்படக்கூடிய ஏதுநிலை காணப்படுகின்றது

இழப்புக்கள் ஏற்படும்போது அதிலும் குறிப்பாக எதிர்பாராத இழப்புக்கள் ஏற்படும்போது பெரும் அதிர்ச்சிக்குட்படுகின்றனர். இழப்பினை மறுதலித்து அதனை ஏற்றுக் கொள்ள முடியாத தொருநிலையில் காணப்படுவர். அந்த இழப்பினைத் தாங்கமுடியாததால் கடும் கோபத்திற்குள்ளாகிக் காணப்படுவர். அதிலும் சிலகாலம் அந்த மனிதனைத் தேடுதலில் ஈடுபடுவர். பிற இடங்களிலும் மக்கள் கூட்டங்களிலும் அவரைத் தேடுவர். அதிலும் அவர்கள் உயிருடன் இருப்பது போன்ற உணர்வு அவர்களது உருவங்கள் தெரிவது போலவும் அவர்கள் உரையாடுவதைப் போலவும் தோற்றப்பாடுகள் ஏற்படலாம். அவர்களுடைய உருவத்தில் மனதைப்பறி கொடுத்த நிலையிலே காணப்படுவர்.

இழப்பினைத் தொடர்ந்து மனநெருக்கீடு ஏற்பட்டு அது கவலையாகவும் கண்ணீராகவும் வெளிப்படுகிறது. அவர்கள் தங்கள் எல்லாவிதமான மகிழ்ச்சியான விடயங்களையும் தொலைத்து விட்டவர்களாகவே காணப்படுவர். அவர்கள் கவனக்குறைவு மற்றும் ஆர்வமின்மையினால் பாதிக்கப்பட்டுக் காணப்படுவர். அத்துடன் சினம் கொண்டவர்களாகவும் சமூகத்திலிருந்து ஒதுங்கியும் காணப்படுவர். அவர்களுடைய அன்றாடக் கடமைகளை மேற்கொள்ள முடியாது தவிப்பர். அத்துடன் ஏதோ நடைபெறப்போகிறது என்ற பயமும் காணப்படலாம்.

இத்தகைய வெளிப்பாடுகள் யாவும் ஒரு இழப்பினைத் தொடர்ந்து சாதாரணமாக ஏற்படலாம். எனவே இத்தகையபடி முறைகளுக்கூடாகவே இழப்பினை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை அடைவர். மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்க இழப்பினை ஏற்றுக்கொண்டு தனது அன்றாட கடமைகளைச் செய்யத் தலைப்படுவர்.

எமது சமூகத்தில் நாம் மேற்கொள்ளும் ஈமச்சடங்குகள் மற்றும் கிரியைகள் இத்தகைய ஆரோக்கியமான எதிர்கொள்ளலுக்கு ஆதரவாக உள்ளன. அவற்றைச் சரியாக கடைபிடிப்பதன் மூலம் இவற்றை நாம் ஆரோக்கியமாக எதிர்கொள்ள முடியும்.

**சாதாரண துயரம் ( Normal Grief)**

இது உடலில் ஏற்படும் ஏனைய மாற்றங்கள் போன்று சாதாரணமானது. 'ஒருகாய்ச்சலைத் தொடர்ந்து அல்லது காயத்தினைத் தொடர்ந்து இயற்கையாக எத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்றனவோ அவற்றை ஒத்து இழப்பினைத் தொடர்ந்து சாதாரணமாக ஏற்படும் உளத்தாக்கங்களை சாதாரண துயரம் என வரையறுக்கப்படுகின்றது' இது சில படிமுறையான நிலைகளினூடாகக் கடந்து செல்கிறது. இந்த படிமுறைகள் மூன்று நிலைகளாக காணப்படுகின்றது.

முதலாவதுநிலை - அதிர்ச்சிநிலை 'சிலமணிநேரங்களிலிருந்து சிலநாட்களுக்கு நீடிக்கக்கூடிய நிலையினை குறிக்கின்றது'. இதன்போது ஒருவித அதிர்ச்சியுடன் காணப்படுவார்கள். இழப்பினை அல்லது இழப்பினை மறுதலிக்கும் போக்கினை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் அவர்கள் உணர்வற்றவர்களாகவும், நம்பிக்கை இழந்தவர்களாகவும் காணப்படுவர். இழப்பினை ஏற்றுக் கொள்ளாது அதன் எதிர்த்தாக்கமாக ஏற்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாதவர்களாக பிரமை பிடித்த நிலையில் காணப்படுவர். இழந்தவரை தேடும் மனநிலையில் காணப்படுவர்.

இரண்டாவது நிலை - துயரப்படும் நிலை 'சிலவாரங்களில் இருந்து சிலமாதங்கள் வரை நீடிக்கக் கூடிய நிலை'. இந்தநிலையின்

போது மிகையான துக்கம், அழுகை என்பன ஏற்பட்டு ஒருவித உணர்ச்சிக் கொந்தளிப்பில் காணப்படுவர். பதகளிப்புக் குணங்குறிகள் பெருமளவில் காணப்பட்டு தூக்கமின்மை, பசியின்மை போன்றவற்றினால் பாதிக்கப்படுவர். இத்தகைய உணர்ச்சிக் கொந்தளிப்பு அலைஅலையாக வந்து தாக்கிச் செல்லும். சிலர் குற்ற உணர்விலும் வேறு சிலர் கோப உணர்ச்சியிலும் தவிப்பர். இறந்தவரின் உருவம் தெரிவதாகவும் அவர் உரையாடும் குரல் கேட்பது போன்றும் மாயப்புலன் உணர்வு கொண்டிருப்பர்.

மூன்றாவது நிலை - இசைவாக்கப்படும் நிலை 'சிலவாரங்களில் இருந்து மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய நிலை இது'. இறப்பின் அல்லது இழப்பின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அதனை மெல்ல மெல்ல ஏற்றுக் கொள்ளும் நிலையினைக் குறிக்கின்றது. இந்நிலையின்போது உணர்ச்சி வெளிப்பாடுகள் மற்றும் உடல் உபாதைகள் பெருமளவில் குறைந்து தங்களுடைய அன்றாடக் கடமைகளை படிப்படியாகச் செய்ய ஆரம்பிக்கின்ற நிலையினை அவதானிக்கலாம். சிலர் இழந்தவருடனான இனிமையான நினைவுகளை மீட்டிக் கொள்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். ஆனாலும் ஒரு வருடப்பூர்த்தியின் போது குணங்குறிகள் தற்காலிகமாக மீளவும் வெளிப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

**அசாதாரண துயரம் (Abnormal Grief)**

'மரணத்துயரம் மிகைப்படுத்தப்பட்ட நிலையில் அல்லது நீடித்துச் செல்லும் வகையில் காணப்பட்டால் அது அசாதாரண மரணத்துயர் என வரையறுக்கப்படுகின்றது'. பிந்திய இழவிரக்கம் *(Delayed Grief)* அல்லது ஆரோக்கியமாக நெறிப்படுத்தப்படாத மரணத்துயரம் ஆகியனவும் அசாதாரணமானவையே. இவை இயற்கைக்கு மாறான *(Unatural Grief)* இழவிரக்கமாகக் கொள்ளப்படுகின்றன. சாதாரண இழவிரக்கத்திலும் பார்க்க மிக அதிகமாக அல்லது மிகக்குறைவாக வெளிப்படுத்தப்படுகின்ற இழ விரக்கத்தினையும் நாம் அசாதாரணமாகக் கொள்ளலாம்.

சமூக ஆதரவு மற்றும் குடும்ப ஆதரவு குறைந்தவர்களில் துயரம் பிந்திய வெளிப்பாடாகவே அமைகிறது. இழப்பின் தன்மை மற்றும் இழந்தவருடனான உறவுமுறை என்பன மிகையான வெளிப்படுத்தலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இழந்தவருடனான உறவில் வெளிப்படுத்தப்படமுடியாத குற்ற உணர்வு, கோபம், நிராகரிக்கப்பட்டதான உணர்வு என்பன காணப்பட்டால் இழவிரக்கம் அசாதாரணமாக அமையலாம். உதாரணமாக தற்கொலை மூலம் இறப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் இத்தகைய நிலை காணப்படலாம்.

**நீண்டு செல்லும் துயரம் (Croc Grief)**

இழந்த உறவில் மிகையாகத் தங்கியிருப்பவர்களில் அவரது இழப்பினைத் தொடர்ந்து ஏற்படுகிறது. இதன்போது இழவிரக்கச் செயற்பாடுகள் ஆறு மாதங்களின் பின்னரும் நீண்டு செல்வதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இதுவரை இங்கு குறிப்பிடப்பட்டவை மனிதவாழ்வில் சாதாரணமாக ஏற்படும் இறப்புக்கள் மற்றும் இழப்புக்கள் காரணமாக ஏற்படும் இழவிரக்கச் செயற்பாடுகள்.

ஆனால் ஆழிப்பேரலைகள், உள்நாட்டு யுத்தம் போன்றனவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட இழப்புக்கள் மிகவும் அசாதாரணமானவை. எமது கட்டுப்பாட்டை மீறியவை பல குடும்பங்களில் பலர் ஒன்றாகவே மாண்டனர். பல சந்தர்ப்பங்களில் இறந்த உடல்களையேனும் காணமுடியாது அனேகர் தவிர்த்தனர். ஆத்மாக்கிரியைகளை மேற்கொள்ளமுடியாமல் வீடு வாசல்களை பலர் இழந்து பலர் தவிர்த்தனர். கூடிஅழுவதற்கு சுற்றமும் உற்றாரும் இன்றிப் பலர் தவித்தனர். இத்தகைய அசாதாரண நிலைமையில் பலர் மிகையான இழவிரக்கத்திற்கு உட்பட்டுக் காணப்பட்டனர்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் அசாதாரண இழவிரக்கம் ஏற்படுவதற்கான அல்லது இழவிரக்கம் நீண்டு செல்வதற்கான சந்தர்ப்பங்களும் பெருமளவில் காணப்படுகின்றன. சாதாரணமாகச் சுமார் ஆறு மாத காலமளவில் இந்த இழவிரக்கம் நிறைவடையலாம். எனினும் தொடர்ச்சியாக நீண்டு செல்வதற்கான சந்தர்ப்பங்களும் தற்போதைய நிலைமையில் காணப்படுகின்றன. இதனை நாம் கவனத்திற் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**மரணத்துயர் தொடர்பான கொள்கைகள்.**

மரணம் தொடர்பான படிமுறை அணுகுமுறையில் பிரசித்தி பெற்ற கொள்கைகளில் மரணத்தை எதிர்கொள்வதற்கான படிமுறைக் கொள்கை. இது Dr Elizebeth Kubler Ross அவர்கள் 1969- 1970 களில் முன்மொழியப்பட்டது'. இவர் தனது நூலான 'On Death And Dying' என்ற நூலில் ஒருவர் மரணத்தை எதிர்கொள்ளலானது படிநிலைகள் ஊடாக செல்கின்றார். அதற்காக அவர் தீராத நோயால் பாதிக்கப்பட்ட 200 பேரில் கள ஆய்வு செய்தார். இவர் ஆய்வுக் கண்டு பிடிப்பே மரணத்தை எதிர்கொள்கையில் சிறந்த ஒன்றாக கருதப்படுகின்றது. தனது ஆய்வினூடு மரணத்தை எதிர்கொள்வோரின் உணர்ச்சி அனுபவங்கள் ஐந்து கட்டங்களாக நிகழ்வதை அடையாளம் கண்டு கொண்டார். 200 நோயாளர்களில் 191 பேர் ஐந்து படிமுறைகளுக்கு ஊடாக பொருத்தப்பாடடைதல் எனக் கூறினர். இவருடைய இப்படி

நிலைகளூடாக எவ்வாறு இழப்புத் துயருடையவர்கள் எதிர்கொள்கின்றனர் என ஒப்பீட்டுப் பார்க்க முடிகின்றது. அவையாவன.

1. ஏற்க மறுத்தல் படிநிலை *(Stage of Denial)*
2. கோபப் படிநிலை *(Stage of Anger)*
3. பேரம்பேசுதல் *(Stage of Bargaining)*
4. மனச்சோர்வுப் படிநிலை *(Stage of Depression)*
5. ஏற்றுக் கொள்ளல் படிநிலை *(Stage of Acceptable )*
6. ஏற்க மறுத்தல் படிநிலை *(Stage of Denial)*

**ஏற்க மறுத்தல் படிநிலை (Stage of Denial)**

இழப்புத் துயரத்தில் உள்ளவர்கள் தங்களுடைய உறவின் பிரிவினை அதாவது அவர்கள் இறந்து விட்டார் என்பதை ஏற்க மறுக்கின்றனர். ஒருவர் ஒன்றை மறுக்கின்றாரோ அந்த அளவிற்கு அது உண்மை என்று கண்டு கொள்ளவேண்டும். இதை மற்றவர்கள் நேர்மையற்றதனமாகவோ அல்லது உண்மையற்றதனமாகவோ எடுத்துக் கொள்ள தேவையில்லை. இது உறவுப்பிரிவின் துயரத்திலிருந்து பாதுகாக்க ஒரு கவசமாக மறுத்தல் காணப்படுகின்றது. இங்கு அவர்களுடன் உரையாடுவது கதைத்துக் கொள்ளல் போன்றன இடம்பெறும்.

**கோபப் படிநிலை (Stage of Anger)**

இப்படி நிலையில் கோப உணர்வே மேலோங்கிக் காணப்படும். 'எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்க வேண்டும் என்று தனக்குள்ளேயே கேட்கின்றனர்.' இளம் வயது பெண் கணவனை இழந்தால் 'தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக எண்ணி தன்னைச்சுற்றி இருக்கும் அனைவர் மீதும் கோபத்தை வெளிப்படுத்த ஆரம்பிக்கின்றனர்.

உதாரணமாக:- பெற்றோர், நண்பர்கள், மருத்துவர் கடவுள் அத்துடன் தன்னுடன் தொடர்பில்லாத நபர்கள் மீதும் கோபத்தை காட்டலாம். ஒரு சிலர் தம்மீதும் கோபமாயிருப்பார்கள். கடந்த இரண்டு நிலைகளுக்கும் உட்பட்டோர் மூன்றாவது நிலையில் இருந்து தங்கள் உணர்வுகளை வெளிக்காட்ட முனைகின்றனர்.

பேரம் பேசுதல் (Stage of Bargaining) இழப்புத் துயரில் உள்ளவர் தன் வாழ்வை நீடிக்க இம்முறையை பின்பற்றுகின்றனர். தனக்கு வந்துள்ள இப்பிரிவுத் துயரத்தை தவிர்க்க முடியாததை உணர்கின்றார். பிரிவை மறுக்கவில்லை. இப்போது அவர் விரும்புவதெல்லாம் தம்முடைய பிரியமான உறவு ஆத்மா சாந்தியடைய வேண்டும். கடவுளிடம் பேரம்பேசல் போன்றன இடம்பெறும். உதாரணமாக:-கோவில்களுக்கு தர்மம் கொடுத்தல்.

**மனச்சோர்வுப் படிநிலை (Stage of Depression)**

இழப்பின் எதிரொலியாக மனச்சோர்வு அமையலாம். இழப்புத்துயர் அடைந்தவர்களை தகுந்தமுறையில் ஆற்றுப்படுத்தாதபோது அவர்கள் தொடர்ச்சியான சோகம் தனிமைக்கு உள்ளாகி மனச்சோர்வுக்குத் தள்ளப்படுகின்றனர்.

**ஏற்றுக் கொள்ளல் படிநிலை (Stage of Denial)**

ஏற்றுக் கொள்ளும் தன்மையை அடைதலே கடைசி நிலையாகும். இக்கடைசி நிலையில் வெளிப்படையாக காட்டப்படுகின்ற உணர்வு ஏதும் இல்லாததுபோல் தோன்றும். இங்கு அன்புக்குரியவர் இறந்துவிட்டார் என்பதை ஏற்றுக்கொண்டு செயற்படல். அத்தோடு எவரிடமும் பேசாமல் மௌனமாக இருப்பர். எத்தகைய கோபமும் இங்கு காணப்படாது.

ஒருவர் இறந்தபின் அவர் எம்மதத்தைச் சார்ந்தவரோ அம்மதத்தின் விதிகளுக்கு அமைய அந்த ஆன்மாசாந்தி அடைவதற்காகவும், அந்த ஆன்மாவைத் தாங்கி நின்ற உடலை புனிதமாக்குவதற்காகவும் கிரியைகள் நடாத்தப் பெற்று தகனம் செய்யப் பெறுகின்றன அல்லது நல்லடக்கம் செய்யப் பெறுகின்றன.

மேலும் விளக்கமாக கூறுவதாயின் மானிடப் பிறப்பெடுத்து வாழ்ந்த ஆன்மாவானது இரண்டு சூழ்நிலைகளில் பாவவினைகளை செய்து விடுகின்றன. ஒன்று தாம்செய்யும் செயல் பாவம் என அறிந்திருந்தும் செய்வது, மற்றையது பாவம் என அறியாமலே செய்வது அல்லது எதுவுமே அறியாமலேயே நிகழ்ந்து விடுவது போன்ற சந்தர்ப்பங்களில் உடலினாலும், வாக்கினாலும், மனதினாலும் மூன்று விதமாக பாவவினைகளைச் செய்கின்றது. இவற்றுள் பாவம் என அறிந்து செய்யும் செயலால் ஏற்படும் பாவவினையை அந்த ஆன்மா அனுபவித்தே ஆகவேண்டும்.

அறியாது செய்த பாவவினைகள் அவரின் வழி வந்த வாரிசுகள் அவருக்காகச் செய்யும் மரணச் சடங்கு, அந்தியேட்டிக் கிரியைகள், தான தர்மங்களினால் நிவர்த்தியாகின்றன அல்லது குறைந்து போகின்றன என ஆகம நூல்கள் கூறுகின்றன.

கன்ம வினைகளால் பீடிக்கப் பெற்ற ஆன்மாவை ஜீவாத்மா அல்லது சூட்சுமசரீரம் என்றும் அது இப்பூவுலகில் பெற்றிருக்கும் உடலை தூலசரீரம் என்றும் அழைப்பர். சூட்சும சரீரம் தூல சரீரத்தை விட்டுப் பிரிதலையே நாம் இறப்பு என கூறுகின்றோம். இந்த இறப்பின்போது ஜீவாத்மாவானது (சூட்சுமசரீரம்) யம தூதர்களினால் கவர்ந்து யமலோகத்தில் இருக்கும் யமதர்மாராஜனிடம் அழைத்துச் செல்கின்றனர். பூலோகத்திற்கும் யமலோகத்திற்கும் இடையே சுமார்

எண்பத்தியாறாயிரம் காதவழிதூரம் இருப்பதாகவும் பாவம் செய்த ஆன்மாக்களுக்கு உரியதண்டனை அவர்கள் செல்லும் பாதையிலும், எமலோகத்திலும் வழங்கப்பெறுவதாகவும் அப்பாதையை கடந்து செல்வதற்கு பாவம் செய்த சில ஆன்மாக்களுக்கு ஒருவருடம்வரை ஆகலாம் என்றும் கருடபுராணம் கூறுவதாகச் சொல்லப் பெறுகின்றது.

இறந்த ஜீவாத்மாவின் கன்ம வினைகளுக்கு ஏற்ப பாதையின் உக்கிரம் தன்னிச்சையாகவே மாற்றமடைவதால் உடலை விட்டுப் பிரிந்த ஜீவாத்மா பாவம் என அறியாது செய்த பாவங்களை நிவர்த்தி செய்து அல்லது குறைத்து இயமலோகம் செல்லும்வரை உள்ள பாதையின் உக்கிரத்தை குறைத்து சுகமாக கடந்து செல்வதற்காகவும், அந்த ஜீவாத்மாவை சாந்தி பெறச்செய்வதற்காகவும் அவர்களின் வாரிசுகளினால் இறுதிக் கிரியை, (எட்டு வீடு, 15 ஆம் நாள் படையல்) அந்தியேட்டிக் கிரியை, மாத மாசியம், திவசம் போன்ற சிரார்த்தக் கிரியைகளையும், தானங்களையும் சிரத்தையோடு செய்கின்றனர்.

இதனால் அந்த ஜீவாத்மாவிற்கு புண்ணியப் பேறினால் நற்பிறப்பு கிடைக்கும் என்பதும் ஐதீகம். ஒருவர் இறந்த காலத்தை வைத்தும் அந்த ஜீவாத்மா பாவம் அதிகம் செய்த ஆத்மாவா அல்லது புண்ணியம் அதிகம் செய்த ஆத்மாவா என்று கணித்துக் கொள்கின்றார்கள். உத்தராயண காலத்தில் (தை மாதம் முதல் ஆனி மாதம்வரை உள்ள காலம்), சுக்கில பக்சத்தில் (வளர்பிறைக் காலம்), உடலின் தொப்பூழுக்கு மேல் (கண்கள், காதுகள், நாசிகள், வாய்) அமைந்துள்ள ஏதாவது ஒரு வாசலினால் உயிர்பிரிந்திருந்தால் புண்ணியம் அதிகம் செய்த ஆன்மாவாகவும் தட்சணாயன காலத்தில் கிருஷ்ணபக்சத்தில் உடலின் தொப்பூழுக்கு கீழ் உள்ள வாயில்களில் ஒன்றினால் உயிர்பிரிந்திருந்தால் பாவவினை அதிகம் செய்த ஆன்மாவாகக் கணிக்கப்பெறுகின்றது.

ஒருவர் இறக்கும்போது ஆன்மாவானது உடம்பில் உள்ள ஒன்பது வாசல்களில் ஏதாவது ஒருவாசலினால் பிரிவதாக ஐதீகம். இதனை இறந்தவுடன் ஒருவரின் ஏதோ ஒரு வாயில் ஈரமாக இருப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். பாவம் செய்யாத பரிசுத்த ஆன்மாக்களை காண்பது அரிதினும் அரிது. எந்த ஒரு ஆன்மாவும் தெரிந்தோ தெரியாமலோ பாவம் செய்தே இருப்பார்கள் என்பது நம்பிக்கை. பரிசுத்தமான ஆன்மாவானது நேரடியாக பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்து விடுகின்றது என்பது ஐதீகம்.

ஒருவர் நோய்வாய்ப்பட்டு அல்லது வயோதிபம் அடைந்ததினால், சுயநினைவற்று இருக்கும் தறுவாயில் (சேடம் இழுக்கும் நிலையில்) அந்த ஆன்மா இறைவனையே எண்ணும்படியான சூழ்நிலையை உருவாக்குவதற்காக அவரைச்

சூழ்ந்துநின்று பஜனைகள் அனுபவமிக்கவர்கள், அல்லது நாடிபிடித்து பாப்பவர்கள் (தோத்திரங்கள்) பாடுவார்கள்.

ஜீவன் பிரியும் நிலையை உணர்ந்தால் 'ஜீவன் போகப் போகுது' உரிமைகாரர் பால் பருக்குங்கள் என்றுகூறுவர். அப்போது அவருக்கு தீர்த்தம் அல்லது பால்பருக்கி அவருடைய வலது காதில் சமயதீட்சை பெற்ற ஒருவர் மூலம் 'பஞ்சாட்சர மந்திரம் - சிவாயநம' சொல்லி தோத்திரம் பஜனையாக பாடுவார்கள். இவ்வாறு நாம் செய்யும்போது பிரிய இருக்கும் ஆன்மாவானது இவ்வுலகத்தில் பெற்றிருந்த ஆசாபாசங்களை மறந்து, இறைநாட்டம் கொண்டதாகி இறைவனை நாடிநிற்கும். அந்த நிலையில் ஜீவன் பிரிந்தால் இறைவனின் கடாட்சம் அந்த ஆன்மாவுக்குக் கிடைக்கும் என்பது ஐதீகம்.

ஒருவர் இறந்துவிட்டால் அவரை உடனே குளிப்பாட்டி, விபூதி அணிவித்து, சந்தனமும் குங்குமப் பொட்டும் வைத்துத் தெற்குத் திசைநோக்கி தலைப்பகுதி இருக்குமாறு கட்டிலை வைத்து, குத்துவிளக்கேற்றி வைப்பார்கள். அத்துடன், இறந்தவரின் உடல்வைக்கப் பெற்றுள்ள இடத்தில் கட்டிலுக்குமேலே வெள்ளை கட்டுவார்கள். அதற்கும் ஒருகாரணம் சொல்லப் பெறுகின்றது. அதாவது இறந்தவரின் உடல்வைக்கப் பெற்றிருக்கும் கட்டிலுக்கு மேலே கட்டப் பெற்ற வெள்ளைத்துணியில் அந்த உடலைவிட்டுப் பிரிந்த சூட்சும சரீரம்கொண்ட (ஆன்மா) ஆவியானது தொங்கிக் கொண்டு நிற்குமாம்.

அதனாலேயே இறந்தவரின் உடலை தோயவாக்கும் போதும் வெள்ளைத் துணிகட்டிய இடத்திற்கு கீழே வைத்து தோய வார்க்கிறார்கள். அதன்பின்பும் இறுதிக்கிரியைகள் நடக்கும் போதும் வெள்ளை கட்டிய இடத்திலேயே தலைப்பக்கம் தெற்குநோக்கி இருக்குமாறு வைக்கிறார்கள். குளிப்பாட்டும் போதும், கிரியைகள் நிகழும்போதும் இறந்தவரின் ஆத்மா அந்த வெள்ளை துணிகளில் தொங்கியவாறு இருக்கும் என்பது நமது மூதாதையினர் கூறிய விளக்கமாகும். இறந்தவரின் ஆவி இறந்தநாளில் இருந்து 16 நாட்கள் வரை அவ்வீட்டை சுற்றிக் கொண்டுநிற்கும் என்பதும் ஆன்றோர் கூற்று. அதனாலேயே 3ம்நாள், 8ம்நாள், 15ம்நாள்படையல் என இறந்தவர் விரும்பி உண்ணும் உணவும், உணவுப் பண்டங்களும் படைத்து இறந்தவரின் ஆவியை மகிழ்விக்கின்றார்கள்.

இக்கிரியைகள் இடத்திற்கு இடம் வித்தியாசமான முறைகளில் செய்யப் பெறுகின்றன. சாதாரணமாக ஒரு பொதுமகன் இறந்துவிட்டால். அவர் உடம்பை தகனம் செய்வார்கள். அவர் சமயதீட்சை பெற்று ஆசாரசீலராக வாழ்ந்திருந்தால் சமாதியும் இருத்துவார்கள். அனேகமாக புலம்பெயர் வெளிநாடுகளில் தமிழர்

ஒருவர் இறந்தால் அவரின் பூதவுடலை இரண்டு அல்லது மூன்று தினங்கள் பார்வைக்கும், அஞ்சலிக்கும் வைத்தபின், இறுதிக்கிரியைகள் செய்து மின் அல்லது காஸ் போறணையில் எரியூட்டி தகனம் செய்வது வழக்கமாக உள்ளது. ஆனால் அவரின் ஆன்மாசாந்தி அடைய செய்யப் பெறும் கிரியைகள் எல்லாம் சைவ ஆகமவிதிகளுக்கு அமைய இடம்பெறுகின்றன.

இறந்தவர் இஸ்லாம் சமயத்தை சேர்ந்தவராயின் அவர் அரசனாக இருந்தாலும் சரி, ஆண்டியாக இருந்தாலும் சரி பள்ளிவாசலில் வைக்கப் பெற்றிருக்கும் பூதவுடல் எடுத்துச் செல்லும் தொட்டிலில்தான் பூதவுடலை மைய வாடிக்கு எடுத்துச் செல்வார்கள் அத்துடன் பூதவுடல் உயிர்பிரிந்த 24 மணிநேரத்திற்குள் அடக்கம் செய்யப் பெற்றுவிடும். அது அவர்களின் சமய கலாசாரமாகும். சைவசமயத்தைச் சேர்ந்த ஒருவர் அகாலமரணமடைந்தால் எதுவித சமயகிரியைகளும் செய்யாது, தோத்திரம் பாடி கற்பூரம் தீபம் ஏற்றியபின் தகனம் செய்கின்றார்கள். ஆனால் தற்பொழுது அந்த நிலை மாறி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமயக்கிரியைகள் செய்கின்றனர்.

வீட்டில் ஒருவர் இறக்க நேரிட்டால், இறந்தவுடன் பூதவுடலைச் சுத்தம்செய்து, விபூதி பூசி ஈமைக்கிரியைகள் ஆரம்பிக்கும் வரையும் வீட்டின் ஒருபகுதியில் தெற்குப்பக்கம் தலை இருக்கும்படியாகக்கட்டிலில் படுக்க வைத்து தலை மாட்டில் குத்துவிளக்கேற்றி வைப்பது வழக்கம். உறவினர்கள் யாராவது தூரதேசத்தில் இருந்துவரும் வரை காத்திருப்பதாயின் அப்பூதவுடல் பழுதடையாது இருக்க உரியமருந்துகள் இட்டு பாதுகாத்து வைப்பார்கள். சிலசந்தர்ப்பங்களில் பூதவுடல் வீக்கமடையும். அதனைத் தவிர்ப்பதற்காக ஒரு பெரிய பாத்திரத்தில் நீரை அல்லது அல்லது உப்பை சீலைத்துணியில் கட்டி நெஞ்சில் வைத்தும், ஒருசாக்கில் நெல்லை கட்டி கட்டிலுக்குக் கீழே வைப்பார்கள். வெளிநாடுகளிலும், பெரிய பட்டினங்களிலும் இறந்தவரின் பூதவுடல் மலர்ச்சாலையில் (Funeral Home) வைக்கப் பெறுவதால் அவர்களே அதனைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள்.

சாதாரணமாக பொதுமக்களின் ஈமைக்கிரியைகளை சைவக்குருமாரே செய்து வருகின்றனர். ஆனால் பிராமணருடைய இறுதிக்கிரியைகளை மாத்திரம் பிராமணக் குருமாரே செய்கின்றார்கள். இறுதிக் கிரியையின்போது இறந்தவரின் நெருங்கிய இரத்த உறவினர்கள் கடமைகளைச் செய்வது வழக்கம். இறந்தவர் தந்தையாயின் அவரின் மூத்த மகனும், தாயாயின் இளையமகனும், சிலசந்தர்ப்பங்களில் எல்லா ஆண் மக்களும் இணைந்து கடமைகளைச் செய்வார்கள்.

உடலுக்கு செய்யும் இறுதிக்கிரியைகள் மூலம் அந்த ஆன்மாவானது அந்த உடலைத் தாங்கி நின்றகாலத்தில் தெரியாமல் செய்த தீவினைகள் நீங்கப் பெற்று சாந்தி அடைவதாக ஐதீகம். அத்துடன், தன்னை இயங்க வைத்த ஆன்மாவை பிரிந்ததனால் சவமாக இருக்கும் உடலை சிவமாக்கி அதனை அக்கினியில் சங்கமிக்கச் செய்யும் புனிதகிரியையாகவும் நிகழ்த்தப் பெறுகின்றது.

அதனால் ஆன்மாவின் ஈடேற்றம் கருதி பயபக்தியோடு இறைவனை பிரார்ததனை செய்யக் கூடியவர்களாக ஆண்பிள்ளைகளையும், இரத்த உறவினர்களையும் அனுமதிக்கின்றனர். பெண்பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் அவர்களை சுடுகாடு செல்வதற்கு எமது சமூகம் அனுமதிக்காத காரணத்தினாலும் அவர்கள் விவாகம் செய்து கணவனுடன் இருப்பதாலும் கடமை செய்வதற்கு அனுமதிப்பதில்லை. ஆனால் அவர்கள் எல்லாப் பூஜைகளிலும் கலந்து இறந்தவருக்காக பிரார்த்தனை செய்வார்கள். தற்காலத்தில் ஆண்பிள்ளைகள் இல்லாத சில குடும்பங்களில் பெண்களும் கடமைகள் செய்து உறவினர் அல்லது இரத்த உறவு உள்ள ஒருவர் மூலம் தகனக்கிரியைகளை நிறைவேற்றுகின்றனர்.

நம்முடன் பழகிக் கொண்டிருந்த உறவின் இறப்பானது எம்மில் சடுதியான மாற்றங்களைக் கொண்டு வருகின்றது. இனி அவர்களை இவ் உலகில் காணமாட்டோம் என்ற ஏக்கமும் அவர்களை மேலும் உளரீதியாக பலவீனமடையச் செய்கின்றது. அந்தவகையில் இழப்பினைத் தொடர்ந்து ஏற்படும் எதிர்த்தாக்கம் ஒரேமாதிரியானதல்ல. அது பல்பரிமாண நிலையினைக் கொண்டது. அதனையே நாம் அன்புக்குக் கொடுக்கும் விலையெனக் கொள்ளலாம். இது ஒரு உறவின் பிரிவினால் உலகளாவிய அளவில் ஏற்படுகின்ற வலி தருகின்ற அனுபவம். எல்லோரும் பெரும்பாலும் இந்த இழவிரக்கச் செயற்பாட்டினூடாகத் தங்களுடைய இழப்பினை அது தந்திட்ட தாக்கத்தை எதிர்கொள்கின்றனர்.

இழப்புக்கள் ஏற்படும்போது உடல்ரீதியாக, உளரீதியாக, மனவெழுச்சி ரீதியாக நடத்தை ரீதியாக தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். அந்த வகையில் இழப்புக்கள் ஏற்படும்போது அதிலும் குறிப்பாக எதிர்பாராத இழப்புக்கள் ஏற்படும்போது முதலில் பெரும்பாலும் எவரும் அதிர்ச்சிக்கு உட்படுவர். இழப்பினை மறுதலித்து அதனை ஏற்றுக் கொள்ள முடியாதவொரு நிலையில் காணப்படுவர். அந்த இழப்பினைத் தாங்கமுடியாததால் கடும்கோபத்திற்கு உள்ளாகிக் காணப்படுவர். பிற இடங்களிலும் மக்கள் கூடங்களிலும் இறந்தவரை தேடுவர். அத்துடன் இறந்தவர் உயிருடன் இருப்பது போன்ற உணர்வைக் கொண்டிருப்பதுடன் அவர்களது உருவங்கள் தெரிவது

போலவும் அவர்களுடன் உரையாடுவதைப் போலவும் தோற்றப்பாடுகள் ஏற்படலாம். அவர்களுடைய நினைவுகளில் மனதைப் பறிகொடுத்த நிலையிலே காணப்படுவர்.

இழப்பினைத் தொடர்ந்து மனநெருக்கீடு ஏற்பட்டு அது கவலையாகவும், கண்ணீராகவும் வெளிப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் எல்லா விதமான மகிழ்ச்சியான விடயங்களையும் தொலைத்து விட்டவர்களாகக் காணப்படுவதுடன் கவனக்குறைவு மற்றும் ஆர்வமின்மையினால் பாதிக்கப்பட்டுக் காணப்படுவர். அத்துடன் சினம் கொண்டவர்களாகவும் சமூகத்திலிருந்து ஒதுங்கியும் காணப்படுவர். அவர்களுடைய அன்றாடக் கடமைகளை மேற்கொள்ள முடியாது தவிப்பர். அத்துடன் ஏதோ தர்மச்சம்பவம் நடைபெறப்போகிறது என்ற பயமும் அவர்களிடம் காணப்படலாம்.

இத்தகைய வெளிப்பாடுகள் யாவும் ஒரு இழப்பினைத் தொடர்ந்து சாதாரணமாக ஏற்படலாம். எனவே இழவிரக்கத்தினால் பாதிக்கப்பட்டவர் இத்தகைய படிமுறைகளுக்கு ஊடாகவே இழப்பினை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை அடைவர். மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்க இழப்பினை ஏற்றுக்கொண்டு தனது அன்றாட கடமைகளைச் சகஜமாகச் செய்யத் தலைப்படுவர். 'எமது சமூகத்தில் நாம் மேற்கொள்ளும் ஈமச்சடங்குகள் மற்றும் கிரியைகள் இழவிரக்கத்தை ஆரோக்கியமாக எதிர்கொள்வதற்கு உறுதுணையாக உள்ளன. எமது சமூகத்தில் நாம் மேற்கொள்ளும் இவ்மரணச்சடங்குகள் மற்றும் கிரியைகள் இழவிரக்கத்தை ஆரோக்கியமாக எதிர்கொள்வதற்கு உறுதுணையாக உள்ளது. அவற்றை முறையாக கடைப்பிடிப்பதன்மூலம் இழவிரக்கத்தை நாம் ஆரோக்கியமாக எதிர்கொள்ளலாம்.

மதத்தில் காணப்படும் மரணச் சடங்குக்கிரியைகள் எவ்வாறு மரணத்துயர் நிவாரணியாக செயற்படுகின்றது? மத மரணச்சடங்குக் கிரியைகள் ஒழுங்குமுறையாகச் செய்தவர்கள் இறப்பு துயரத்தில் இருந்து எவ்வாறு மீண்டெழுகின்றனர்?

தமது உறவுகளுக்குரிய சமய மரணச் சடங்குக்கிரியைகளில் பங்குபற்றாதவர்கள் குற்ற உணர்விற்கு உட்படுகின்றனர். மத மரணச்சடங்குக் கிரியைகள் ஒழுங்குமுறையாக புரிபவர்களின் உறவுகளின் பிணைப்பு வலுப்படுத்தப்படுகின்றது. இறந்தவர்களுக்குரிய கிரியைகள் சடங்குகள் புரியாதவர்கள், தற்பொழுதும் இறப்புத் துயரத்துடன் உள்ளனர். அவலச் சடங்கு உடையவர்கள் இறப்புத் துயரத்தில் அதிகம் உள்ளனர். மனம்விட்டுக்

கதறி அழுதல், ஒப்பாரி மூலம் இறப்புத்துயருடன் உள்ளவர்களின் மனப்பாரம் குறைவடைகின்றது. இறப்புவீடு தூய்மையடைகின்றது. குறித்த காலங்களில் மேற்கொள்வதன் மூலம் அது சமூகத்தின் நடைமுறைகளில் ஒன்றாக மாறி பண்பாட்டில் இடம் பெறுகின்றது.

சடங்குகள் மற்றும், அபரக்கிரியைகள் மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல் வேண்டும். உடல் அடையாளம் காணப்படாவிட்டாலும் இத்தகைய சடங்குகளை மேற்கொள்ளல் அவசியம். இறப்பு மற்றும் இழப்பினை இயலுமானவரை உறுதிசெய்தல் ஆரோக்கியமானது. தொடர்ச்சியாக காணாமல் போன உறவுகளைத் தேடி அலைவது பாதகமான நிலைமையைத் தரலாம். உடல் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பங்களில் ஒரு நினைவுப் பொருளை அல்லது கல் ஒன்றினையேனும் வைத்துச் சடங்குகள் நடத்தமுடியும். இறந்தவரின் புகைப்படம் ஒன்றினைப் பெரிதாக்கித் தாம் இருக்கும் முகாம்களிலோ அல்லது உறவினர்கள் வீடுகளிலோ வைப்பதன் மூலம் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல் இலகுவானதாக அமையும். அத்துடன் இழப்பினை ஏற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமையும். இறந்தவர்களின் சார்பாக பொதுவான நினைவுகூரல் நிகழ்வை ஏற்பாடு செய்வது ஆரோக்கியமானதே. இதை ஆலயங்களிலோ அல்லது மண்டபங்களிலோ ஏற்பாடு செய்யலாம். இறந்தவர்கள் நினைவாக ஒரு நினைவுச் சின்னம் அமைத்தல் நன்று. அத்துடன் ஒரு பொதுவான நினைவுத்தூபி அல்லது மண்டபம் அமைத்து அதில் பெயர்கள் பொறிக்கப்படல் அவசியமான ஒன்றாகின்றது.

இறந்த மாணவர்களின், நண்பர்களின் புகைப்படங்களையும் பாடசாலைகளின் பொதுமண்டபத்தில் நிறுவி அஞ்சலிக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதும் ஆரோக்கியமான விடயமே. ஓராண்டு பூர்த்தியின் போது மீண்டும் பெருமளவில் உணர்ச்சிகள் வெளிப்படக்கூடும். இதன்போது இறந்தவர்களை நினைவுகூரல் என்பது முக்கியமான நிகழ்வாக அமைதல் வேண்டும். தளர்வுப் பயிற்சிகளை கையாண்டு மனதை ஒருநிலைப்படுத்தலாம்.

உளவளத் துணைச் சிகிச்சைகளின்போது மேற்கொள்வதுபோல் இழவிரக்கத்துக்கு உட்பட்டவர்களுக்கு ஏற்பட்ட இழப்பினைப் பற்றி உரையாடச் சந்தர்ப்பம் அளித்து அதனைக் கரிசணையுடன் செவிமடுத்தல் வேண்டும். அவர்களை மென்மையாகவும் பாதுகாப்பு உணர்வை வழங்குபவராகவும் நாம் அணுக வேண்டும். இழப்பினைப் பற்றி அவர்களது உறவினர்களுடன் உரையாடுவதற்கு ஊக்கமளிப்பதுடன் அதற்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தவேண்டும். இறந்தவருடன் இவருக்குள்ள உறவுமுறை, நெருக்கம் ஆகியபற்றியும் தொடர்பாடல் செய்தல் நன்று.

குடும்பத்தில் மற்றைய அங்கத்தவர்களைப் பற்றி விசாரித்து அவர்களது நலம் பற்றி உரையாடல் நன்று. இறந்தவரின் புகைப்படத்தினைக் காட்டும்படி கோரவேண்டும். அவர்களது அன்றாட செயற்பாடுகள் பற்றியும் விரிவாக உரையாடவேண்டும்.



இழப்பிற்கு முன்பாக அவர்களது நெருக்கத்தையும் உறவாடலில் ஏற்பட்ட நிகழ்வுகளையும் விரிவாக உரையாட வேண்டும். இழப்பிற்கு உள்ளானவர் சிலநேரம் ஒருவிதக் குற்ற உணர்வுடன் இருப்பர். இதனை ஒரு சாதாரண மனித இயல்பு என்ற அடிப்படையில் புரியவைக்க வேண்டும். மன்னிப்பு கேட்க விரும்பினால் மன்னிப்பு கேட்கவைத்தல். அவரவர் கலாசார விழுமியங்களுக்கு ஏற்றவாறு இறந்தவர் சார்பாக மேற்கொள்ளப்படும் சடங்குகள் மற்றும் கடமைகளை மேற்கொள்ளும்படி தூண்டுதல் வேண்டும். பொதுவான நினைவுகூரல் மற்றும் நினைவஞ்சலிக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், ஏனைய இறுதி மரணச் சடங்குக் கிரியைகளிலும் பங்கு பற்ற ஊக்கமளித்தல் வேண்டும்.

ஒரு குழுவாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தினை நாம் வழங்குதல் மூலம் இழப்பினை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலமையை ஏற்படுத்தலாம்.

(கட்டுரையாளர்: உள நல ஆலோசகர், ஆஸ்திரேலியா. )

2

# ஐந்தாம், எட்டாம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு - ஓர் பார்வை

பேரா. கா. அ. மணிக்குமார்

*‘கல்வி ஏகாதிபத்தியச் சுரண்டல்காரர்களின் தேவைகளுக்கு ஏற்றாற்போல் அல்லாமல், கிராமத்து ஏழைகளின் விருப்பங்களுக்கு ஏற்றாற்போல் புரட்சிகரமானதாக மாற்றப்படவேண்டும்.* - மகாத்மா காந்தி

ஐந்தாம், எட்டாம் வகுப்புகளுக்கு ஆண்டு இறுதியில் பொதுத் தேர்வை கட்டாயமாக்கி மத்திய அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தத்தை தமிழகத்தில் இந்த ஆண்டு முதலே பள்ளிக்கல்வித்துறை அமுல்படுத்தியுள்ளது. முதல் மூன்றாண்டுகளுக்கு பொதுத்தேர்வில் தோற்றாலும் யாரையும் நிறுத்தி வைக்கப்போவதில்லை என அரசு அறிவித்ததன் மூலம் 2022-23 கல்வி ஆண்டிலிருந்து மாணவர்கள் பொதுத்தேர்வில் தோல்வியுற்றால் அடுத்த வகுப்பிற்கு செல்ல முடியாது என்பதை தமிழக அரசு தெளிவுபடுத்தியிருக்கிறது.

தமிழக பள்ளிக்கல்வி அமைச்சர் பின்லாந்து சென்று அங்குள்ள கல்விமுறையை அறிந்து திரும்பிய

பிறகும் அரசால் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டிருப்பது கல்வியாளர்களை வியக்க வைத்திருக்கிறது. முப்பத்து நான்கு நாடுகள் அடங்கிய பொருளாதார ஒத்துழைப்பு - வளர்ச்சிக்கான நிறுவனம் (OCED) சர்வதேச அளவில் மாணவர் திறன் மதிப்பீட்டுத் தேர்வு (PISA) நடத்துகின்றது. 15 வயது மாணவர்கள் இதில் பங்கேற்கலாம். 2015 ஆம் ஆண்டு 75 நாடுகளைச்சேர்ந்த சுமார் ஐந்து லட்சம் மாணவர்கள் கலந்துகொண்ட இத்தேர்வில் அறிவியல் மதிநுட்பத்தில் மூன்றாம் இடத்தையும், வாசிக்க, சிந்திக்க, விமர்சிக்க பெற்றிருந்த திறனில் ஐந்தாம் இடத்தையும் பின்லாந்து பிடித்திருந்தது.

பின்லாந்து கல்வி முறையில் பாராட்டத்தக்க பல அம்சங்கள் உள்ளன. முறையான பள்ளிக்கல்வி ஏழு வயதில் அங்கு தொடங்குகிறது. முதல் ஆறு வகுப்புகள் வரை பெரும்பாலும் ஒரே ஆசிரியர் தொடர்ந்து கற்றுக்கொடுக்கிறார். பத்தாம் வகுப்பு இறுதியில் தான் (16 வயதில்) பொதுத்தேர்வு நடத்தப்படுகிறது. எனவே மாணவர்கள் தேர்வுப்பயம் எதுவும் இன்றி பிடித்த பாடங்களை சிறப்பாக கற்க முடிகிறது.

நான் பள்ளியில் படித்த காலத்தில் பதினோராம் வகுப்பு முடிவில் மட்டுமே பொதுத்தேர்வு (SSLC) நடத்தப்பட்டது. புகுமுக வகுப்புக்குப்பின் எந்த துறையில் வல்லுனர்களாக மாணவர்கள் விரும்புகிறார்கள் என்பதை தீர்மானிக்க அப்போதும் ஒரு பொதுத்தேர்வு தேவைப்பட்டது. ஆனால் இளங்கலை, அறிவியல் பட்டப்படிப்பில் சேர்ந்தால் அன்று முதலாம் ஆண்டு பல்கலைக்கழக தேர்வு கிடையாது. மொழி மற்றும் துணைப்பாடங்களுக்கான தேர்வுகள் இரண்டாம் ஆண்டில் நடத்தப்படும். முதன்மைப்பாடத்துக்கான (Main Subject) தேர்வுகள் அனைத்தும் மூன்றாம் ஆண்டிலேயே நடத்தப்பட்டன. முதலாம் ஆண்டில் தேர்வு ஏதும் இல்லாததால் தமிழ் மொழியில் பள்ளிக்கல்வி முடித்தவர்கள் ஆங்கில மொழியில் படிப்பதற்கும் எழுதுவதற்கும் போதிய பயிற்சியை பெற அவகாசம் கிடைத்தது. அதுபோல் இறுதியாண்டில் முதன்மை பாடத்திற்கான அனைத்து தேர்வுகளையும் எழுதியதால் படித்த பாடம் பற்றிய முழுப்புரிதலும் இருந்தது.

தற்போது பட்டப்படிப்பில் சேர்ந்த நான்கு மாதங்களுக்குள் செமஸ்டர் முறையில் தேர்வு எழுத வேண்டிருப்பதால் ஆங்கிலவழி படிப்பை தேர்ந்தெடுத்தாலும் தமிழில் தேர்வு எழுதுகின்றனர். பலர் ஆங்கில மொழியில் தேர்ச்சிபெற முடியாமல் பட்டம் பெறமுடியாத நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். புதிய ஆய்வு முடிவுகள், கண்டுபிடிப்புகள் ஆங்கில புத்தகங்களில் முதலில் இடம்பெறுவதாலும், அத்தகைய புத்தகங்கள் தமிழில் உடனடியாக

மொழிபெயர்க்கத் தேவையான ஏற்பாடுகள் இல்லாததாலும் தமிழில் தேர்வு எழுதுகின்ற மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் எளிதில் வெற்றி பெற முடிவதில்லை.

முதுகலைபட்டப்படிப்பிலும் நான் பயின்றபோதும் முதலாம் ஆண்டில் பல்கலை தேர்வு கிடையாது. இரண்டாம் ஆண்டின் இறுதியில்தான் அனைத்து படங்களுக்கான தேர்வுகளும் நடத்தப்பட்டன. இன்று தவணை முறையில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நான்கு படங்களுக்கான தேர்வு எழுதி படித்தவற்றை உடனேயே மறந்துவிடுகிறார்கள். ஆதலால் செட்/நெட் தேர்வுகளில் அவர்கள் தோல்வியுறுகிறார்கள்.

இன்று பள்ளி - கல்லூரி தேர்வு முறை ஒரு மாணவரின் மனப்பாட சக்தியை மதிப்பிடவே பயன்படுகிறது. மாணவரின் சிந்தனை, படைப்பு, ஆய்வு மற்றும் ஆக்க திறன்களை மதிப்பிடுவதாக இல்லை. மேலும் ஏற்றத்தாழ்வு மிக்க சமுதாயத்தில் கிராமப்புறங்களில் வாழும் ஏழை விவசாயி, சிறு வியாபாரி, கூலித்தொழிலாளி வீட்டுக்குழந்தைகளுக்கும் - நகர்ப்புறங்களில் வாழும் தொழிலதிபர், பெருவணிகர், மருத்துவர், பொறியாளர், வழக்கறிஞர், பேராசிரியர், அரசு அதிகாரிகள் வீட்டு குழந்தைகளுக்கும் அறிவிலும் செயல்திறனிலும் பெருத்த இடைவெளியை கடந்த முப்பது ஆண்டுகளில் அரசு பின்பற்றிய கல்விக்கொள்கை உருவாக்கியுள்ளது. எனவேதான் நீட் தேர்வு கிராமப்புற ஏழை எளிய குடும்பத்திலிருந்து வருபவர்களின் நலனுக்கு எதிரானது என கல்வியாளர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் கூறுகின்றனர்.

மாறுபட்ட குடும்ப சூழலிலிருந்து வரும் இரு மாணவர்கள் படிக்கும் பாடங்கள் ஒன்றானாலும் ஒரே மாதிரியான அறிவையும் செயல்திறனையும் பெறமுடியாது என்பதை ஆப்பிரிக்கா - அமெரிக்கா அறிவுஜீவி ‘டூபாய்ஸ்’ கறுப்பினத்தை சேர்ந்த மாணவனை வெள்ளையினத்தை சேர்ந்த ஒருவனோடு ஒப்பிட்டு விளக்குகிறார்:

> *‘‘இங்கு இரு மாணவர்கள் வாழ்க்கைக்கான கல்வி பெறுகின்றனர். இருவரும் ஆறு மணிநேரம் பள்ளியில் உள்ளனர். மூன்று மணி நேரத்தை வீதிகளில் கழிக்கின்றனர். மீதமுள்ள பதினைந்து மணி நேரம் அவர்கள் வீட்டில் இருக்கிறார்கள். படிக்கும் கல்வி இருவருக்கும் ஒன்று. ஆசிரியர்களும் ஒன்று. ஆனால் ஒருவன் ஏழ்மையோடு விரும்பத்தகாத சேர்க்கைகளுடன் சேர்ந்து விளையாடுவது தெருக்களின் சந்துக்களில். மற்றவனோ வெளுத்த ஆடை உடுத்தி நன்னடத்தை கொண்டவர் மத்தியில் வாழ்கின்றான். முன்னவன் வீடு இருளடைந்து, மகிழ்ச்சியற்று வெறுமையாக உள்ளது. மற்றவன் வீடோ விசாலமாக, மகிழ்ச்சியுடன்,*

*புத்தகங்கள், படங்கள், இசை என அனைத்தும் அடங்கியதாக உள்ளது. ஒருவனது பெற்றோர் படிப்பறிவு இல்லாதோர். வறுமையின் வாட்டத்தால் எதற்கெடுத்தாலும் ஆத்திரப்பட்டு திட்டுபவர்கள். மற்றவனுக்கோ முறையாக வழிநடத்தி, ஆறுதல் சொல்லி, நெறிப்படுத்தும் பெற்றோர்கள். பத்தாண்டு பயிற்சிக்குப்பிறகு அறிவிலும் திறமையிலும் இவ்விருவரும் ஒன்றாக இருப்பார்கள் என எதிர்பார்க்கிறீர்களா?"*

நாங்கள் பள்ளியில் படித்தபோது டியூஷன் படிப்பது அவமானமாகக் கருதப்பட்டது. இன்றைக்குக்கூட சீனா, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் எதிலும் டியூஷன் என்று ஏதும் கிடையாது என்கிறார் அமர்த்திய சென். தரம் என்றால் அதிக பாடச்சுமை இருக்கவேண்டும் என தவறாக பெற்றோர்கள் கருதியதால் ஏற்பட்ட விளைவு இது. புகுமுகவகுப்பில் நான் படித்த அறிவியலை என் மகன் ஏழாம் வகுப்பில் படித்தான். நான் ஒன்பதாம் வகுப்பில் கற்ற கணிதத்தை ஐந்தாம் வகுப்பு மாணவர் இன்று கற்கின்றனர். படிக்காத பெற்றோர்கள் மற்றும் பணியில் இருக்கும் படித்த பெற்றோர் ஆசிரியர் கொடுக்கும் வீட்டு பாடத்தை எழுதிட தங்கள் குழந்தைகளுக்கு உதவமுடியாததால் டியூஷனுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இத்தகைய வசதியை செய்துகொடுக்க பணவசதியற்ற பெற்றோர்களால் முடியாது. ஐந்தாம் வகுப்பு இறுதியில் பொதுத் தேர்வு என்றால் தொடக்க கல்வியிலேயே டியூஷன் தொடங்கிவிடும். தேர்வுக்கான கட்டணம் வேறு. தாங்குவார்களா ஏழைமக்கள் ?

இந்தியாவில் தொடக்கப்பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் எண்ணிக்கை 2000-01-இல் 157 மில்லியன் ஆக இருந்ததாகவும் அது 2017-18 இல் 189 மில்லியன் ஆக உயர்ந்திருந்ததாகவும் உலக வங்கி தெரிவிக்கிறது. அதேநேரத்தில் மூன்றாம் அல்லது நான்காம் வகுப்பில் படிக்கும் பட்டியல் சமூகப்பிரிவு (SC) 13 சதவீதத்தினர்க்கும், இஸ்லாமிய குழந்தைகளில் 25 சதவீதத்தினர்க்கும், பழங்குடி மாணவர்களில் (ST) 29 சதவீதத்தினர்க்கும் ஒரு பாடத்தை எழுத்துக்கூட்டி வாசிக்கமுடியாது - இதர சமூகத்தினரில் எழுத்துக்கூட்டி வாசிக்கமுடியாதவர்கள் எட்டு சதவீதத்தினர் மட்டுமே என்ற தகவலையும் நாம் பெறுகிறோம்.

முறையான கல்வி ஆறு வயதில் தொடங்க வேண்டும் என கல்வி உரிமைச்சட்டம் கூறுகிறது. ஆனால் இந்தியாவின் 26 மாநிலங்களில் ஐந்து வயதில் குழந்தைகள் ஒன்றாம் வகுப்பில் அனுமதிக்கப்படுகின்றனர். ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் நடத்திய ஓர் சமீப ஆய்வின் படி ஐந்து வயதில் கிண்டர் கார்ட்டனில் சேர்க்கப்பட்ட குழந்தைகளைவிட ஆறு வயதில் சேர்க்கப்பட்டவர்கள்

கற்றலில் மேன்மை பெற்றிருந்தனர். ஓர் ஆண்டு கழித்து பள்ளிக்குச்செல்லும் மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறுவது மட்டுமின்றி சுயகட்டுப்பாடுடனும் காணப்பட்டதாக அவ்வாய்வு தெரிவிக்கிறது.




அனைத்தையும் விட அதிர்ச்சி தருவது 2014 தேசிய கணக்காய்வு அலுவலக (NSSO) அறிக்கை. அதன்படி பள்ளியில் சேர்ந்தவர்களில் 37 சதமான ஆண் குழந்தைகளும், 39 சதமான பெண் குழந்தைகளும் தொடக்கக்கல்விக்குப்பின் தொடர்ந்து பள்ளியில் படிக்கவில்லை. ஆண்பிள்ளைகள் கூலி வேலைக்கு சென்றும் பெண்பிள்ளைகள் வீட்டுவேலை செய்தும் குழந்தை உழைப்பாளர்களாகியுள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடிய நிலையை பொதுத்தேர்வு முடிவு உருவாக்கும் என்பதால் மத்தியஅரசு கல்வி உரிமை சட்ட திருத்தத்தை திரும்பப்பெற்று தொடக்க - நடுநிலை பள்ளிகளில் பொதுத்தேர்வை ரத்து செய்து கல்வி அனைவருக்கும் இலவசமாக, தரமாக சென்றடைய உத்திரவாதம் செய்யவேண்டும். அதுவரை 'கல்வி என்பது அனைவருக்குமான உரிமை. விசேஷ வர்க்க சலுகை கிடையாது' என்ற டாக்டர் ராதாகிருஷ்ணன் வார்த்தைகளை நினைவில் கொண்டு மக்கள் கோரிக்கையை வென்றெடுக்க உறுதி ஏற்போம்.

3

# இன அழித்தொழிப்பிற்குக் கட்டியம் கூறும் குடியுரிமை மறுப்புச் சட்டம்

## பேரா. இரா. முரளி

இந்திய அரசியலமைப்பின் ஆணிவேராகக் கருதப்பட்ட மதச்சார்பின்மை இன்று ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது. குடியுரிமைத் திருத்த சட்டம் குறித்து ஏராளமான விவாதங்கள் ஊடகங்களிலும், வலைதளங்களிலும் பகிரப்பட்டு வருகின்றன. முஸ்லீம்களைத் தவிர, ஈழத்தமிழரைத் தவிர மற்ற அனைவரும் அரவணைக்கப்படுவார்கள். ஆதரவு நல்கப்படுவார்கள் எனும் இந்த மனித உரிமைக்கு எதிரான சட்டத்தை எதிர்த்து மக்கள் அணி திரண்டு போராடி வருகின்றனர். அதற்கு எதிர்வினையாக எல்லா பத்திரிகைகளிலும் மத்திய அரசு குடியுரிமைத் திருத்தச் சட்டம் யாரையும் பாதிக்காது என்ற விளக்கத்தை விளம்பரமாக நாடு முழுவதும் வெளியிட்டிருக்கிறது. அது மட்டுமின்றி தொலைகாட்சி ஊடங்கங்கள் இச்சட்டத்திற்கு எதிரான ஒளிபரப்புகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. இதுவரை ஆணவமாகவும், மக்களின் எதிர்ப்பை அலட்சியமாகவும் கையாண்டு வந்த மத்திய அரசை மக்களின் எழுச்சியும், ஒவ்வொரு மாநில வீதிகளிலும் உண்டாக்கும் எதிர்ப்புப் பேரலைகளும் நடுங்கச்செய்திருக்கின்றன என்பதை உணர்த்துகிறது.

இந்திய நாட்டின் குடியுரிமை என்பதை மதத்தின் அடிப்படையிலே வரையறுப்பது ஆட்சியாளர்களுக்கும், வலதுசாரிகளுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடும். ஆனால் மக்கள் மிகுந்த கோபத்துடன் ஆங்காங்கே எதிர் வினையாற்றத் தொடங்கிவிட்டனர். இந்த எதிர்வினை ஏதோ இஸ்லாமியர்களாலோ அல்லது எதிர்க்கட்சியினர்களாலோ உருவாக்கப்பட்டவை அல்ல. மாறாக மக்கள் புரிதலின் அடிப்படையில், உணர்வுகளின் அடிப்படையில் உருவான எழுச்சி ஆகும். மாட்டிறைச்சி உண்பதற்காக மனிதர்களைக் கொல்லுவதும், கிருத்துவ மத ஆலயங்களை குறிவைத்து தாக்குவதும் நடந்து வந்து கொண்டிருந்த வேளையிலே, இப்படி இலட்சக்கணக்கானோர் தீப்பந்தங்களுடன் வீதிகளில் மதச்சார்பின்மைக்காகக் குரல் எழுப்பி நிற்பது என்பதே இந்திய ஜனநாயகத்தின் வெற்றி மட்டுமல்ல, எதிர்கால இந்தியாவிற்கான நம்பிக்கை ஒளி என கருதலாம்.

ஆனால் எதிர்ப்புகள் வந்தாலும், அந்த எதிர்ப்புகளின் நியாயத்தை சற்றும் மதிக்காமல், மிதித்துவிட்டு மதவெறியை அரசியல் இலாபத்திற்காக நாட்டிலே உருவாக்கும் நிலை மத்திய அரசிடம் காணப்படுகிறது. இது மிகவும் ஆபத்தானது.

எப்போதெல்லாம் வளமான சிந்தனைகளும், ஜனநாயக மாண்புகளும் முடக்கப்படுகின்றதோ, அப்போதெல்லாம் பழமைவாதம் தனக்கென ஒரு தளத்தை உருவாக்கிக் கொள்ளும். அதுவே பாசிசத்தின் அடிப்படை என்று அந்தோனியா கிராம்சி சொன்னதை நாம் நினைவு கூறுவது இன்று மிகவும் அவசியம்.

- பாசிசம் இனவெறியின் மீது கட்டமைக்கப்படும் அரசியல் அதிகாரமாகும்.

- பாசிச அதிகாரத்திற்கு நீதியோ, சமூக நீதியோ, நியாயம் என்பதோ எதுவும் தெரியாது.

- பாசிசம் இனத்தின் அடிப்படையில் பெரும்பான்மையை ஒன்று சேர்க்கும்.

அதனுடைய முக்கியமான செயல்பாடு என்பது சிறுபான்மையினரைக் குறி வைத்து தாக்குவதாகத்தான் இருக்கும். அப்படித்தான் வரலாறு நமக்கு சாட்சியம் கூறுகிறது

**இறுதிக் கட்டம் இன ஒழிப்பே!**

பாசிசத்தின் இறுதிக் கட்டம் என்பது இன அழித்தொழிப்பு ஆகும். பாசிசம் அதற்கான கருத்தியலையும் பலப்படுத்தி வைக்கும். இதற்கான முதல் கட்டமாகத்தான் பா.ஜ.க. அரசு இந்துத்துவா என்ற பேரினவாதத்தைப் பகுத்தறிவு மிகவும் குறைவாக காணப்படும் இந்த

நாட்டிலே தொடர்ந்து விதைத்து வருகிறதோ என்று கருதத்தோன்றுகிறது. அவர்களின் இந்துத்துவா எனும் விதையில் முளைத்த விஷச் செடிகள் இன்று கருத்தியல் ரீதியாக இந்துத்துவாவைப் பரப்புரை செய்வதை நாம் காணமுடிகிறது. இந்த விஷம் வேகமாக எளிதாகப் பரவக்கூடியப் பண்பாட்டுச் சூழல் தொடர்ந்து உருவாக்கப்பட்டு வருவதையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது. வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மற்றும் பத்திரிக்கைகள் எல்லாம் மத நம்பிக்கைகளை எப்போதுமே கேள்வி கேட்க அல்லது விமர்சனம் செய்ய முயற்சியே செய்ததில்லை.

மாறாக ஒன்றுக்கு நூறாக ஆயிரம் கடவுளரையும், இலட்சம் மத குருமார்களையும் அவை தூக்கிப்பிடிக்கின்றன. இந்தப் பல்லக்கில்தான் ‘இந்துத்துவா’ நாட்டிலே பவனி வருகிறது. பெரும்பாலும் அதிக அளவிலான பொய்த் தகவல்களை உருவாக்கி, அதன் அடிப்படையிலே பாமர மக்களின் மனதில் வெறுப்பு உணர்வை உண்டாக்குவதே இந்த அரசின் செயல்பாடாக இருக்கிறது.

ஜெர்மனியில், 1933 இல் இப்படித்தான் நாஜிக்கள் குடிமக்கள் கணக்கெடுப்பில் இரண்டாம் தர குடிமக்களாக ஆக்கப்பட்டார்கள். 60 இலட்சம் நாஜிகள் குடியுரிமை இழந்தார்கள். பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் என்று பெரும் பிரிவினை கோட்பாடு உருவாக்கப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக இலட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டார். இலட்சக்கணக்கான பேர் வதை முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். நினைத்துக்கூட பார்க்கவில்லை! இந்தியாவிலும் அப்படிப்பட்ட முகாம்கள் கட்டப்படும் என்று.

பெங்களூருவிலும், அசாமில் இன்னும் சில மாநிலங்களிலும் குடியுரிமை மறுக்கப்பட்டவர்கள் அடைக்கப்படுவதற்கான முகாம்கள் தயாராகி வருகின்றன. இவ்வளவு வேகமாக அவை கட்டப்பட்டு முடிக்கப்படும் யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அப்படி எந்தச் செயல்பாடுகளும் இல்லை என்று பிரதமர் அப்பட்டமாக பொய்பேசி வருகிறார். அனால் அரசு பல மாதங்களுக்கு முன்பே திட்டமிட்டு அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்து கொட்டடிகளைக் கட்டிவருகின்றது. இங்கேயே பல ஆண்டுகளாக வாழ்ந்து மண்ணின் மைந்தர்களாகிப் போனவர்களை அடைக்க ஒரு பெரும் சிறைச்சாலையா? போராட்டங்கள் போர் போல வெடிக்கின்றன.

மனித உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. பாசிச சித்தாந்தம் கொண்ட அரசு இதைப் பற்றி கவலைப்படுவதில்லை.

**இன அழித்தொழிப்பு**

இனப்படுகொலைகள் கண்காணிப்பகம் என்ற அமைப்பின் தலைவர் கிரகரி ஸ்டன்டோன் என்பவர் இனப்படுகொலைகள் ஒரு

நாட்டில் நடைபெறுவதற்கான 10 படிநிலைகளை விளக்கியிருக்கிறார். மக்களை வகைபடுத்துதல், முத்திரை குத்துதல், பிரித்தல், அவமானப்படுத்துதல், இரண்டு பிரிவாக பிரித்தல், மதத்தின் மற்றும் இனத்தின் பெயரால் ஒடுக்குதல், ஒதுக்கிவைத்தல் இறுதியில் உயிரை எடுத்தல் என ஒவ்வொரு கட்டமாக விளக்குகிறார். அதில் முதல் கட்டம் மதத்தின் பெயராலும், இனத்தின்பெயராலும் மனிதர்களைப் பிரித்து பட்டியலிடுவது என்பது ஆகும்.

அது தற்பொழுது நிகழ்ந்திருக்கிறது. தமிழர்கள் இனத்தின் அடிப்படையிலும் இஸ்லாமியர்கள் மதத்தின் அடிப்படையிலும் வகைப்படுத்தப்பட்டு பொதுமக்கள் என்ற சொல்லாடலிலிருந்து பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி இரண்டாம் தர குடிமக்களாக பிரிக்கப்பட்ட அவர்களுக்கு வெவ்வேறு பெயர்களில் அடையாளங்கள் வழங்கப்படும்.

இரண்டாம் நிலைகுடிகள் அணியும் உடைகளினாலும், இன்ன பிற வாழ்வியல் செயல்பாடுகளினாலும் அடையாளம் காணப்பட்டு, பிடிக்கப்படுவார்கள் என்று ஸ்டண்டோன் கூறுகிறார். அப்படித்தானே இங்கேயும்? உடைகளைக் கொண்டும், உண்ணும் உணவைக் கொண்டும் இவர்கள் அவர்களை அடையாளப்படுத்துகிறார்கள். வன்முறையாளர்களை, அவர்கள் உடைகளைக் கொண்டே அடையாளம் காணலாம் என்று மோடி கூறியிருப்பது இங்கே பொருந்துவதைக் காணலாம்.

பிரிவினை உணர்வை பலப்படுத்த இம்மாதிரி அடையாளங்கள் வலதுசாரிகளுக்குத் தேவைப்படுகிறது. நானும் கூட சமூக ஊடகங்களில் தொடர்ந்து ஒரு விஷயத்தை கவனித்து வருகிறேன். இந்தியாவில் குடியுரிமை மறுக்கப்பட்டால் என்ன ஆகும் என்று வலதுசாரிகள் தரப்பிலிருந்து பதியப்படும் பதிவுகள் தான் அவை. நீங்கள் குடியுரிமை மறுக்கப்பட்டால், நாடு கடத்தப்படமாட்டீர்கள். மாறாக உங்களுடைய உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்படும். நீங்கள் வீடு வாங்க முடியாது, ஓட்டு போட முடியாது, வங்கி கணக்கு வைக்க முடியாது, ரேஷன் கார்டு வைக்க முடியாது, பாஸ்போர்ட் எடுக்க முடியாது, இறுதியாக கொட்டடிகளில் அடைக்கப்பட்டு வதைபடுவீர்கள் என்று பல முடிவுகளை அவர்கள் பட்டியலிட்டு பரப்பி குடியுரிமை சட்டத்தை எதிர்ப்பவர்களைப் பயமுறுத்துகிறார்கள். இம்மாதிரி அச்சுறுத்தல்கள் முக்கியமான ஒரு செயல்பாடாக பாசிசத்தை நிறுவுவதில் காணப்படுகிறது.

இனப்படுகொலைகளுக்கான மூன்றாவது முக்கிய கட்டமாக இதை ஸ்டண்டோன் குறிப்பிடுகிறார். உங்களுக்கான மேலே குறிப்பிட்ட எல்லா உரிமைகளையும் மறுப்பது கண்டிப்பாக இங்கு

நிகழத்தான் போகிறது. நாஜி ஜெர்மனியிலும் இப்படித்தான் யூதர்களுக்கான உரிமைகள், வேலைவாய்ப்புக்கள், இருப்பிடங்கள் என்று எல்லாமே மறுக்கப்பட்டன. இப்படித்தான் மியன்மாரில் ரோகிங்கியா முஸ்லிம்கள் நாடுகளற்றவர்களாக ஆக்கப்பட்டனர்.

பாசிசத்தின் அடுத்தக் கட்டம் மனிதன் என்ற நிலையிலிருந்து சட்டத்திற்குப் புறம்பான குடியேறி என்ற அடையாளம் குடியுரிமை இழப்பவர்களுக்கு வழங்கவதாகும். இதில் கவனிக்கவேண்டிய ஒரு முக்கிய அம்சம் உள்ளது. கொஞ்சம் பேர் உண்மையிலேயே சட்டத்திற்கு புறம்பாக குடியேறியிருப்பார்கள். ஆனால் அவர்களுடன் பாசிச அரசு தாங்கள் வெறுப்பிற்கு உள்ளானாவர்களையும் பெரிய எண்ணிக்கையில் வெளியேற்றும். செந்த நாட்டிலேயே பலர் அகதிகளாகும் அபாயம் உள்ளது. அசாமில் இராணுவத்தில் பணியாற்றியவர்கள் முதல், சட்டசபை உறுப்பினர்கள் வரை பலர் இப்போது குடியுரிமை இழந்துள்ளனர் என்பது இதற்கு சான்று.

குடியுரிமை என்பது மூச்சுக்காற்றுப் போன்றது. அதை மறுக்கும் போது அந்த மூச்சு நின்று பிணமாக ஆவது போன்ற ஒரு நிலைதான் இந்த நிலை. இந்த நிலைக்கு முஸ்லீம்களைத் தள்ளுவதற்குதான், குடியுரிமை திருத்த சட்டத்தை இன்று மத்திய அரசு உருவாக்கியுள்ளது என்பது மிகவும் வேதனைக்குரிய விஷயம். குடியுரிமை மறுக்கப்பட்ட மக்களை மிகவும் மோசமானவர்களாகவும், தரம் குறைந்தவர்களாகவும் தங்களுடைய வெறுப்பு பிரகடனங்கள் மூலம் ஆக்கி வைப்பது என்பது இனப்படுகொலைக்கான மற்றுமொரு முக்கிய நிலையாகும்.

அடுத்த கட்ட செயல்பாடு என்பது, இனத்தின் பெயரால் வெறியை ஊட்டி மக்களைத் திரட்டி வைப்பதாகும். இந்த இனவெறி ஊட்டுதல் என்பது பெரும்பாலும் பரப்புரைகளாலும், வெகுஜன ஊடகங்கள் மூலமும், சமூக ஊடகங்கள் மூலமும் செய்யப்படுகிறது. இப்படி மக்களை உருவேற்ற ஆயிரக்கணக்கானோர் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். அதுமட்டுமின்றி மாற்று கருத்துக்கள் தெரிவிப்பது முற்றிலுமாகத் தடுக்கப்படும்.

சிறுபான்மையினர் குறிப்பாக இஸ்லாமியர் நாட்டு சுதந்திரப் போராட்டத்திற்கு அளித்தப் பங்களிப்புகள் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. வரலாறு திரிக்கப்படுகிறது. இஸ்லாமியரை மாற்றானாக சித்தரித்தால்தான் இனவெறியை உண்டாக்க முடியும். பகுத்தறிவை உருவாக்கும் கல்வியை பின்தள்ளிவிட்டு, தேசப்பற்று என்ற வெற்று கருத்தியலை உருவாக்கி அதை திரிக்கப்பட்ட வரலாறுகள் மூலம் இளம் தலைமுறையின் மண்டையில் ஏற்றும் பணி இங்கு செவ்வனே நடைபெறுகிறது. சமூக ஊடகங்களில்

இஸ்லாமியருக்கு எதிரான பொய்தரவுகளும், கட்டுக்கதைகளும் இளம்தலைமுறையினரை வெறுப்பு அரசியலின்பால் தள்ளும் பணியைச் செய்து வருகின்றன. தேசிய இனக்குழுக்கள் பற்றிய எந்த ஒரு புரிதலையும் உருவாக்கும் பாடங்கள் கல்வித் திட்டத்தில் இல்லை. பன்மியம் என்பது தேசத் துரோகமாகக் காணும் பயிற்சி தொடர்ந்து அளிக்கப்படுகின்றது. அதற்கான நபர்கள் கல்வியின் அனைத்து அதிகார மையங்களிலும் ஏற்கனவே நியமிக்கப்பட்டுவிட்டார்கள்.

இவ்வற்றின் ஒட்டுமொத்த சாரமே இன்று குடியுரிமை கெடுக்கும் சட்டம் ஆகும். இதன்மூலம் சட்டப்பூர்வமான ஒரு இனத்தையே இல்லாமல் செய்யும் ஆயுதம் உருவாக்கப்பட்டுள்ளது. இது இஸ்லாமியருக்கு மட்டும் எதிரானது அல்ல. மானுடத்திற்கு எதிரானது. மனிதநேயத்திற்கு எதிரானது என்பதே உண்மை.

**மாற்றானாக்கப்படும் மண்ணின் மைந்தர்கள்**

நாட்டில் நிர்வாக சீர்கேடுகளால் உண்டாகும் பொருளாதார சிக்கல்கள், பாதுகாப்புச் சிக்கல்கள், வேலையின்மை, விலைவாசி உயர்வு போன்ற பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இந்த இரண்டாம் நிலை குடிமக்கள்தான் காரணம் என்றும், இவர்கள் நாட்டிற்கு துரோகிகள், இனத்துக்கு துரோகிகள் என்றும் அடையாளப்படுத்தப்படும் மோசமான சதிவேலை நடைபெறும் என்கிறார் ஸ்டண்டோன். இதையெல்லாம் விளக்கியவர் இந்தியாவை மனதில் கொண்டு விளக்கவில்லை. ஆனால் அவை அனைத்தும் இன்றைய நிலைக்கு மிகவும் பொருந்துகின்றன.

மத அடையாள அடிப்படையில் இனவெறியை ஊட்டி, பிரச்சினைகளுக்கான உண்மைக் காரணங்களை மறைத்து, ‘மாற்றான்‘தான் இங்கு பிரச்சினையே என்ற மனோபாவத்தை அடுத்த தலைமுறையினருக்கும் ஊட்டி வளர்க்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது இந்தியாவிற்கான மொத்த சவால் எனலாம்.

இனப்படுகொலைகளின் இறுதிக்கட்டமாக உரிமை மறுப்புகள் மட்டுமின்றி மக்களே எதிரிகளை கொல்லுவது என்பதும், அரசாங்கம் தாங்கள் வகுக்கப் போகும் சட்டத்தின் அடிப்படையில் என்று கூறி பலரின் உயிர்களை அழிக்கப் போவது என்பதும் நடைபெறும். இதை நினைத்துப் பார்க்கவே மனம் வெந்து நடுங்குகிறது.

இதனடிப்படையில்தான் நாம் குடியுரிமையையும், குடிமக்கள் பதிவேட்டையும் புரிந்து கொள்வது சரியாக இருக்கும்.

ஜனநாயகம் என்ற சொல்லும், மதச்சார்பின்மை என்ற கருத்தியலும் இரண்டு மாபெரும் பூதங்களாக பா.ஜ.க விற்குத் தெரியும். காரணம், அவர்களுடைய ‘இந்துத்துவா’ எனும் பாசிசக் கொள்கைக்கு இவ்விரண்டும் சரியான எதிரிகள்.

இந்த இரண்டையும் ஒழிப்பதற்குத்தான் அவர்கள் பல வழிகளில் பாடுபடுகிறார்கள். ஜனநாயகமும், மதச்சார்பின்மையும், சமூகநீதிக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்தமான நீதியான சமூகத்திற்கான இரண்டு தூண்கள் ஆகும். இவை பாசிசத்திற்கு எதிரானவை. எனவேதான் இவற்றை ஒழிக்கும் வழிகளில் பிரதான வழிகளாக குடிமக்கள் தொகை கணக்கெடுப்பு என்பதும், குடியுரிமை சட்டம் என்பதும் மத்திய அரசால் பயன்படுத்தப்படுகிறது.

இப்படித்தான் ஆதார் அட்டை நாடு முழுவதும் வலுக்கட்டாயமாக எல்லோர் மீதும் திணிக்கப்பட்டது. கைரேகைகள் உட்பட எல்லா தகவல்களும் இணைக்கப்பட்டன. ஒருவருடைய தொலைபேசி எண்ணும், ஆதார் எண்ணும் குடிமக்களின் அடையாளமானது. எப்பொழுதும் தொடர் கண்காணிப்பில் எல்லோரும் இருப்பதற்கான வேலையை இந்த அரசு செய்து முடித்தது என்பதே உண்மை. அரசுக்கு இந்தப்பாசிச பிசாசுக்கு எல்லோரையும் அடிமைப்படுத்தியது போதவில்லை. பிரிவினையின் மூலம் தங்களுக்கான ஆதரவு சக்தியைப் பெருக்கி வைத்துக் கொண்டால்தான் இன்னும் பல ஆண்டுகளுக்கு ஆட்சி செய்யமுடியும் என்பதே அவர்கள் கணிப்பு. இனவெறி என்பது மிக எளிதாக பரவக் கூடிய விஷம்.

நாம் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருகிறோம். இன்னும் ரேஷன் கார்டுகூட வாங்க இயலாத நிலையில் இருக்கும் இலட்சக்கணக்கான பழங்குடிகளும், ஏழை மக்களும் இப்பொழுது அரசாங்கத்திற்கு முன் தங்களுடைய குடியுரிமையை தாங்களாகவே நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். ஒவ்வொரு குடிமகனும் நான் இந்தியன்தான் என்று அதிகாரிகள் முன்னால் நிரூபிக்க வேண்டும். நீங்கள் காட்டும் அடையாளங்களை அதிகாரவர்க்கம் ஏற்குமா என்பது உறுதியாகத் தெரியவில்லை. அவர்கள் வைப்பதுதான் அங்கு சட்டம். ஒரு வேளை இதற்கும்கூட இலஞ்சம் பெறப்படலாம்.

குடியுரிமை அட்டை இருந்தால்தான் இனி மூச்சுவிட முடியும் என்று யாரேனும் சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று ஓடிச்சென்று அதை எப்படியாவது பெற வேண்டும் என்ற மன நிலைதான் பொதுபுத்தியில் ஊறியிருக்கிறது. இந்த மனநிலையிலிருந்து மக்கள் மாற வேண்டிய கட்டாயம் உள்ளது.

அப்படி அவர்கள் மனம் மாற்றம் கொண்டு தங்களுடைய மாண்பை தாங்களே தற்காத்துக்கொள்ள முனைந்திருப்பதையும் காணமுடிகிறது. இது நமது மாண்பை சோதிக்கும் காலம். இந்திய குடிமக்கள் பதிவேடு கணக்கெடுப்பின் மூலம் எத்தனை கோடிப்பேர் சட்டத்திற்குப் புறம்பான குடியேறிகளாக ஆக்கப்படவிருக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. ஒருவேளை நீங்கள் அடிமைச் சாசனம்

எழுதிக் கொடுக்கத் தயாராக இருந்தால், நீங்கள் குடிமகனாக ஆவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றாலும்கூட, நீங்கள் 'மாற்றானாகவே' அடையாளம் காணப்பட்டு இன ஒடுக்கல் மட்டுமல்ல, இன ஒழிப்பிற்கு உரிய பட்டியலில் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அப்படி ஒரு மிகக் கொடிய சம்பவம் நிகழக்கூடாது என்றால் அது பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே உருவாக்கப்படவேண்டும்.




எப்படியும் நீதிமன்றங்கள் நீதியை வழங்கி விடும் என்ற ஒற்றை நம்பிக்கைதான் இன்னும் பலரை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. பாசிசத்தின் பிடியில் ஊடகங்களும், போலீசும், இராணுவமும் மெல்ல மெல்ல ஆட்பட்டுவரும் வேளையில் நீதிமன்றங்களும் மாறத் தொடங்கியுள்ளன. அதிகார வலையில் சிக்கத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் மக்களின் மாபெரும் எழுச்சி மட்டுமே பாசிசவெறி கொண்ட கருத்தியலை உடைத்து நொறுக்க முடியும் என்பதில் ஐயமில்லை. ஹர்ஷ் மந்தர் எனும் மனித உரிமைப் போராளி நாடு முழுவதும் காந்தியடிகள் முன்வைத்த சட்ட மறுப்பு இயக்கத்தை கடைபிடிக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருக்கிறார். தன்னுடைய தனிப்பட்ட எதிர்ப்பைத் தெரிவிக்க, தான் இஸ்லாம் மதத்திற்கு தன்னை மாறிக் கொள்ளப்போவதாகவும் கூறியிருக்கிறார். இன்னும் பல அறிவிஜீவிகள் தங்கள் எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர். பல கட்சிகளும், இயக்கங்களும் பொங்கி எழுந்துள்ளன. மக்கள் எழுச்சிக்கான முன்னுரைகள் ஆங்காங்கே எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது நம் நம்பிக்கைக்கு உரமாக அமைகின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரை இந்திய மதச்சார்பின்மைக்கு மட்டுமல்ல, ஈழத்தமிழ் அகதிகளின் அவல நிலை போக்க அவர்களுக்கும் குடியுரிமை வழங்க அரசை நிர்பந்திக்கும் தொடர் போராட்டங்களை மேற்கொள்வது கட்டாயமாகிறது.

4

# ஹீரோ ஹீரோதான்

## கலகல வகுப்பறை சிவா

சில ஆண்டுகளுக்கு முன் குழந்தைநேயப் பள்ளிக் கூட்டமைப்பின் ஆசிரியர் முகாமில் ஒரு அமர்வில் ‘ஆசிரியர்’ திரைப்படங்கள் குறித்து பேசிகொண்டிருந்தேன். எப்போதும்போல முதலாவதாக *The Ron Clark Story* படத்தின் கதையைச் சொல்லத் தொடங்கினேன். அது ஒரு ஆசிரியரின் உண்மைக் கதை. தொடங்கியவுடனேயே யுனிசெப் நிறுவனத்தைச் சார்ந்த கல்வியாளர் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். நீங்கள் சொல்லும் படங்கள் எல்லாமே ஹீரோயிசத்தை முன்னிறுத்துகின்றன. இப்படி எல்லாம் ஒரு ஆசிரியர் ஹீரோவாக இருக்க முடியாது என்று கூறினார். அதுகுறித்த விவாதமாக இருக்க வேண்டாமென்று நினைத்ததை விடச் சுருக்கமாக சில படங்களைப் பற்றியும் ஏன் ஆசிரியர்கள் ஆசிரியர் குறித்த திரைப்படங்களை பார்க்க வேண்டும் என்பது பற்றியும் சொல்ல நினைத்த பல விடயங்களைச் சொல்லாமல் விரைவாகப் பேச்சை முடித்துக் கொண்டேன். ஓரிரு நண்பர்களிடமிருந்தும் இதே விமர்சனத்தை எதிர்கொண்டிருக்கிறேன்.

ஆசிரியர் குறித்த திரைப்படங்கள் இந்தியாவில் மற்றும் உலகமெங்கும் நிறைய வந்து கொண்டே இருக்கின்றன. அவற்றிலிருந்து தமிழில் வெளியாகும் படங்கள் நிறைய மாறுபடுகின்றன. அதனாலேயே இங்கிருப்பவர்கள் தமிழ்ச் சினிமாக் கண்களோடு பிற மொழிப் படங்களைப் பார்க்கிறார்கள். பிற மொழிப்படங்களில் ஒன்றையாவது பார்த்தாலே இந்த மயக்கம் தெளியும்.

நமது வாழ்நாளின் இனிமையான குழந்தைப்பருவம் முழுவதுமே கல்விக்கூடங்களில் கழிகின்றன. ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்றபடி எவ்வாறு கற்பிக்கலாம் என்று தேடல் மிகுந்த ஆசிரியர்கள் உலகமெங்கும் இருக்கிறார்கள். அவர்கள் என்ன மாதிரியான செயல்பாடுகளை செய்தார்கள்? அவர்கள் எதிர்கொண்ட தடங்கல்கள் யாவை? அவற்றை எவ்வாறு சமாளித்தார்கள் அல்லது சறுக்கினார்கள் என்பதை எல்லாம் உலகமெங்கும் திரைப்படங்களில் பதிவு செய்திருக்கிறார்கள்.

கற்பனை கதைகளைப் போல நிறைய உண்மைக் கதைகளும் திரைப்படங்கள் ஆகியிருக்கின்றன. ஆசிரியர்களின் புத்தங்கள் படமாகியிருக்கின்றன. சில ஆசிரியர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளைத் தொகுத்து படமாக்கியிருக்கிறார்கள். ஒன்றரை மணி நேர திரைப்படத்தில் ஒரு ஆசிரியரின் பல ஆண்டு சாதனைகளை சொல்லும்போது அது ஒரு ஹீரோயிஸம் போல தோன்றலாம். ஆனால் ஆசிரியரின் வாழ்க்கையைச் சொல்லும் உலகப்படங்கள் வெறுமனே வெற்றிக் கதைகள் மட்டும் உள்ள படங்களாக அவை இல்லை. அவர்கள் சந்தித்த தடைகள் ஏற்பட்ட தோல்விகள் அனைத்தையும் பதிவு செய்யும் படங்களாகவே பெரும்பாலும் இருக்கின்றன.

தமிழ்த் திரையுலகம் அவ்வப்போது ஆசிரியர் குறித்த படங்களில் ஆர்வம் காட்டினாலும் இங்கு எல்லாமே ஹீரோ மயம்தான். உதாரணமாக சாட்டையில் இருந்து தொடங்கலாம். அதற்கு முன்னால் கல்வி சார்ந்த படங்கள் அவ்வப்போது வந்திருக்கின்றன. ‘நம்மவர்’ ஆசிரியரின் கதை என்பதைவிட கமல் படம்.

ஆசிரியர் படம் என்ற பரவலான பேச்சை சாட்டை உருவாக்கியது. சமீபத்தில் வெளியான ராட்சசியும் அப்படியான பேச்சை உருவாக்கியது. இப்போது ஹீரோ ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் மைய இழை, இன்றைய கல்வி முறை.

இந்தப் படங்கள் எல்லாம் பல ஆசிரியர்களிடம் கேட்ட நிகழ்வுகளின் தொகுப்பாகவும் உலகப் படங்களை பார்த்து அதன் விளைவாக உருவாக்கிய சில காட்சி அமைப்புகளையும் கொண்டு கதாநாயகன்/நாயகிக்காக உருவாக்கப்பட்ட திரைப்படங்களாகவே

இருக்கின்றன. கதையை விட ‘பஞ்ச் டயலாக்’, சாகசங்களை உருவாக்குவதில்தான் அதிகக் கவனம் வைக்கிறார்கள்.

சாட்டை குறித்துப் பொதுவெளியிலும் சமூக ஊடகங்களிலும் விவாதங்கள் நடைபெற்றது நம்பிக்கை அளித்தது. அதற்கு இரண்டு ஆண்டுகள் கழித்து வெளியான ‘குற்றங்கடிதல்’ குறித்துப் பெரும்பாலான ஆசிரியர்களே அறிந்திருக்கவில்லை.

பிற ஆசிரியர் படங்களைப்போல ஆசிரியர்களைப் பொதுவாகக் கிண்டல் செய்யாமல், தண்டனை குறித்த முழுமையான உரையாடலாக ‘குற்றங்கடிதல்’ ஆசிரியரின் பக்கம் நின்றே பேசியது. அப்படியிருந்தும் அப்படம் குறித்த பரவலான பேச்சு இல்லை.

தமிழ்த் திரையுலகம், கதையிலும் தயாரிப்பிலும் திரையரங்கிலும் வெளியே தெரியாத ஹீரோக்களின் பிடியில் உள்ளது. அரசியல் ஆசை ஹீரோக்களை இயக்குகிறது.



‘ஹீரோ’ படம் வந்த பிறகு ‘குக்கூ’ காட்டுப்பள்ளியை உருவாக்கியவர்களில் ஒருவரான சிவராஜ் எழுதிய முகநூல் பதிவு பெரிதும் பேசப்பட்டது. அனில் குப்தாவின் கதையை எடுத்துக் கொண்டு கதாநாயகனுக்காக சில பல விடயங்களை சேர்த்து இந்த படம் உருவாகியிருக்கிறது என்று அவர் கூறியிருந்தார்.

பேராசிரியர் மாடசாமி அவர்களின் ‘எனக்குரிய இடம் எங்கே?’ என்ற புத்தகத்தை வாசித்ததில் இருந்து உருவான கதை ‘அடுத்த சாட்டை’ என்று அந்தப் படத்தின் கதாநாயகனான சமுத்திரக்கனி கூறியிருந்தார்.

நமது பள்ளிக்காலத்தை நினைத்தாலே எவ்வளவு பசுமையான நிகழ்வுகள் மனதுள் தோன்றுகின்றன! நகைச்சுவை, காதல், சண்டை,

போட்டி, வெற்றி, தோல்வி என்று எல்லா உணர்வுகளும் கொட்டிக்கிடக்கின்றன.

தமிழில் வாழ்க்கைக் கதைகள் அதிகம் வெளிவருவதே இல்லை. பெரும்பாலும் புராண இதிகாசம் அல்லது அரசியல் தலைவர்களின் வாழ்வு இதைத்தாண்டி வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதர்களிடமிருந்து கதைகளை உருவாக்கி இருக்கிறார்களே தவிர இவருடைய வாழ்க்கை கதை என்று அதிகம் வந்ததாகத் தெரியவில்லை.

ஹிந்தியில் ‘Super 30’ என்று ஆனந்த்குமாரின் வாழ்வு படமாகிறது. ஹீரோ படத்தை அனில் குப்தாவின் வாழ்க்கை கதையாகவே ஏன் எடுக்க முடியவில்லை? அடுத்த சாட்டை படத்தை பேராசிரியர் மாடசாமியின் வாழ்க்கைக் கதையாகவே ஏன் எடுக்க முயற்சி செய்யவில்லை?

தமிழ்த் திரை உலகம் ஹீரோக்களை மையமாக வைத்து இயங்குகிறது. அந்த சூப்பர்மேன் நம்மைக் காக்க வருவார்கள் என்ற நம்பிக்கையை காலம்காலமாக தமிழ் திரையுலகம் விதைத்துக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் திரை வசனம் பேசும் பலரை இந்த மண் அரசியல் தலைவர்களாகவும் ஆக்கியிருக்கிறது.

எப்போதாவது ஒரு சில படங்கள் அறியாத முகங்களோடு கதையை மையமாக வைத்து வெளி வருவதுண்டு. அவை கொண்டாடப்படும். அப்போது சினிமா காதலர்களின் பேச்சில் நம்பிக்கை ஒளி புலப்படும். அதை அதிக நாள் நீடிக்க விடாமல் உடனடியாக ஒரு சூப்பர்மேன் தோன்றுவார். மீண்டும் தமிழ்த் திரையுலகம் தனது பாரம்பரிய ஹீரோ கனவில் திளைத்துக்கொண்டு பறந்து பறந்து சண்டை போடத் தொடங்கும்.

இதோ, ‘சில்லுக்கருப்பட்டி’யை ரசித்துக் கொண்டிருக்கிறேன். சில நாட்களில் அதைத் தூள் தூளாக்க ‘தர்பார்’ வரப்போகிறது.

ஹீரோ ஹீரோ தான்.

5

# நீதியும் தீர்ப்பும் - இந்திய இறையாண்மையின் புது வடிவம்

ஜமாலன்

இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரை ''இந்தியாவை ஓர் இறையாண்மை கொண்ட சமூகத்துவ சமயசார்பற்ற ஜனநாயக குடியரசு'' என அறிவிக்கிறது. இறையாண்மை என்பது ஒரு அரசு தன்னைத்தானே ஆள்வதற்கான அதிகாரத்தை பெற்றிருப்பது. தனது ஆளுகை உரிமையை அந்நியர்களிடம் விட்டுக்கொடுக்காமல் தன்னை ஒரு தன்னாட்சியுள்ள (சுய ஆட்சியுள்ள) அரசாக நடத்துவது. அது வெறுமனே தன்னிச்சையான அதிகாரம் சார்ந்த ஒன்றல்ல. அது அந்த நிலத்தில் வாழும் அனைத்து மக்களின் உரிமையை கவனத்தில் கொண்டு அவர்களை ஆள்வதற்கான ஒரு அதிகாரம். குடியாட்சி என்பதன் பொருள் குடிகளே அரசின் இறையாண்மையை தீர்மானிப்பவர்கள். அவர்களே உயர்ந்த அதிகாரம் கொண்டவர்கள் .

இந்தியா போன்ற பல இனங்கள், பல மொழிகள், பல மதங்கள், பல பழங்குடிகள் உள்ள சமூகத்தில் இறையாண்மை என்பது பன்மைத்துவத்தை அங்கீகரித்து, அவற்றிற்கிடையே ஒரு இணக்கத்தை உருவாக்குவதற்கான அதிகாரமே தவிர அவற்றை அவற்றின் தனித்தன்மைகளை அழித்து, அவற்றின்மீது தனது ஒற்றை அதிகாரத்தை

நிறுவுவது அல்ல. ஆனால், இந்திய அரசின் உயர்ந்த இறையாண்மை அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம், நீதித்துறை, தேர்தல் ஆணையம், இந்திய வைப்புநிதி வங்கி ஆகிய அனைத்தும் இன்று ஒற்றை அதிகார திசைவழிப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. அவை மக்களின் நம்பிக்கை இழப்பை நோக்கி நகரும் அபாயத்திற்கான அறிகுறிகள் தெரிகிறது. இந்த அறிகுறிகள் குடியுரிமை சமூகத்தை உள்நட்டு யுத்தம் நோக்கி தள்ளிவிடக் கூடியவை.

சமீபத்திய பாபர் மசூதி நில உரிமைக்கான உச்சநீதிமன்ற தீர்ப்பு, ஆந்திர போலி-மோதல் கொலைகள், குடியுரிமை திருத்த சட்டம், உன்னாவ் பாலியல் வன்முறையும் படுகொலையும், அமித்ஷா மீதான என்கவுண்டர் வழக்கு தீர்ப்பு, சபரிமலை தீர்ப்பு, சமீபத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 294 தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை முறைகேடு நடந்ததாக சொல்லப்படும் வழக்கு, குடியுரிமை திருத்த சட்டத்தை எதிர்த்து மாணவர்கள் போராடுவதை நிறுத்தினால்தான் அந்த வழக்கை விசாரணைக்கு எடுக்க முடியும் என்ற உச்ச நீதிமன்ற அறிவிப்பு, அந்த வழக்கு விசாரணையில் உள்ளபோதே தலைமை நீதிபதி இச்சட்டத்தின் நன்மை குறித்து அரசு மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று அறிவிப்பது, இந்திய பொருளியல் வீழ்ச்சியை நீக்க இந்திய மக்களின் பேரிடர்கால மீட்பிற்கும், போர்க்கால பாதுகாப்பிற்கும் வைத்துள்ள இந்திய வைப்புநிதி 1.7 இலட்சம் கோடியை அரசு எடுத்து அதில் 1.5 லட்சம் கோடி பெருமுதலாளிய நிறுவனங்களின் கடன்களை தள்ளுபடி செய்ய பயன்படுத்தியது என அதிகாரமிக்க இறையாண்மைக் கொண்ட அனைத்து நிறுவனங்களும் ஒற்றை அதிகாரத்திற்கு ஏற்ப வழிமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒரு இருண்டகாலப் பயணம் துவங்கியுள்ளது. அதன் அறிகுறிகள் மக்களின் தினவாழ்வைச் சிதைத்து, வாழமுடியாத நிலைக்குத் தள்ளும் பொருளாதாரம் ஒரு புறம், அதை மறைக்க கருத்தியலான மதம், இனம், சாதி, மொழி என்ற பல அடையாளம் சார்ந்த வெறிகளை ஊட்டுவது மறுபுறம் என இந்தியா ஒரு அமைதியற்ற வாழ்வைத்தரும், பாமர மக்களின் உளவியலில் பெரும் நெருக்கடியையும், அச்ச உணர்வையும் உருவாக்கியுள்ளது. மக்கள் தேர்ந்தெடுத்த அரசைத் திரும்பப்பெற அதிகாரமற்ற நிலையில், நம்பிக்கைக்கு உகந்ததாக உள்ள சட்டவழிமுறைகள் அனைத்தும் என்னவாக மாறியுள்ளது என்பது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

சட்டம் என்பது அடிப்படையில் ஒரு அரசமைப்பின் ஆளுகைக்குள் உள்ள மக்களை கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் ஆன ஒரு சிறைக்கோபுரம் போன்றது. இந்த சிறைக்கோபுரம் ஒரு

படிமமே. சான்றாக, கடவுள் எப்பொழுதும் நம்மை கண்காணிப்பதைப்போல, சட்டம் என்கிற ஆணை மக்களை கண்காணிப்பதாக உள்ளது. கடவுளின் மறுமைக்கால தண்டனைபோல, இவ்வுலக வாழ்வின் தண்டனையை தரக்கூடியதாக சட்டம் உள்ளது. சட்டங்கள் அனைத்துமே தண்டனைகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுவது அல்ல. அவை முதலில் சமூகத்தில் ஒரு கண்காணிப்புக் கருவியாகச் செயல்படுகிறது. அதன் கண்காணிப்பு அந்த சட்டம் புழங்கும் இறையாண்மை அமைப்பிற்குள் உள்ள ஒவ்வொரு உடலின் பொது மனசாட்சியை கண்காணிப்பதும், மீற முயல்பவரை தண்டனையைக் காட்டி உளவியல் அச்சத்திற்கு உட்படுத்துவதுமே. அதையும் மீறிய நிகழ்வுகளைத் தண்டிப்பதன் வழியாகக் கட்டுப்படுத்த முனைவது.

ஒரு தனித்த உடலை இறையாண்மைக்குள் குடிமகனாக இருத்தி வைப்பதே சட்டத்தின் பணி. அதனால் சட்டம் எப்போதும் ஒரு குறிப்பிட்ட விதியமைப்பிற்குள், ஒழுங்கிற்குள் இயங்கும் சமூக அமைப்பிற்கான விதியாக வரையறுக்கப்படுவது. அது விதிவிலக்குகளினை ஒழுங்கமைப்பதன் வழியாக விதியை மேல் அமைப்பில் கொண்டும், விதிவிலக்குகளை உள்ளமைப்பில் கொண்டும் இயங்குவது. விதிவிலக்குகள் அவ்வப்போது விதியை கேள்விக்கு உட்படுத்தும். விதிவிலக்கைக் கொண்டு விதியை மாற்றியமைப்பது, சமூக ஒழங்கை சீரழிப்பதாக, இறையாண்மையை சிக்கலுக்குரியதாக மாற்றிவிடும்.

சான்றாக, SC/ST சட்டம் எனப்படும் வன்கொடுமைத் தடைசட்டம், பட்டியல் சாதியினரின் பாதுகாப்பைவிட, பட்டியல் சாதியினர் அல்லாதவரின் சமூகவயத்தை, சாதிய மனோபாவத்தை கண்காணிப்பதற்கானதாக செயல்படுகிறது. பட்டியல் சாதியினரைப் பாதுகாப்பது என்பது அதன் விதிமுறை. பட்டியல் சாதியினர் அல்லாதோரை கண்காணிப்பது அதன் செயல்பாடு. வன்கொடுமை தடைச்சட்டத்தை ஒடுக்கும் சாதிகள் சுயசாதிய மனோநிலையில் அதை அணுகக்கூடாது. அது பட்டியல் சாதியினர் அல்லாத பிறசாதியின் உளவியலுடன் உறவு கொண்ட ஒன்று. அதை உரிமை மறுப்பு, ஜனநாயகமற்றது, விசாரணையற்ற கொடும் சட்டம் என்றெல்லாம் பார்ப்பது என்பது ஒருவகை உளவியல் ஆதிக்கத்தின் வெளிப்பாடே. அந்தச் சட்டம் பட்டியல் சாதியினர் மீதான தொடர் வன்முறையை சாதியத்தால் நிகழ்த்துவதற்கு ஒரு தடையாக, அவர்களுக்கு பாதுகாப்பதற்கான ஒரு ஏற்பாடு.

வன்கொடுமைத் தடைசட்டம் குறித்த உரையாடல்களில் முன்வைக்கப்படும் வாதம், அது பட்டியல் சாதியினரால் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதே. அதனால் அது காவல்துறையின்

கட்டற்ற அதிகாரமாக மாறுகிறது என்பது. இதில் மட்டுமல்ல இந்திய சட்டங்கள் பெரும்பாலானவற்றில் காவல்துறையின் கட்டற்ற அதிகாரம்தான் உள்ளது. வன்கொடுமைத் தடைச் சட்டம் தவறாக பயன்படுத்தவதாகச் சொல்லப்படுவது ஒரு விதிவிலக்கான நிலை. அதை வைத்து விதியை வகுக்க முடியாது. அப்படிப் பார்த்தால் இந்தியாவில் எந்த சட்டமும் தவறாக பயன்படுத்த வாய்ப்புள்ளதே. அதை எல்லாம் விதிவிலக்காக அமைப்பின் குறையாக காணும் நாம் வன்கொடுமைத் தடைச்சட்ட விதிவிலக்கை மட்டும் ஏன் விதியாக மாற்ற முனைகிறோம். விதிவிலக்குகளால் தீர்மானிக்கப்படுகிறதே தவிர, ஒழுங்கமைப்பால் அல்ல. ஒழுங்கற்றதை ஒழுங்கமைக்க முனைவதே விதி. அதன் விலக்கு என்பது ஒழுங்கற்றதாகவே இருக்கும்.

வன்கொடுமைத் தடைச்சட்டம் புள்ளிவிபரப்படிக்கூட, தவறாகக் குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, உண்மையில் பட்டியல் சாதியினர் மீதான வன்கொடுமையை அது குறைத்தும் விடவில்லை. குறைந்தபட்சம் வன்கொடுமை செய்யும் மனநிலையில் ஒரு தடையை இது ஏற்படுத்துகிறது என்பது பட்டியல் சாதிகளுக்குப் பாதுகாப்பானதே. அந்தவகையில் இச்சட்டம் உருவாக்கும் உளவியல் அச்சத்திற்காகவாவது தற்போது உள்ளபடி நீடிப்பதே சரியானது. இதில் சில சட்டத்திருத்தம் அரசால் கொண்டுவரப்பட்டது. அது வழக்கம்போல சட்டத்தையும், நீதியையும் வளைப்பதற்கு வாய்ப்பை அளிப்பதால், கூடுதலாக வன்முறையை அதிகரிக்கவே செய்யும். இச்சட்டத்தை நீக்க இந்திய அளவில் பெரும் போராட்டத்தை ஒடுக்கும் சாதி அமைப்பினர் எடுத்தார்கள். இந்தச் சட்டம் அவர்கள் மீதான சாதியக் கண்காணிப்பாகச் செயல்படுவதால் உருவாகும் ஒரு உளவியல் அழுத்தமே காரணம். இது பட்டியல் சாதிகள் மீதான ஒரு சிறப்புரிமையாகப் பார்க்கப்படுகிறது. உண்மையில் இது சாதியவாதிகளின் வன்மத்தை, சாதிவெறியை, தீண்டாமை உணர்வை வெளிப்படுத்தும் ஒன்றாக உள்ளது.

பெண்கள் மீதான வன்பாலியல் தடை செய்யும் சட்டங்கள், சிறுமிகள் மீதான வன்பாலியலை தடை செய்யும் போக்சோ போன்ற சட்டங்கள் நடைமுறையில் இருந்தும், தொடர்ந்து பாலியல் வன்கொடுமை என்பது அதிகரித்துக்கொண்டே உள்ளது. சமீபத்தில் வெளிவந்த 'கடுகு', 'அடங்க மறு' மற்றும் 'துப்பாக்கி முனை' போன்ற தமிழ்த் திரைப்படங்கள் பணக்காரர்களும், அதிகார அமைப்பும் இணைந்து இளம்பெண்களை பாலியல் வன்கொடுமை அதிலும் கூட்டாகப் புரிவதும், அதை வீடியோ எடுத்து இரசிப்பதும் காட்சிகளாக, கதைகளாக வெளிவந்த படங்கள். இவை மெலோடி ராமாக்கள் வகை என்றாலும், பொள்ளாச்சி சம்பவம் அத்தகைய

சினிமாக்களைத் தாண்டிய ஒன்றாக உள்ளது. இவை சமூகத்தின் ஆழ்தளத்தில் புரையோடிய பண்பாட்டுச் சிக்கலுக்கான நோய்க்குறிகள் மட்டுமல்ல, பணம், அதிகாரம், அரசியல், பாலியல் அனைத்தும் ஒரு புள்ளியில் இணைவதால் உருவாகும் சிக்கலும்கூட.

சட்டத்தின் கண்காணிப்பு அதிகார பலம் மிக்கவர்களுக்கு ஒரு காட்சியின்பமாக மாறுகிறது. அவர்கள் தங்களைச் சட்டத்திற்கு மேலானவர்களாகக் கருதுகிறார்கள். காரணம் இறையாண்மை அவர்களது கைகளில் உள்ள அதிகாரமாக மாறுகிறது. இதற்கான பின்னணியில் அரசியல் கட்சிகள் அதிலும் குறிப்பாக ஆளும் கட்சிகள் இருப்பதும், அது குறித்து மௌனம் சாதிப்பதும் பெரும் சீரழிவிற்கு சமூகத்தைக் கொண்டு செல்லும் செயல்போக்குகள் மட்டுமல்ல இறையாண்மை தரும் அதிகாரத்தின் விருப்புறுதியை அதிகார வர்க்கத்திடம் நிலைநிறுத்துபவை. வெகுமக்களின் உளவியலில் அவர்களை தனியர்களாக, அதிகாரமற்றவர்களாக உணரவைக்கும் ஒரு செயல்போக்காக வெளிப்படுபவை. இத்தகைய நிகழ்வுகளுக்கான உளவியல் பலத்தை தரக்கூடியதாக அரசும் அதன் சட்டங்களும் அமைந்துள்ளன. சமூகத்தின் பொது உளவியலில் உள்ள அச்சம் நீக்கப்பட்டு பாதுகாப்பு உணர்வை தரவேண்டிய அரசுகள் மேலும் மேலும் மக்களை அச்சத்திற்குள்ளும், பதற்றத்திற்குள்ளும் தள்ளிச் செல்வதாக அவை அமைந்துள்ளன.

இச்சட்டங்களின் இயலாமை வெளிப்பாடே ஆந்திராவில் சமீபத்தில் நடந்த போலி - மோதல் (என்கவுண்டர்) கொலைகள். ஆந்திர கால்நடை மருத்துவர் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்ட கொலைகாரர்கள் என நான்குபேர் சட்டத்திற்கும், நீதிமன்றத்திற்கும் புறம்பாக கொல்லப்படுகிறார்கள். குற்றவாளிகள் என்றால், நேரடியாக நீதிமன்றம் கொண்டு போகாமல் சம்பவம் நடந்த இடத்திற்கு அழைத்து சென்று ஒரு போலியான மோதல் கதையை கட்டி கொல்லப்படுகிறார்கள். ஆக, அங்கேயும் உயர்சாதி, பணக்கார, அதிகார வர்க்க பொள்ளாச்சி வகை 'மைனர் குஞ்சுகள்' அரசியல், அதிகார பின்புலத்துடன், வெளியே தெரியாமல் திரைக்கதையின் உச்சக்காட்சியை முடித்து விட்டனரோ என்கிற சந்தேகத்தையே தருகிறது.

உலகத்தையே உலுக்கச் செய்த நிருபயா பாலியல் வன்புணர்வு வழக்கில் என்ன நடந்தது? எந்த மோதல் கொலையும் இல்லை. அங்கு சட்டம் தன் கடமையைச் செய்தது. இங்கு காவல்துறை சட்டத்தின் கடமையைச் செய்துள்ளது. நேற்றுவரை அந்த நால்வர்தான் குற்றவாளி என்ற நமது எண்ணத்தை இந்த போலி-மோதல் கொலை, அவர்கள் பலிகடாக்களோ என்கிற சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

பொள்ளாச்சிவகை 'மைனர் குஞ்சு' கொலைகாரர்களைக் காக்க இப்படி நாலுபேர் அன்று கிடைக்காமல், இங்கே விஷயம் அம்பலமாகிவிட்டதால் கொங்கு அண்ணாச்சிகள் நீதிமன்றம் சென்று பிணை வாங்கி, அடுத்த ஆட்சிவரை இழுத்து மறந்து போனபின், யாருக்கும் தெரியாமல் வழக்கை இழுத்து மூடுவார்கள். ஆக, அதிகார, அரசியல், பணக்காரர்கள் பிரச்சனை வெளியே தெரிந்தால் சட்டம், நீதி தெரியாவிட்டால், இப்படி நாலு பேரைப் பிடித்துச் சுடுவது அல்லது சுட்டுப் பிடிப்பது இதுதான் அதிகாரத்தின் ஆளுகைத்திறன்.

உலகிலேயே போலி-மோதல் (என்கவுண்டர்) ஸ்பெசலிஸ்டுகள் என்றால் அது ஆந்திர போலிஸ்தான். நக்சலைட்டுகள், போராளிகள், செம்மரம் வெட்டிய தமிழர்கள் என அவர்கள் சுட்டுத் தள்ளாத ஆட்களே இல்லை. காரணம் தெலுங்கு போலிஸ் தெலுங்கு திரைப்படங்களைப்போலத்தான். அதீத ஹீரோயிசம் உள்ளவர்கள் போலத் தெரிகிறது. அந்த மக்களும் அப்படித்தான் போலிருக்கிறது. பொதுவாக இந்திய போலிஸின் என்கவுண்டர் என்பது வழக்கை முடிக்க, ஆகாதவன், அரசியல் பழிவாங்கல், திட்டமிட்டு கொல்லப்பட வேண்டியவன், நீதிமன்றம் போனால் உண்மை வெளியாகிவிடும் என்று பயம் கொள்பவர்களுக்கு சாதகமாக, இப்படி பல காரணங்களால் நிகழ்ந்துள்ளதே தவிர, உண்மையான குற்றவாளிக்கு நிகழ்ந்ததாக வரலாறு உண்டா?

ஒருவேளை என்கவுண்டரில் இறந்தவர்கள் நிரபராதி என்றால்? "அட அதெல்லம் இப்பப் பேசாதீங்க. சுட்டுத்தள்ளிய வீரமகன் அந்த காவல் நாயகனுக்கு மாலை போட்டு மரியாதை செய்யுங்க, இந்தியாவே பாராட்டுதுல. நீ இப்பத்தான் நீதி அது, இதுன்னு மனநோயாளி மாதிரி பேசிகிட்டு" என்று போலி மோதல் கொலைகளை எதிர்ப்பவர்களைப் பார்த்து பொதுபுத்தி சார்ந்த உளவியல் முகஞ்சுளிக்கிறது. தெலுங்கானாவில் நிகழ்த்தப்பட்ட அரசு பயங்கரவாதமான போலி-மோதல்-கொலைகள் குறித்து நிலைப்பாடு இதுதான். மலர்தூவி, இனிப்பு வழங்கிக் கொண்டாடும் தெலுங்கானா மற்றும் இந்திய மக்கள் முழு பாசிசத்திற்கான உளவியலை பெற்றுவிட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

1. கொல்லப்பட்டவர்கள் குற்றவாளிகளாக இல்லாவிட்டால், இவர்களை இந்த தண்டனையிலிருந்து மீட்டுவிட முடியுமா? அல்லது பாதிக்கப்பட்ட அவர்கள் குடும்பத்தின் நிலை என்ன?

2. குற்றவாளிகளாக இருந்தால் நீதிமன்றம் நிச்சயமாக தண்டனை தரும். காரணம் நாயைப்போல சுட்டுக் கேட்க நாதியற்ற இவர்கள் எப்படி அரசியல் தலையீடு உள்ளவர்களாக, செல்வாக்கு உள்ளவர்களாக இருக்க முடியும்? தேவை காவல்துறை குற்றத்தை நிரூபிக்க வேண்டும்.

*அதற்கு வழியில்லாதபோதே இதுபோன்ற குறுக்கு வழிகளை அது நாடுகிறது.*

*3. காவல்துறை நிரூபித்து நீதிமன்றம் தீர்ப்பு அளிக்காவிட்டால் பொதுமக்கள் இப்போது ஆடிப்பாடிக் கொண்டாடுவதைப்போல, நீதிமன்றத்திற்கு எதிராகப் போராட வேண்டும். அப்படி போராடத் தயாரற்ற கும்பலே இதை நீதி, தீர்ப்பு என்றெல்லாம் குதூகலிக்கிறது.*

*4. அரசியல் தலையீடுகள், பணக்காரர்களின் இடையீடு போன்றவை இருந்து இந்த குற்றவாளிகள் விடுதலை ஆகிவிடும் வாய்ப்பு இருப்பதாகக் கருதினால். இந்த என்கவுண்டரே நடந்திருக்காது. இவர்கள் பஞ்சபராரிகள், கேட்க நாதியற்றவர்கள் என்ற நிலையில்தான் இந்த சட்டவிரோத செயல் நிகழ்த்தப்பட்டுள்ளது.*

*5. அந்தப் பெண்ணை அரசியல்வாதிகள், அதிகாரிகளைச் சார்ந்தவர்கள் வன்புணர்வு செய்துவிட்டு இந்த அப்பாவிகளை (ஒருவேளை) பலியிட்டிருந்தால் இந்தக் கொண்டாட்டக் கும்பல் அப்பொழுது காவல்துறைக்கு மாலைக்குப் பதிலாக எதிர்த்துப் போராடுமா? ஏதோ பெரிய புரட்சிகர ஆதரவு போன்ற ஒரு நிலை எடுப்பது இதில் தவறானது. பொதுவாகக் காவல்துறை குற்றவாளிகளை, குறிப்பாகச் செல்வாக்கும் பணபலமும் உள்ள குற்றவாளிகளை, எந்தச் சூழலிலும் கொல்வதோ தண்டிப்பதோ இல்லை. அதன் வரலாறு சொல்வது இப்படியான அப்பிராணிகளைக் கொல்வதும், வழக்கை முடிப்பதும்தான்.*

*இறுதியாக கொன்றபின் நிரூபிக்கப்படும் ஆதாரங்கள் ஜோடிக்கப்பட்டவை என்கிற சந்தேகத்திற்கு உரியவை என்பதால், அதை ஏற்க முடியுமா என்கிற கேள்விகள் உள்ளது. என்கவுண்டர்களை (போலி-மோதல்-கொலைகள்) ஆதரிப்பவர்கள் பொதுபுத்தி மனநிலையில் உள்ளவர்கள். எதிர்ப்பவர்கள் விமர்சன சிந்தனையுடன் அதை பார்ப்பவர்கள். இருவருமே நீதி வேண்டும் என்பவர்கள்தான். இருவருமே சமூகத்தின்மீது அக்கறைக் கொண்டவர்கள்தான். இங்குதான் சட்டத்தின் நுட்பமான விளையாட்டை புரிந்துகொள்ள வேண்டும். ஒரே நேரத்தில் இந்திய அரசமைப்பை விமர்சிப்பவர்களை அது சட்டம், நீதித்துறையை ஆதரிக்கும் சட்டவாதத்திற்குள் தள்ளுகிறது. வழக்கமாகச் சட்டவாதம் பேசும் பொதுமக்களை, சட்டம், நீதித்துறையை எதிர்க்கும்படி செய்கிறது. இந்த விதமான விளையாட்டே சட்டத்தின் கண்காணிப்பு எல்லை உருவாக்கும் விளையாட்டு. அதன் எல்லைக்குள் அனைவரையும் விளையாட அது அனுமதிக்கிறது.*

*சரி, என்கவுண்டர் வழி சட்டத்தை காத்த காவலர்கள் உன்னாவ் பாலியல் வன்கொலையில் என்ன செய்தார்கள்? சொல்லவோ*

கேட்கவோ மனதை பதறவைக்கும் நிகழ்வு அது. போலி-மோதல் கொலைகளை ஆதரிப்பவர்கள் இதற்கு என்ன சொல்வார்கள்? அவர்கள் குற்றம் செய்தவர்கள் என்று தெரிந்தும், அங்குள்ள காவல்துறை ஏதும் செய்யவில்லை. அவர்களுக்கு பாதுகாப்புதான் தந்தது. கூறவருவது, இக் குற்றவாளிகளைக்கூட என்கவுண்டர் செய்யக்கூடாது, மாறாக, நீதியடிப்படையில் கடுமையான அதிகபட்ச தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே. தொடர்ந்து தரப்பட்ட அழுத்தத்தால் தற்போது தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதுவும் கீழ் கோர்ட்டில். இன்னும் மேலே மேலே போக வாய்ப்புகள் உள்ளது. ஆனாலும், பார்ப்பனர்கள் இதன் வழி நாடெங்கிலும் அம்பலப்பட வேண்டும். தீண்டாமை என்பது பெண் உடலை வன்புணர்வதில் இல்லை அவர்களுக்கும், அவர்களது 'தர்மா'விற்கும் என்பதை அனைவரும் அறிய வேண்டும். இத்தகைய குற்றவாளிகள் தப்ப வாய்ப்புள்ளது என்பதால், என்கவுண்டர்கள் நியாயப்படுத்தப்படுகிறது. இந்த நியாயங்கள் அப்பாவிகளை, எதிரப்பவர்களை, புரட்சியாளர்களை என்கவுண்டரில் போட அரசிற்கு வாய்ப்பாக அமைகிறது.

ஒருபுறம் சட்டம், நீதிமன்றம் ஆகியவை உள்ளன. அதன்முன் நிறுத்ததான் காவல்துறை உள்ளது. என்கவுண்டர் என்பது நீதித்துறையை அவமதிக்கும் ஒரு செயல். நீதிமன்றம் தன்னை அவமதித்ததாகக் கருதி என்கவுண்டர் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் செய்வார்களா? சிறுமி ஆசிபாவை நாள் கணக்கில் வைத்து வன்பாலுறவு செய்த காவிக் கயவர்களை ஒன்றும் செய்யாத காவல்துறை, ஹைதராபாத்தில் எந்த விசாரணையும், ஆதாரமுமின்றி போலி-மோதல்-கொலை செய்கிறது என்றால் என்ன பொருள்? பணத்திற்கும், செல்வாக்கிற்கும், அதிகாரம் கூன் விழுந்து கும்பிடும். அரசும், சட்டமும், நீதியும் மக்களுக்கானது இல்லை. மக்கள் அந்த பணக்கார வர்க்கத்தை எதிர்க்காமல் இருப்பதற்காக உருவான காவல்படைகளே அவை. இறையாண்மை, சட்டம், நீதி என்பதன் உள்ளிருப்பது அதற்கான வர்க்கநிலைபாடுகளே.

பாபர் மசூதி நில வழக்கில் நீதிமன்ற தீர்ப்பு பல உள்முரண்பாடுகளுடன் வெளிப்பட்டது. இந்திய இறையாண்மையின் அடிப்படையிலும், சர்வதேச சட்டவாத நடைமுறைகளிலும் பின்பற்றப்படும் பகுத்தறிவுசார்ந்த, தர்க்கமுறைப்படியான தீர்ப்பிற்கு பதிலாக, ஒரு குறிப்பிட்ட மதப்பிரிவினரின் நம்பிக்கை அடிப்படையில் தீர்ப்பு வழங்கியது. ஆனால், சபரிமலை பெண்கள் நுழைவு குறித்த தீர்ப்பில், அவர்களின் மதநம்பிக்கையை குறித்து அக்கறை செலுத்தவில்லை. இது மற்றொரு சட்டவாத கண்காணிப்பு விளையாட்டு. அடிப்படையில் தீர்ப்பும் (Judgment), நீதியும் (justice)

ஒன்றல்ல. அவை வெவ்வேறு அறிவுத்துறை சார்ந்த செல்லாடல்கள். தீர்ப்பு சட்டத்தின் அடிப்படையில், விசாரணைகள், சாட்சிகள், தர்க்கங்கள் அடிப்படையில் வழங்கப்படுவது. நீதி அறம் சார்ந்து, இயற்கை சார்ந்த மனித குலத்தின் வாழ்வியல் சார்ந்து வழங்கப்படுவது. நீதிமன்றங்கள் தீர்ப்பாயங்கள் மட்டுமே. தீர்ப்பு நீதி அடிப்படையில் கிடைப்பதும், பிரச்சினைக்கான தீர்வு அடிப்படையில் அமைவதும் அரசியல், அரசு, அதிகாரம் சார்ந்த ஒன்று. நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் நீதியானவையாக அமைவது அதன் தன்னிச்சையான இறையாண்மை தந்த அதிகாரத்தின் அடிப்படையில் நிகழ்வது. இதன்பொருள் நீதிமன்றங்கள் நீதிக்குப் புறம்பானவை என்பதல்ல. அவை அரசமைப்பின் ஒரு அங்கம் என்ற வகையில் அதற்கான அரசியலை கொண்டதொரு நிறுவனமாகவே அமைகிறது.

ஆர்.எஸ்.எஸ். தாக்கல் செய்த சபரிமலை வழக்கை எடுத்துக்கொள்வோம். அதை நிறைவேற்ற முற்போக்காளர்களை பாடுபட வைத்துள்ளார்கள். மற்றொருபுறம் வலதுசாரிகளை ஒருங்கிணைத்து உள்ளார்கள். சபரிமலைப் பிரச்சினையைப் பக்தர்களுக்கான பிரச்சினை என்று அமைதி காத்திருந்தால் அவர்கள் நோக்கம் புஸ்வானமாகியிருக்கும். அப்போது, அவர்களே பெண்களை அனுப்பி, கேரள அரசை மிரட்டி கலைக்க முயல்வார்கள், அதைதான் அவர்கள் முதலில் ஒரு இஸ்லாமிய மதம்மாறியப் பெண், கிறித்துவ சமூகசேவகி என உள்நுழைக்க ஆரம்பித்தார்கள். அந்த சதிவிளையாட்டை முறியடிக்காமல் ஊடகங்கள் வழியாக முற்போக்காளர்கள் தொடர்ந்தார்கள். அவர்களது நோக்கம் ஆணையை நிறைவேற்றாவிட்டால், சுப்ரீம் கோர்ட் ஆணையை நிறைவேற்றவில்லை எனக் கேரள அரசை கலைப்பது. இல்லாவிட்டால் பக்தர்கள் என்ற போர்வையில் ரௌடியிசம் செய்து, கலவரமாக்குவது. ஆக, அவர்களின் இரட்டை விளையாட்டு இது. பெரும்பாலும், சங் பரிவார் அமைப்பு இப்படியான ஒரு கள்ள விளையாட்டைத்தான் விளையாடுவார்கள். இனி நாடெங்கும் இதை நடைமுறைப்படுத்துவார்கள். நமக்கு எதிர்கொள்வதற்கான போர்த்தந்திரம் இல்லை. காரணம் என்.ஜி.ஓ. அரசியலின் அவசரக்கோல போராளி ‘மோடு’-ம், அதனால் சுயபலன் அடையும் தன்முனைப்புமே காரணம்.

இந்திய இடதுசாரிகள் பார்ப்பனிய-இந்துத்துவ-பாசிசத்தை எதிர்ப்பதுடன் இந்த திடீர்ப்போராளி என்.ஜி.ஓ. அரசியலில் கவனமாக இருக்க வேண்டும். உலகப் பேரரசில் இந்த என்.ஜி.ஓ. அமைப்புகளே, அரசுக் கருத்தியலின் முகவர்களாக உள்ளனர் என்ற எச்சரிக்கை அவசியம். சபரிமலைப் பிரச்சினை ஆரம்பம் முதல் ஒரு சிக்கலான

அரசியல் விளையாட்டாகவே இந்துத்துவ காவி அரசியலால் நடத்தப்படுகிறது. அதுகுறித்த ஒரு சரியான போர்தந்திர அணுகுமுறை இடதுசாரிகள், ஜனநாயகவாதிகளிடம் இல்லை. ஆனால், என்.ஜி.ஓ-அமைப்புகள், வழக்கம்போல தன்னுணர்வற்ற நிலையில், காவி அரசியலுக்கே பலியாகிவிடுகிறார்கள். இந்திய என்.ஜி.ஓ. அரசியல் என்பது உலக கார்ப்பரேட் சார்பான, காவிகளுக்கு சாதகமான அரசியலாகவே உள்ளது. சபரிமலைக்கு பெண்கள் சென்றால் ஆர்.எஸ்.எஸ். வெற்றி, போகாவிட்டால் பிஜேபி வெற்றி. இரண்டுமே காவி-சங்பரிவார் பார்ப்பனியத்தின் வெற்றிதான். பார்ப்பனர்கள் சூதுவாதில் வல்லமை உள்ளவர்கள். பெரியார் தீவிரமாக இந்த எச்சரிக்கையை தொடர்ந்து முன்வைத்தார். ஆனால், இன்று பெரும்பாலான இடதுசாரிவாதம் அடிப்படையில் என்.ஜி.ஓ. அரசியலாக மாறியுள்ளது. இந்த ஆபத்தை இடதுசாரி ஜனநாயக அரசியல் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. என்.ஜி.ஓ. என்பது அரசுக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு சட்டபூர்வமான தொடர்பை உறவை உருவாக்க விரும்பும் அமைப்பு. அது அரசின் ஆளுகை தொழில் நுட்பத்தின் மற்றொரு உத்தியடிப்படையில் அமைவது.



அரசியல் நிகழ்வாக சபரிமலை நிகழ்வை வைத்துத் தனது ஆற்றலை ஒருங்கிணைக்கவும், பொதுவாக மக்கள் ஆற்றலை மதவாதமாக மாற்றவும் பிஜேபி முயன்றது. அதற்கு அதை சட்டவாத நடைமுறைக்குள் கொண்டுவர ஆர்.எஸ்.எஸ். முயன்றது. அது முடியவில்லை. அதனால் அதுவே அதை சிக்கலாக்கிப் பிரச்சினையை பெருக்க நினைத்தது. அதற்கும் முடியாதநிலையில் மற்ற அமைப்புகள்

நடத்தும் இத்தகைய நுழைவுகள் அவற்றின் சக்தியைக் கூட்டவே செய்யும். அவர்களது நோக்கம், சபரிமலைக்குப் பெண்களை வரவழைப்பதுதான். அது நடந்தாலும் அவர்களுக்கு நல்லதுதானே.

மதவாத அரசியல் முன்வைக்கப்படும் இச்சமூகத்தில், இதுபோன்ற போராட்டங்கள் மத உரிமையைக் கோருவதன் வழியாக, மதவாதமாக மாறுவதே நிகழும். அதில் இத்தகைய போராட்டங்கள் அந்த சக்திகளையே வலுப்படுத்தும். உண்மையில் இடதுசாரிகள் போராட வேண்டியது பிஜேபியின் இந்த இரட்டை நிலைகளை அம்பலப்படுத்தியே. பிஜேபி இந்துமதத்தை காக்கும் நிறுவனம் என்பதே இந்த ஆட்டத்தில் ஒரு உறுதிப்படுத்தப்பட்ட கருத்தியலாக மாறும். உண்மையில் கோவிலுக்குச் செல்ல முனையும் பெண்களை பாதுகாப்பது மட்டுமே மக்கள் பணி. பெண்களே போக விரும்பாத மனத்தடையை யார் நீக்குவது? அது முற்போக்காளர் வேலையா? இதைத்தான் பிஜேபி விளையாட்டு என்கிறேன். முற்போக்காளர்களை அவர்கள் ஆட்டத்தில் இழுக்கிறார்கள்.

இதே ஆட்டத்தைதான் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் ஈழத்தமிழர்களை புறக்கணிப்பதன் வழியாக ஆடுகிறார்கள். தமிழனா? இந்துவா? என்கிற விளையாட்டை நுட்பமாக உருவாக்குகிறார்கள். பாபர் மசூதியில் அவர்களது இரட்டை விளையாட்டு ஒரு புறம் இஸ்லாமியரை வென்றதாகக் காட்டுவது, மறுபுறம் எதிர்க்கும் அமைப்புகளை இந்துவிரோதியாகக் காட்டுவது. பாலியல் வன்கொடுமைகளில் மக்களை திசைதிருப்ப என்கவுண்டரைச் செய்வது, அதே பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட பாஜக மற்றும் பார்ப்பன உயர்சாதியினரை சட்டவாதத்திற்குள் வைத்து தீர்ப்பு என்ற பெயரில் காப்பது. மக்களை உளவியல்ரீதியாக கொலைவெறிகொண்ட போலி-மோதல் கொலைகளை ரசிக்கும் பாசிச மனம் கொண்டவர்களாக மாற்றுவது. உடனடித் தீர்வு என்ற மனநிலையை வளர்த்து, காஷ்மீர் சிறப்புச் சட்டம் 370-ஐ நீக்கி பல ஆண்டுகள் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு என்று படம் காட்டுவது. ஆக, இந்திய இறையாண்மையும், சட்டம் என்கிற கண்காணிப்பு கோபுரமும் இணைந்து, ஒரு புதியதொரு மதவாத இந்துத்துவ இறையாண்மையை நிலைநாட்டும் வடிவத்தை நோக்கி மொத்த இந்திய சமூகத்தை இழுத்து செல்வதே தற்போதைய இறையாண்மை நிறுவனங்களின் நடவடிக்கையாக உள்ளது.

*jamalan.tamil@gmail.com*

6

# பத்துவயதில் பயமுறுத்தும் பொதுத்தேர்வு

முனைவர் முருகையன் பக்கிரிசாமி

*அன்னச்சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*அன்னயாவினும் புண்ணியம் கோடி*
*ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்*

என்றார் பாரதி.

*தேடு கல்வியிலாத் தோரூரைத்*
*தீக்கு இரையாக மடுத்தல்''*

என்று கல்விக்கூடம் இல்லாத ஊரைத் தீயிட்டுக் கொளுத்துங்கள் என்று பொங்கி எழுந்தவரும் அவரேதான். ஆனால் இன்றையத் தமிழகத்தின் நிலைமை என்ன? எழுத்தறிவு விகிதம் 80.33. அதிலும் பெண்களின் எழுத்தறிவுவிகிதம் 73.44 மட்டுமே. எனவேதான் பிச்சை எடுத்தாவது பள்ளிகளைக் கட்டிப் படிக்கவரும் குழந்தைகளுக்கு மதியம் உணவும் தருவேன் என்றார் பெருந்தலைவர் காமராஜர். அதிகக் குழந்தைகளைப் பள்ளிக்குக் கொண்டு வந்தவர் என்ற பெருமையும் அவரையே சாரும்.

**கல்வி உரிமைச்சட்டமும் புதியகல்விக் கொள்கையும்:**

14 வயது வரையில் அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி தரவேண்டும் என்ற

நோக்கத்தில்தான் 2009 இல் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் 16 ஆவது பிரிவில் 5 மற்றும் 8 ஆம் வகுப்பு முடிவில் வாரியப் பொதுத்தேர்வு நடத்தவேண்டும் என்று குறிப்பிட்டாலும் இதையே 30 (1) இல் வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு 30(4) 1 இல் 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளின் இறுதியில் வழக்கமான ஒரு தேர்வு நடத்தப்பட வேண்டுமெனவும், (2) அதில் தோல்வியுறும் மாணவர்கட்கு உடனடி மறுதேர்வு நடத்தப்படவேண்டுமெனவும் (3) உடனடித் தேர்விலும் தோல்வியுற்றோர் அதேவகுப்பில் நிறுத்தம் செய்யப்பட வேண்டுமெனவும் (4) நிறுத்தம் செய்யப்படுவதும் நிறுத்தமின்றி மேல்வகுப்புக்கு அனுப்புவதும் அந்தந்த மாநில அரசுகளின் முடிவுக்கு உட்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உட்பிரிவு 1 இல் குறிப்பிட்டுள்ளதுபோல தற்பொழுதும் ஆண்டுத் தேர்வு நடத்தப்பட்டுக் கொண்டுதான் உள்ளது. பிறகு ஏன் அவசர அவசரமாகப் பொதுத்தேர்வு ஆணையைத் தமிழ்நாடு அரசு பிறப்பித்தது என்பதுதான் கல்வியாளர்களின் கவலையாக உள்ளது. மேலும் உட்பிரிவு 4 இல் நிறுத்தம் செய்வதும் செய்யாததும் மாநிலங்களின் விருப்பம் என்று குறிப்பிட்டிருந்தாலும் முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டும் நிறுத்தம் இல்லாத் தேர்ச்சி என தமிழக அரசின் முடிவின் உள்ளர்த்தம் என்ன என்பதும் புரியாமல் இல்லை. புதிய கல்விக் கொள்கையும்கூட வரைவு அறிக்கையாகத்தான் உள்ளதே தவிர இன்னும் சட்டமாகவில்லை என்பதே உண்மை.

தமிழக அரசு மட்டும் குழந்தைகளுக்குப் பொதுத்தேர்வு நடத்துவதில் இவ்வளவு அவசரம் காட்டுகிறது என்பதுதான் புரியாத புதிராக உள்ளது. மத்திய அரசுக்கு மிகவும் விசுவாசமாக உள்ளோம் என்பதைக் காட்டப் பிஞ்சுக் குழந்தைகளைப் பலிகடா ஆக்குவது ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று.

**தோல்வி முத்திரை**

எல்லோரும் படித்து விட்டால் எங்களுக்கு யார் ஓட்டு போடுவார்கள்? எங்களுக்கு யார் கொடி பிடிப்பார்கள்? ஆகவே அனைவருக்கும் கல்வி என்று ஒருபக்கம் கூறிவிட்டு உண்மையில் அவர்களைப் படிக்கவிடாமல் செய்வது அரசின் நோக்கமா என்ற ஐயம் மேலிடுகிறது. கல்வி குழந்தைகளின் அடிப்படை உரிமை. 14 வயது அதாவது எட்டாவது வகுப்புவரை இடைநிறுத்தம் இல்லாக்கல்வியை எல்லாருக்கும் அளிக்கவேண்டும் என்ற ‘கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009’ என்பது ஒரு கண்துடைப்பு நாடகமா? பத்து வயதுக் குழந்தைக்கு ஒரு பொதுத்தேர்வு என்ற அச்சத்தை உண்டாக்கி அதில் தோல்வியுற்றால் ‘பெயில்’ என்ற முத்திரை அக்குழந்தையின்

உள்ளத்தில் குத்தப்படும். ''பெயிலான நீ படிச்சது போதும்'' எனக்கூறி அப்பனும் ஆத்தாளும் அந்தக் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பமாட்டார்கள். குழந்தை தொடக்கக்கல்விகூட இல்லாமல் முடங்கிவிடும். ஏழை, கிராம விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகள் குறிப்பாகப் பெண்குழந்தைகள் நிலைமை என்னவாகும்?

கல்வியளிக்கும் சூழலில் சமத்துவம் இல்லையாம். ஆனால் சமமானத் தேர்வாம்! அம்மா ஆட்சியில் 5 வயதில் பொதுத்தேர்வு இல்லையாம்! ஆனால் அம்மாவின் வழி நடக்கும் ஆட்சியில் பொதுத்தேர்வாம்! படிப்பில் இடைநிறுத்தம் ஏற்பட வழிவகுக்கும் திட்டத்துக்கு ஏன் இவ்வளவு அவசரமோ?

அனைவருக்கும் தேர்ச்சி என்பது அப்படியே மேல்வகுப்புக்கு அனுப்புவது என்பது அல்ல பொருள். அந்தந்த வகுப்புக்குரிய தகுதியை உளவியல்ரீதியாக உண்டாக்குவது என்பதே அதன்பொருள். ஒன்றுமறியாப் பிஞ்சுக் குழந்தைகட்கு சூழலுக்கு ஏற்ற கல்வி தராமல் மண்டுக் குழந்தைகள் என்னும் மகுடஞ் சூட்டி வீட்டுக்கு அனுப்ப வேண்டாம் எனில் 5, 8 ஆம் வகுப்புக்கான பொதுத்தேர்வு அறிவிப்பினை உடனே அரசு திரும்பப் பெறவேண்டும்.

**தேர்வின் மீது அச்சமும் வெறுப்பும்**

10, 12 ஆம் வகுப்புக்களுக்கு மட்டும் பொதுத்தேர்வு நடத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் 2017-18 ஆம் ஆண்டிலிருந்து 11 ஆம் வகுப்புக்கும் பொதுத்தேர்வு கொண்டு வரப்பட்டது. ஆண்டுதோறும் தேர்வு என்பதில் மாணவரின் பதற்றம் அதிகமானது. பொதுத்தேர்வு நடைபெறும் ஆண்டுகளுக்கு இடையே ஓராண்டு இடைவெளி இருந்தது. மாணவரிடையே பதற்றத்தைக் குறைக்க வாய்ப்பு அளித்தது. ஆனால் 3 ஆண்டுகள் தொடர்ந்து பொதுத்தேர்வினைச் சந்திப்பதால் மாணவர்கட்குப் பொதுத்தேர்வின் மீது ஓர் அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியதோடு தேர்வின் மீதிருந்த ஆர்வத்தையும் குறைத்தது. பொதுத்தேர்வைப் பற்றிய ஒரு குறைந்த பட்சப் புரிதல்கூட இல்லாத வயதில் இப்படிப்பட்டத் தேர்வு அவசியமானதா என்பதை அரசு புரிந்து கொள்ளவேண்டும்.

**மனஅழுத்தம்**

பொதுத்தேர்வு என்றாலே பெற்றோருக்கு ஏற்படும் மனஅழுத்தம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பெற்றோரின் மனஅழுத்தமும் தாக்கமும் குழந்தைகள் மீதுதான் சுமத்தப்படும். மேலும் தேர்வில் விடை அளிக்கமுடியாத ஒரு வினாவுக்குச் சற்றுநேரத்தில் குழந்தை சரியாகப் பதில்கூறும். இது குழந்தைகளின் இயல்பான நிலையாகும். தேர்வுபயத்தில்கூட விடையைக் குழந்தை மறக்கக்கூடும். குழந்தைகளுக்குத் தேர்வு நோக்கில் பாடம்

நடத்தவேண்டிய அவசியம் இல்லை. குழந்தைகள் என்ன புரிந்திருக்கிறார்கள் எனக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியருக்குத் தெரிந்திருந்தாலே போதுமானதாகும்.

**திறன்வளர்ச்சி**

பொதுத்தேர்வு என்றவுடனே குழந்தைகள் படிப்பில் மட்டுமே நாட்டம் செலுத்தும். சிறப்பு வகுப்புக்களுக்கு அனுப்பப் பெற்றோர் ஆசைப்படுவர். பாடத்தைப் புரிதலைவிட விடைகளை மனப்பாடம் செய்யக்குழந்தைகள் தூண்டப்படுவர். செய்முறைப்பயிற்சி, திறன்வளர்ப்புப்பயிற்சி போன்றவை இருக்காது. இசை, நாட்டியம், ஓவியம் போன்றவற்றில் ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு வாய்ப்பு மறுக்கப்படும்.

**குழந்தைகளின் கல்வி நலன்**

எனவே, அரசு 5, 8 ஆம் வகுப்புக்களுக்கு பொதுத்தேர்வு என்பதை விலக்கிக் கொண்டு பள்ளிச் சூழ்நிலை குழந்தைகளுக்கு ஆர்வமூட்டும் வகையில் அமையுமாறு ஏற்படுத்திக் கொடுப்பதிலும் போதுமான தகுதிபெற்ற ஆசிரியர்களைப் பணியமர்த்துவதிலும் கவனம் செலுத்தவேண்டும். இன்றைய காலக்கட்டத்தில்கூட கழிவறை இல்லாத பள்ளிகள் அதிலும் குறிப்பாகப் பெண்குழந்தைகள் பயிலும் பள்ளிகள் உள்ளதாக அறிகிறோம். பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத பல பள்ளிகள் உள்ளன. இவற்றை எல்லாம் போக்குவதில் அரசு கவனம் செலுத்தவேண்டும்.

கல்வியில் முன்னேறிய நாடான பின்லாந்தில் 10-க்கு மேற்பட்ட வயதில்தான் பள்ளிகளில் கல்வி தொடங்குகிறது. செய்முறைக்கு முன்னுரிமை தரப்படுகிறது. அங்கு தேர்வுமுறை எளிதாக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்து வந்த பின்னும் தமிழகக்கல்வி அமைச்சர் குழந்தைகள் கல்வி நலனில் அக்கறை செலுத்தாமல் மத்திய அரசின் முரணான கல்விக்கொள்கைக்குத் துணைபோக வேண்டாமே !

7

# உலகமயமும் நுகர்வியப் பண்பாடும்

## தங்க. செங்கதிர்

*நகரத்தில் வாழும் நடுத்தர வர்க்கக் குடும்பம் அது. மனைவியும் கணவனும் அன்றைய இரவு உணவு செய்வது குறித்துப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். வீட்டின் அழைப்பொலி சப்தம் கேட்கக் கதவைத் திறந்தவர்களிடம், 'டிப்டாப்' உடையில் வந்த டெலிவரி பாய், ''டின்னர் ஆர்டர் பண்றீங்களா?'' என்ற கேள்வியுடன் உணவுப் பட்டியல் அடங்கிய அட்டையை நீட்டுகிறார். சமைக்கத் தயாராய் இருந்தவர்களுக்கு இன்றைக்கு மட்டும் ஆர்டர் செய்து சாப்பிடலாமே என்கிற சபலம் தோன்ற கணவனும் மனைவியும் 'ஆன்லைன்' உணவை ருசித்துச் சாப்பிடுகிறார்கள். இனிவரும் காலங்களில் அவர்களது அன்றாட இரவு உணவை அந்த 'ஆன்லைன்' உணவு நிறுவனங்களே தீர்மானிக்கப் போகின்றன என்ற சதி அந்த இணையருக்குத் தெரியாது!*

*ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து இறுதியில் மனிதர்களைக் கடித்த கதையாக நம் வீட்டின் அடுப்பில் இருந்த கொள்ளிக்கட்டையை உருவி, மரபுவழி உணவு உரிமைக்கு வேட்டு வைத்து,*

'ஆன்லைன்' உணவை நீட்டுகின்றன சுமோட்டோ, சுவிக்கி, ஊபர் ஈட்ஸ் போன்ற 'ஆன்லைன் உணவு' நிறுவனங்கள்.

நமது உணவு உரிமையைத் தட்டிப் பறித்த இந்தப் பன்னாட்டு நிறுவனங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து நேற்றுக் கிளம்பியவர்கள் இல்லை.

1991இல் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் தங்கள் வல்லாதிக்க நலனை விரிவாக்கம் செய்யும் பொருட்டு நிறுவிய 'காட்' ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட கணமே உலகமயப் புதைச் சேற்றுக்குள் சிக்கிக் கொண்டது இந்தியா.

உலகமயமாக்கல், புதிய தாராளவாதம் ஆகியவற்றின் வழிகாட்டுதலால் பிறந்த புதிய பொருளாதாரக் கொள்கையால் பன்னாட்டு வணிக நிறுவனங்களுக்கு ஏகபோக மூலதனக் குவிப்புக்கும் எல்லையற்ற சந்தை அனுமதிக்கும் வசதியாகிப் போனது. உலகமயத்தின் வரவால் வேளாண்மை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு பெருகியது. தொழில்நுட்பங்களின் மிகுதியான இறக்குமதியால் நமது மரபான தொழில்கள் படிப்படியாக அழிவுக்குள்ளாயின; பொதுத்துறை நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்து தனியார் துறையாகத் தடம்புரண்டன; இதனால் வேலைவாய்ப்புகள் மறுக்கப்பட்டன; பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக் காடாக நமது இயற்கை வளங்கள் பலி கொடுக்கப்பட்டன.

இந்தியா போன்ற வளர்முக நாடுகள் பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளைக்குக் கதவு திறந்து விட்டு வாசலில் காத்து நின்றன. மெய்யான மக்கள் நலன் ஆட்சியாளர்களோடு தொடர்பற்றதாகிப் போனது. குறிப்பாக கல்வி, மருத்துவம் உள்ளிட்ட மக்களுக்கு நேரிடையாக சேவையாற்ற வேண்டிய கடமையிலிருந்து அரசு விலகி நின்று வேடிக்கை பார்க்கிறது. அதனால் இந்தத் துறைகளில் தனியார் நிறுவனங்கள் புகுந்து தாண்டவமாடுகின்றன. அவர்களின் வசூல் எல்லைக்கு வரையறையேயில்லை. தனியார் பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களுக்கான கட்டண நிர்ணயங்கள் இருந்தும் அது காற்றில் பறக்கவிடப்படுகின்றன. அரசுப் பள்ளிகள் மீதான அரசின் பாராமுகத்தாலும் தனியார் பள்ளிகள் மீது கொள்ளும் கரிசனத்தாலும் தனியார் பள்ளிகளே தரமான பள்ளிகள் என்ற முடிவுக்கு மக்கள் எளிதில் வந்து விடுகிறார்கள். எனவே தனியார் துறையினரிடம் இலாபம் குவிகிறது. ஏனெனில் உலகமயம் விதித்திருக்கும் பொருளில் கல்வி ஓர் இலாபம் தரும் தொழில்.

''தனியார் மயம், தாராளமயம், உலகமயம் அமல்படுத்தப்பட்ட பிறகு இந்தியர்கள் அனைவரும் பணக்காரர்களாகி விடுவார்கள்'' என்று அதன் ஆதரவாளர்களான ஆட்சியாளர்களும்,

முதலாளிகளும் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார்கள். ஆனால் நடந்தது என்ன? பன்னாட்டு பகாசுர நிறுவனங்களின் இலாபவெறிக்கு இலக்காகி நமது விவசாயம் இருப்பு இழந்து போனது. வளர்ந்த நாடுகள் அந்தந்த நாடுகளின் வேளாண்மைக்கு அதிகப்படியான மானியத்தை வழங்கி விளைச்சலைப் பெருக்கி, குறைந்த விலையில் இந்தியா போன்ற வளர்முக நாடுகளுக்கு இறக்குமதி செய்வது சந்தைப்படுத்தியதன் காரணமாக, நம் விவசாயிகள் வியர்வை மழையில் நனைந்தும் வெயிலில் கருகியும் பாடுபட்டு விளைவித்த பொருட்களுக்கு சந்தையில் கட்டுப்படியான விலை கிடைக்காமல் போனது. இதனால் உண்டான மன வேதனையாலும், கடன் தொல்லையாலும் இந்தியாவில் சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து மரணமடைந்துள்ளார்கள்.

உயிருக்கே உத்திரவாதமற்ற நாட்டில் 'பணக்காரர்' என்ற சொல்லே பகட்டானதாக - போலித் தனம் நிறைந்ததாகத் தெரியவில்லையா நம் ஆட்சியாளர்களுக்கு? ''ஆதிக்கம் செலுத்தும் எந்த ஒரு வர்க்கமும் தனது மேலாண்மையை நிலைநிறுத்திக் கொள்வதற்காகத் தனது கருத்தியலை அந்த தேசத்தின் ஒட்டுமொத்த கருத்தியலாக முன்னிறுத்தும். அதை எல்லா இடங்களிலும் திணிக்கும்'' என்று இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்சிய சிந்தனையாளர் அந்தோனியே கிராம்ஷியின் கூற்று எத்தகைய பொருத்தப்பாடானது என்பதை நம் ஆட்சியாளர்களின் வாய்மொழி உரைகள் உறுதிப்படுத்துகின்றன.

நாம் காலையில் எழுந்ததும் பல் துலக்கப் பயன்படுத்தும் வேப்பங்குச்சியைப் பிடுங்கிக் கொண்டு டூத் பிரசைக் கொடுத்து, ''டூத் பேஸ்டில் உப்பிருக்கிறதா?'' ''காரமிருக்கிறதா?'' எனக் கேட்டு நமைச்சல் செய்த அமெரிக்க நிறுவனம், நம் வீட்டின் வாசலில் - வயல்வெளியில் - நீர்நிலைகளின் கரையில் எனக் கானகமெங்கும் பசுமை பொங்க கிளைத்து நின்று, தமிழர்களின் பாரம்பரிய மருத்துவ அறிவுப் பெட்டகமாய் விளங்கிய வேப்பமரத்திற்குக் காப்புரிமை வாங்கிக் கொண்டு அடாவடி செய்கிறது. ஏன் தெரியுமா? அமெரிக்க மக்களிடத்தே வேப்பங்குச்சியை விற்றுப் பணம் பார்ப்பதற்காகவும், அவர்களின் நலனைக் காப்பதற்காகவும். 'டபுள்யு. ஆர். கிரேஷ்' நிறுவனம் வாங்கியிருந்த காப்புரிமையை நம் சூழலியலாளர்கள் போராடி மீட்ட கதை வேறு. இப்படியாக பல தேசிய இன மக்களின் முன்னோர் அறிவுச் செல்வத்தைச் சுரண்டி அதில் இலாபம் கறக்கும் போக்கு பன்னாட்டு நிறுவனங்களுக்கு எளிய கலை. குறிப்பாகத் தமிழகத்தில் இயற்கை வேளாண்மை இயற்கை உணவுகள் குறித்த விழிப்புணர்வுகள் பரவலாக்கம் பெற்றுவரும் இச்சூழலில் அதனைத் தனது இலாபவெறிக்குத் தீனியாக்கிக் கொள்ளப் பன்னாட்டு

நிறுவனங்கள், இயற்கை வேளாண் உணவுப் பொருட்கள் ( Organic food) விற்பனை அங்காடியைச் சென்னை உள்ளிட்ட நகரங்களில் ஆங்காங்கே தொடங்கி கொள்ளை இலாபம் சம்பாதித்து வருகின்றன. ஆனால் அந்நிறுவனங்கள் விற்கும் இயற்கை வேளாண் பொருட்கள் 100 விழுக்காடு இயற்கையான முறையில் விளைந்தவைதானா என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறது ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழக ஆய்வு. உடல்நலத்திற்கு உவப்பான உணவாகக் கருதப்படும் வெங்காயத்தையும் பூண்டையும் அருவறுக்கத்தக்க பொருளாக தொலைக்காட்சி விளம்பரங்கள் காட்டுகின்றன. இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், ''வெங்காயம் - பூண்டு ஆகியவற்றைத் தாம் பயன்படுத்துவதில்லை'' என்று பொது வெளியில் பெருமிதம் கொள்கிறார்.

பூண்டு, வெங்காயம் போன்ற மருத்துவக் குணமுள்ள நல்ல உணவுப் பொருட்களை மக்களிடமிருந்து அபகரித்துக் கொள்ள பன்னாட்டு நிறுவனங்கள் போட்டி போட்டு நிற்கும் தற்போதைய சூழலில், அவரின் இந்தப் பேச்சைத் தற்செயலானதாகவோ, எதார்த்தமானதாகவோ எடுத்துக் கொள்ள முடியாது. அதில் நுண்ணிய அரசியல் ஒழிந்திருக்கிறது.

உலகமயம் 'தான்' என்கிற சுயநலத்தைத் தூண்டி வலுப்படுத்தி வருகிறது. 'தானும் தன் குடும்பமும் சுகபோகமாக வாழவேண்டும், 'தான் விலையுயர்ந்த உடைகளை உடுத்த வேண்டும்', 'சொகுசுக் கார்களில் பயணிக்க வேண்டும்' என்று தனக்கென ஓர் உலகத்தைக் கட்டமைத்துக் கொண்டு சுயநல ஊஞ்சலில் பயணிக்க உலகமயம் வழிகாட்டுகிறது. மக்கள் நலன் சார்ந்த பொது சிந்தனை அவர்களை நெருங்கவிடாமல் பார்த்துக் கொள்கிறது. ஏனெனில் மக்கள் நுகர்வுக்கு அப்பால் செல்வதை உலகமயம் விரும்புவதில்லை.

'சந்தையில் இது புதுசு' என்ற தலைப்புடன் தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்கள் போட்டி போட்டுக் கொண்டு புதிதாக வந்திருக்கும் வாகனங்களை விளம்பரப்படுத்துகின்றன. இந்தப் புதிய வாகனங்கள் ஏற்கனவே ஒருவர் பயன்படுத்தி வருகின்ற வாகனத்தோடு ஒப்பிடுகையில் சின்னஞ்சிறு மாற்றங்களைக் கொண்டவையே. ஆனால் அதையே உயர்தனி மொழியில் பேசி, பழைய வாகனத்தை விற்றவிட்டுப் புதிய வாகனத்தை வாங்க வைக்கும் தரகராகச் செயல்படுகின்றன ஊடகங்கள். கடந்த ஆண்டு வாங்கிய வாகனங்கள் பன்னாட்டு நிறுவனங்களால் திட்டமிட்டே பழையதாக மாற்றப்படுகிறது.

மின்னணுச் சாதனங்கள், கைப்பேசிக் கருவிகள் போன்றவற்றிலும் சிறிய அளவிலான மாற்றங்களைச் செய்து

விற்பனைத் தொகையை அதிகரித்து விற்கின்றார்கள். மேலும் 'கழிவு' என்ற பெயரில் மக்களைக் கவரும் வகையில் விளம்பரப்படுத்தி காலாவதிகாலப் பொருட்களை அவர்கள் தலையில் கட்டிவிடுகின்றனர். 'நிக்கி சூ' என்ற இந்தோனேசிய செருப்புத் தொழில் நிறுவனம் ஒரு நடிகருக்கு ஒரு தடவை மட்டும் விளம்பரத்தில் தோன்றுவதற்கு 2 கோடி டாலர்களை வழங்கியுள்ளது. இது அந்த நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளிகளின் கூலித்தொகையை விட 10 மடங்கு அதிகம். மக்களை வேறெங்கும் திரும்பவிடாமல் தங்கள் நிறுவனப் பொருட்களை நோக்கிக் கவனத்தைக் குவிப்பதற்காக கோடிக்கணக்கில் செலவழித்து சினிமா, கிரிக்கெட் பிரபலங்களை வைத்து விளம்பரங்களைத் தயாரிக்கின்றனர். விளம்பரத்திற்கு ஆகும் செலவையும் இறுதியில் மக்களே சுமக்க வேண்டியிருக்கிறது. தொலைத் தொடர்புச் சந்தையிலும் மக்களைத் தன் வயப்படுத்த ஒரு ஆண்டிற்கு முற்றிலும் இலவசம் என இணைய சேவையை அறிமுகப்படுத்தி போட்டியிலிருந்த இதர நிறுவனங்களை ஓரங்கட்டிவிட்டு, இன்று முற்றுரிமை நிலையில் தான்தோன்றித்தனமாகக் கட்டணத்தை நிர்ணயித்து இலாப வெறியில் திளைத்து வருகிறது அம்பானியின் 'ஜியோ' நிறுவனம்.

கேழ்வரகுக் கூழும், வரகுக் கஞ்சியும், கம்புத் தோசையும் இன்றைய தலைமுறை அறியாத உணவுகளாக மாறிவிட்டன. வாழும் சூழலுக்கு ஏற்ப நம் முன்னோர்களால் உண்ணப்பட்ட உணவு ரகங்களை ஏளனம் செய்து ஒதுக்கியதன் காரணமாக இன்று பீட்சா, பர்க்கர் போன்ற மேற்கத்திய உணவு வகைகள் நாக்கின் அருகே வந்து நர்த்தனம் ஆடுகின்றன. ஊடகங்கள் கட்டமைத்த விளம்பரங்களால்தான் ஜியோவின் நிறுவனத்திற்கு இந்த இலாபம் கைகூடியது.

விளம்பரங்கள் நம் மக்களுக்கு உளவியல் ரீதியான நெருக்கடியைக் கொடுத்து வருகிறது என்பதை மறுக்க முடியாது. இன்று ஏழை எளிய மக்கள் அனைவரது வீட்டிலும் தொலைக்காட்சி உள்ளது. ஆனால் அவர்களின் வயிற்றுக்கு உணவு உத்திரவாதமில்லை. ஆனால் தொலைக்காட்சி விளம்பரமோ எச்சிலை ஊற வைக்கம் உணவுப் பதார்த்தங்களைக் காடசிப்படுத்தி, வயிற்றுப் பசியுடன் வாழ்க்கையைக் கழிக்கம் ஏழைகளின் வயிற்றெரிச்சலை வாங்கிக் கொட்டிக் கொள்கிறது.

மேலும் குழந்தைகள் நல்ல உணவின் மீது கை வைத்து, தத்தித் தழுவி உண்ண எத்தனிக்கும் ஒவ்வொரு முறையும் தொலைக்காட்சி விளம்பரங்கள் தட்டை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு குர்குர்ரே, லேய்ஸ், மாகி, கிண்டர்ஜாய், சீட்டோஸ், சிட்டால் போன்ற

தீங்கிழைக்கும் தீனிகளை ஊட்டிவிடுகின்றன. தொலைக்காட்சிகளில் காட்டப்படும் பெரும்பாலான உணவுகள் 'ஜங்புட்' எனப்படும் குப்பை உணவுகளாகவே இருக்கின்றன. இவை அனைத்தும் மெல்லக் கொல்லும் விசம் என்பதை அறிந்தும் பணத்திற்காகப் பன்னாட்டு பெரு நிறுவனங்களிடம் பல்லிளித்துக் கொண்டு, குழந்தைகளின் எதிர்காலத்தைக் காவு கொடுத்து வருகின்றன தொலைக்காட்சி நிறுவனங்கள்.

மேலே கண்ட நொறுக்குத் தீனிகள் கிராமப்புறக் கடைகளில் கூட பல வண்ணங்களில் காற்றடைத்த பைகளில் சரம்சரமாகத் தொங்கி குழந்தைகளைக் கவர்ந்திழுத்து வருகின்றன. சில பெற்றோர்கள் பன்னாட்டு நிறுவனங்களின் உணவு அரசியலை அறியாது தனது குழந்தைகளுக்கு இந்தக் குப்பை உணவுகளை வாங்கிக் கொடுத்து அவர்கள் உண்பதைப் பார்த்து இரசித்துக் கொண்டிருக்கிறார்கள். உலகமயம் விதைத்த உடல்நலத்திற்குச் சவால் விடும் இந்த உணவுகள் மக்களிடத்தில் பல்வேறு நோய்களைக் கொண்டு வந்து சேர்க்கின்றன. ஊட்டச்சத்து குறைந்த கொழுப்புச் சத்துமிகுந்த துரித உணவுகளால் இதயநோய், புற்றுநோய், நீரழிவு, உடல்பருமன் போன்ற உடல்நலச் சிக்கல்கள் உண்டாகின்றன. இதனால் மனிதனின் வாழ்நாள் குறைந்து வருவதை மருத்துவ ஆய்வுகளின் மூலம் ஒப்பீடு செய்து எதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும். இனிவரும் காலங்களில் நிலைமை இன்னும் மோசமாகி இளம் வயது மரணங்கள் அதிகரிக்கும் என்று மருத்துவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள். ஆனால் பொது சமூகம் அது பற்றியெல்லாம் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. இன்றைய சீரற்ற குப்பை உணவு முறையால் பெண்கள் இளம் வயதிலேயே பருவமெய்தி விடுகிறார்கள். சில பத்தாண்டுகளுக்கு முன்பெல்லாம் ஒல்லியான உருவமைப்பு உடையவர்களைத் தெருக்களில் அதிகமாகப் பார்க்கமுடியும். ஆனால் இன்று உடல் பருமன் என்பது தவிர்க்க முடியாததாகி, அதற்கே தனியே மருத்துவம் பார்ப்போரும் உண்டு.

தொலைக்காட்சிகளில் காட்டப்படும் பெரும்பாலான விளம்பரங்கள் எளியோரை நகையாடுவதாகவும், எதார்த்த சிந்தனைக்கு எதிரானதாகவும் இருப்பதைக் காணமுடிகிறது.

அட்சய திருதியை நாளன்று நம்மிடம் ஒரு கிராம் தங்கத்தையாவது திணித்து, சட்டைப்பையில் உள்ளதைப் பிடுங்கிக் கொள்ள நகைக்கடை முதலாளிகளும், தொலைக்காட்சி நிறுவனர்களும் வரிந்து கட்டி நிற்கிறார்கள். அன்றைய நாளில் ஒரு கிராம் தங்கத்தையாவது வாங்கிவிட வேண்டுமென்று, நெரிசலில் பிதுங்கி அதனை வாங்கிச் செல்கிறார்கள். இந்த விடயத்தில் மக்களின்

மூளையில் புகுத்தப்பட்டிருக்கின்ற மூடத்தனத்தை நகை முதலாளிகள் நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இன்னொரு விளம்பரம் திருமணம் செய்து கொள்ளாமலே Living together முறையில் ஒரு மங்கையோடு குடும்பம் நடத்திவரும் நகரத்தில் வாழும் தன் மகனைச் சந்திக்கக் கோபத்தோடு வரும் பெற்றோர்கள் அந்த மங்கை போட்டுக் கொடுத்த தேனீரில் சொக்கிப்போய் தனது மகனின் அந்த அறமற்ற செயலை அங்கீகரித்தது போல் புன்னகைக்கிறார்கள். தமிழர் பண்பாட்டைக் கேளிக் கூத்தாக்குகிறது அந்த விளம்பரம். இவ்வாறாக நம் இளைஞர் இளைஞிகளைப் பெருமளவு சீரழிவை நோக்கித் தள்ளி விடுகின்றன இன்றைய ஊடங்கள்.

நுகர்வியம் பெண்களைச் சந்தைப் பொருளாகப் பாவிக்கிறது. அதனால்தான் ஆண்கள் பயன்படுத்துகின்ற உள்ளாடை விளம்பரங்களுக்குக்கூட பெண்களை ஆபாசமாகக் காட்டுகிறது. சின்னத்திரையில் காட்டப்படும் சினிமா மற்றும் நெடுந்தொடர்கள் குடும்ப அமைப்பைச் சிதைப்பதற்கும், பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கும் ஒருவகையில் காரணமாக இருப்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. ஊடகங்கள் திணித்த செயற்கையான நுகர்விய வறட்சியால் வாங்கும் திறனற்ற இளைஞர்கள் தங்கள் நுகர்வு வெறியைத் தீர்த்துக்கொள்ள கடத்தல் செயலில் ஈடுபட்டு, அது கொலை, கொள்ளையில் முடிந்த சம்பவங்களும் உண்டு. உலகமயப் பொருளியல் சுரண்டலும் நுகர்வியப் பண்பாடும் நாட்டில் குற்றச் செயல்பாடுகளை அதிகரிக்கச் செய்துள்ளது என்கிறார்கள் சமூக நோக்கர்கள். பாலியல் வன்முறை, கடத்தல், கொலை, கொள்ளை நிகழ்வின் போதும் குற்றவாளிகளை கண்டுபிடித்து விடுகிறோம். ஆனால் அதற்கான தூண்டல் காரணிகளை அடையாளம் காணத் தவறுகிறோம். ஏனெனில் அவர்கள் செல்வாக்கு மிக்கவர்கள்; அரசையே தீர்மானிக்கும் ஆற்றல் கொண்டவர்கள்!

வலிமையான ஊடக விளம்பரங்களின் வழியே இல்லத்திலிருக்கும் மனித மூளைக்குள் புகுந்து, சந்தையில் அதைச் சாத்தியப்படுத்துகிறது. உலகமயத்தின் சந்தைத் தளத்திலிருந்து யாரும் தப்பித்துவிட முடியாது. அத்தகைய மேலாதிக்கக் கட்டமைப்பால் அது பின்னப்பட்டிருக்கிறது.

ஏகாதிபத்தியவாதிகளில் இன்றைய அபரிமிதமான வளர்ச்சிக்கு உலகமய முதலாளிகளால் கட்டியெழுப்பப்பட்ட நுகர்வியப் பண்பாட்டுச் சுரண்டலே காரணமாகும்.

இருபதாம் நூற்றாண்டின் முதற்பாதியில் போர்கள் நடத்தி மக்களையும் அரசையும் அடிமைப்படுத்தினர். ஆனால் இன்று

பன்னாட்டு வணிக நிறுவனங்கள் உலகத்தின் சந்தையைத் தக்கவைக்க தம் நிறுவனப் பொருட்களுக்கு மக்களை அடிமைப்படுத்தும் நுகர்வியப் போரை நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்தப் போரில் ஆட்சியாளர்களும் பன்னாட்டு நிறுவனத்தினரும் ஓரணியில் நிற்கிறார்கள். ஏகாதிபத்திய உலகமயமும், உலகமயச் சட்டத்திற்குள் கட்டுண்டு கிடக்கும் இந்திய ஆளும் வர்க்கமும் நம்மைச் சுரண்டிக் கொழுக்கும் நட்புச் சக்திகளாகத் திகழ்கின்றார்கள்.



உலகத்தையே சந்தையாகவும் உழலும் யாவரையும் நுகர்வோராகவும், இலாப வெறியே இலட்சியமாகவும் கொண்டு இயங்கி வரும் உலகமயம், மோசமான பண்பாட்டு விளைவுகளையும், சுற்றுச்சூழல் சீர்கேடுகளையும் உண்டாக்கி வருகிறது. சுவாசிக்கும் காற்றைக்கூட காசு கொடுத்து முகர வேண்டிய அவல நிலை நம்மைச் சூழ்ந்துள்ளது. இந்த நேரத்தில் ''மனித இனத்திற்கு எச்சரிக்கை'' என்ற பெயரில் 'அக்கறையுள்ள அறிவியலாளர்கள் சங்கம்' வெளியிட்ட அறிக்கை நினைவுக்கு வருகிறது. அது, ''எல்லையற்ற பொருள் குவிப்பின் ஆசையால் வேரூன்றியுள்ள மரபான கலாச்சார அமைப்புகளை மாற்றியமைப்பது மிக அவசரமான தேவையாகியுள்ளது''. இத்தகைய புரிதலோடு ஏகாதிபத்தியப் பண்பாட்டுச் சூழலுக்கு எதிராகப் பாடாற்ற வேண்டியது நமது வரலாற்றுக் கடமை.

8

# இந்தியாவின் பாதுகாப்புச் சட்டங்கள்

## பகவதி பிரசாத்

*தமிழில்:* **நிழல்வண்ணன்**

தடுப்புக் காவல் சட்டம் நாட்டுப் பிரிவினையின் போது வன்முறையினாலும் இடப்பெயர்வினாலும் எதிர்கொண்ட சவால்களைச் சமாளிப்பதற்காக ஒரு தற்காலிக நடவடிக்கையாகக் கொண்டுவரப்பட்டது. குற்றம் சாட்டப்படாமலேயே ஓராண்டுவரை தனிநபர்களைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கு அந்தச் சட்டம் அரசாங்கத்துக்கு அதிகாரமளித்தது.

தற்காலிகமாக 12 மாதகாலத்திற்குத் தடுப்புக் காவல் சட்டத்தை அறிமுகப்படுத்தியபோது, நீடித்த காலத்திற்கான சட்டங்களை இயற்றுவதற்கு முன்பு நிரந்தரத் தடுப்புக் காவல் அதிகாரங்கள் குறித்துத் ''தீவிரமான ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது'' என்று அப்போதிருந்த உள்துறை அமைச்சர் கூறினார்.

இருப்பினும், அந்தச் சட்டம் ஆண்டுதோறும் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, ஏறத்தாழ இருபது ஆண்டுகளாகத் திரும்பத் திரும்பப் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே வந்து, இறுதியாக 1969 இல் காலாவதியாவதற்கு விடப்பட்டது.

நாகலாந்தில் பிரிவினைவாத இயக்கங்களை எதிர்கொள்வதற்காக ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் 1958 இல் இயற்றப்பட்டது. அது காவல்துறையுடன் இணைந்து ‘கலவரப் பகுதிகள்’ என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுவதற்கு இராணுவத்திற்கு அதிகாரமளித்தது, அதேநேரத்தில் காவல்துறையை விட குடிமக்களுக்கு எதிராக பெரும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குப் படைவீரர்களுக்கு அனுமதியளித்தது.

1972 இல் அந்தச் சட்டம் வடகிழக்கு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் விரிவாக்கப்பட்டது, 1977-க்கும் 1983-க்கும் இடையில் அந்தச் சட்டம் பஞ்சாபில் நடைமுறைப்படுத்தப்பட்டது, 1990 இல் ஜம்மு-காஷ்மீரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அரசுப்படைகள் செய்த மனித உரிமை மீறல்களுக்கு நிறுவன ரீதியான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதை ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் நிரூபித்துள்ளது. இந்த நிகழ்ச்சிப்போக்கில் அது நாட்டின் பல பகுதிகளில் குடிமக்களின் பல தலைமுறைகளின் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

நேருவின் அரசாங்கம் பாராளுமன்றத்தில் ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை நிறைவேற்றிய போது, ஒரிசாவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சுரேந்திர மொஹந்தி பாராளுமன்றத்தில், ‘‘நாம் சுதந்திர இந்தியாவை விரும்புகிறோம். ஆனால் முள்வேலி சூழ்ந்த, வதைமுகாம்களைக் கொண்ட, ஒரு சார்ஜன்ட் கண்ணில் படும் எந்த நபரையும் சுடமுடிகிற அதிகாரம் கொண்ட, ஒரு சுதந்திர இந்தியாவை நாம் விரும்பவில்லை’’ என்று கூறினார்.

அரசாங்கம் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழிருந்த தடுப்புக் காவலில் வைக்கும் அதிகாரத்தை சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்திற்கு மாற்றித் தந்துவிட்டது. அந்தச் சட்டம் அமைப்புக்களை ‘சட்டவிரோதமானவை’ என்று அறிவிக்கவும், அவற்றின் உறுப்பினர்களை வரையறைக்கு உட்படுத்தவும் விசாரணைக்கு உட்படுத்தவும் அதிகாரத்தை அளித்துள்ளது.

‘சட்டவிரோதம்’ என்ற சொல்லாக்கம் தொடக்கத்திலிருந்தே தெளிவற்றமுறையில் வரையறுக்கப்பட்டு, அரசு தொல்லையாகக் கருதும் பரந்துபட்ட பல நடவடிக்கைகளைக் குற்றமயமாக்குவதற்கு வழிவகை செய்கிறது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ், பிணை பெறுவது மிகமோசமான வகையில் கடினமாக்கப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் குற்றப்பத்திரிக்கை தாக்கல்

செய்யப்படாமலேயே ஆறுமாதங்கள் வரை காவலில் வைக்கப்படலாம். கொலைக் குற்றங்களில்கூட, குற்றம் சாட்டப்பட்டவருக்கு முழுவிவரங்களும் தரப்படவில்லை என்றால் மூன்று மாதங்களில் பிணை பெற்றுவிட முடியும்.

ஒரு தடுப்புக்காவல் சட்டமாக, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் பலநேரங்களில் மிகவும் மோசமான வகையில் தவறாகப் பயன்படுத்தப்பட்டு, அரசியல் உள்நோக்கம் கொண்ட தடுப்புக் காவல்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் இட்டுச் சென்றுள்ளது. தடுப்புக்காவல் சட்டத்தைப் போல அல்லாமல் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் குறிப்பிட்ட கால அளவில் மறுபரிசீலனைக்கு உட்படுத்தவேண்டிய பிரிவை அகற்றிவிட்டது. இவ்விதமாக, அது பாராளுமன்றம் திரும்பப் பெற்றுக்கொள்ளாதவரை காலவரம்பின்றி நீடித்துக் கொண்டிருக்கும்.

1969 இல் தடுப்புக்காவல் சட்டம் காலாவதியானதுமே உள்நாட்டுப் பாதுகாப்புப் பராமரிப்புச் சட்டம் ('மிசா') கொண்டுவரப்பட்டது. பழைய சட்டத்தின் தடுப்புக் காவல் அதிகாரம் புதிய பெயரில் நிறுவப்பட்டு, 1975 இல் இந்திராகாந்தி அரசாங்கம் தேசிய நெருக்கடி நிலையை அறிவித்தபோது பலப்படுத்தப்பட்டது.

மிசா சட்டம் அரசாங்கத்தை எதிர்த்த அரசியல் எதிர்ப்பாளர்கள், தொழிற்சங்கங்கள் குடிமைச் சமூகக் குழுக்கள் ஆகியோருக்கு எதிராக மிகவும் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டது. 1977 இல் காங்கிரஸ் அரசாங்கம் தோற்றுப்போனபோது, திரும்பப் பெறப்பட்டது.

தேசியப் பாதுகாப்புச் சட்டம் 1980 இல் கொண்டுவரப்பட்ட ஒரு சிறப்புச் சட்டமாகும், அது, ''வக்கீல் இல்லை, அப்பீல் இல்லை, வாதம் இல்லை'' என்று பேசப்பட்ட சட்டமாகும். அதன் தடுப்புக் காவல் அதிகாரங்களில், அது தடுப்புக் காவல் சட்டமும் மிசா சட்டமும் போன்றதாகவே இருந்தது. சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்திற்கு நெருக்கமானதாக இருந்தது. இதிலும் மோசமான மனித உரிமைப் பிரச்சனைகள் இருந்தபோதும், இதுவும் மறுபரிசீலனைக்கு இடமற்றதாகவே இருந்தது.

இந்தச் சட்டம் மத்திய, மாநில அரசாங்கங்களுக்குத் தனிநபர்களை அதிகபட்சமாக 12 மாதங்கள் வரை தடுப்புக் காவலில் வைப்பதற்கு அதிகாரம் அளிக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலுக்குக் காரணம் என்ன என்றுகூட பத்துநாட்கள் வரை குற்றம் சாட்டப்பட்டவருக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. 'பொதுநலன்' அடிப்படையில், தடுப்புக் காவலுக்கு ஆதரவாக தகவல் தராமல் இருப்பதற்கும், இந்தக் காலகட்டத்தில் தடுப்புக் காவலில் இருப்பவர் ஒரு வழக்கறிஞரை வைத்துக்கொள்ளக்கூட அனுமதிக்காமல்

இருப்பதற்கும் அரசாங்கத்துக்கு அதிகாரம் இந்தச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பாதுகாப்புச் சட்டம் நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மிகவும் கொடூரமான சட்டங்களில் ஒன்றாகும். அது தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு எளிதாக இடமளிப்பதாகவும் இருக்கிறது.

1980-களின் மத்தியில், பிரிவினைவாத இயக்கங்கள் நாட்டில், குறிப்பாகப் பஞ்சாபில் ஆதரவைப் பெற்றபோது, பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (தடா) கொண்டு வரப்பட்டது. ''செயலாலோ, பேச்சாலோ அல்லது எந்த ஓர் ஊடகம் வழியாகவோ சீர்குலைவு நடவடிக்கைகள்'' என்ற ஒரு தெளிவற்ற வரையறையே இதில் கொடுக்கப்பட்டிருந்தது, அதில் எந்த வடிவத்திலான எதிர்ப்பு உட்பட, மிகவும் பரவலான பல்வகை நடவடிக்கைகள் அடங்கியிருந்தது.

''பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள்'' என்று தேசிய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில், பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகக் குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிப்பதற்காக, இந்தச் சட்டத்தின் கீழ் 'தடா' சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. தடா சட்டம் புதிய குற்றச் செயல்களை உருவாக்கியது, காவல்துறையின் அதிகாரங்களை அதிகரிக்கச் செய்தது. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு இருந்த சட்டப் பாதுகாப்பைக் குறைக்கச் செய்தது. தடா சட்டத்தின் கீழ் காவல்துறையினரிடம் அளித்த வாக்குமூலங்கள் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அது காவலில் உள்ளவர்களைத் துன்புறுத்தவும் சித்திரவதைக்கு உள்ளாக்கி வாக்குமூலங்கள் பெறுவதற்கும் வழிவகுத்தது.

பயங்கரவாதத்தை எதிர்த்த நடவடிக்கை என்ற பெயரில், இந்தச் சட்டம் விளிம்புநிலை சமூகங்கள் மற்றும் தொழிற்சங்கங்களைத் தடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. தடா சட்டம் நடப்பிலிருந்த 1985 இலிருந்து 1995 வரை 76,000 பேர் கைது செய்யப்பட்டனர். இந்தக் கைதுகளில் தண்டனை விகிதம் ஒரு விழுக்காட்டுக்கும் குறைவாகத்தான் இருந்தது. அதன் பொருள் பல்லாயிரக்கணக்கானோர் தவறான வகையில் சிறைப்படுத்தப்பட்டிருந்தனர் என்பதாகும்.

அமெரிக்காவில் 2001 செப்டம்பர் 11 அன்று உலக வர்த்தக மையத்தின் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து, ஆட்சியிலிருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாக முன்மொழிந்தது. இந்த சட்ட

வரைவு, குடிமைச் சமூகத்தின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில், பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (பொடா), தடா சட்டத்தின் பல பிரிவுகளை மீண்டும் சேர்த்துக்கொண்டு, பாதுகாப்புச் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்துவது தொடர்ந்தது. பொடா சட்டம், தடா சட்டத்தின் அதிகரிக்கப்பட்ட காவல்துறை அதிகாரங்களைச் சேர்த்துக்கொண்டது. குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு இருந்த சட்டரீதியான உரிமைகளைக் குறைத்து, காவலில் வைத்துப் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவும் சிறப்பு நீதிமன்றங்களை நிறுவவும் வழிவகை செய்தது.

அதற்கு முந்தைய சட்டங்களைப் போலவே, பொடா சட்டமும் ‘பயங்கரவாதம்’, ‘பயங்கரவாத நடவடிக்கைகள்’ ஆகிய சொற்களுக்குத் தெளிவான விளக்கங்களை அளிக்கவில்லை. இது இந்தச் சட்டத்தைப் பாகுபாடான முறையில் பயன்படுத்துவதற்கு இடமளித்தது. எடுத்துக்காட்டாக, சிறுபான்மையினர் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக சந்தேகிக்கப்பட்ட இந்து தேசியவாதக் குழுக்களுக்கு எதிராக பொடா சட்டம் ஒருபோதும் பயன்படுத்தப்பட்டதில்லை.

மும்பை பயங்கரவாதத் தாக்குதல் நடந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே தேசியப் புலனாய்வு முகாமை சட்ட வரைவு 2008 இல் நிறைவேற்றப்பட்டது. இந்த என்.ஐ.ஏ. சட்டம் நாட்டின் எந்தப் பகுதியிலும் பயங்கரவாத வழக்குகளில் புலனாய்வு செய்வதற்கு ஒரு மைய முகாமையை தேசியப் புலனாய்வு முகாமையை அமைப்பதற்கு அனுமதியளித்தது.

அது வழக்குகளை விசாரிப்பதற்கு சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதற்கு அதிகாரமளிக்கிறது. தடா சட்டத்தில் கண்டது போலவே இதிலும் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான அடிப்படைகள் இருக்கின்றன. அதற்கும் மேலாக, என்.ஐ.ஏ.-வில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களின் பட்டியல் 1967 இன் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்திலிருந்தவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இது 1967 சட்டத்தின் குற்றங்களையும் சிறப்பு நீதிமன்றங்களில் விசாரிக்க வழி ஏற்படுத்தியுள்ளது. 1967 சட்டத்தில் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கும் விதிமுறை இல்லை. தேசியப் புலனாய்வு முகாமை நடவடிக்கைகளின் கீழ் (முந்தைய தடாவைப் போல) சாட்சியங்களின் அடையாளம் இரகசியமாக வைக்கப்படலாம், அதன் மூலம் குற்றம் சாட்டப்பட்டவர் சார்பாக குறுக்குவிசாரணைக்கான வழி அடைக்கப்படுகிறது.

*பொடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதை எதிர்த்த மக்கள் இயக்கங்களால் 2004 இல் அது திரும்பப் பெறப்பட்டது. ஆனால் அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டதுடன், ஒட்டுமொத்த தடுப்புக் காவல் சட்டமாகப் பயன்படுத்துவதற்கு வசதியாக சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967 சட்டத்தை அரசாங்கம் திருத்தியது. திருத்தப்பட்ட அந்தச் சட்டம் 'சட்டவிரோத நடவடிக்கை' என்பதற்கான வரையறையில், திரும்பப்பெறப்பட்ட பொடா சட்டத்திலிருந்து 'பயங்கரவாதச் செயல்' மற்றும் 'பயங்கரவாத அமைப்பு' ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் திருத்தப்பட்டது.*

*2008 நவம்பர் 26 இல் மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, பொடா மற்றும் தடா ஆகியவற்றுக்கு இணையான கூடுதல் பிரிவுகள், அதாவது, அதிகபட்ச காவல் விசாரணை, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே சிறையில் அடைத்தல், பிணையில் விடுவதற்கான கட்டுப்பாடுகள் ஆகியவை இத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. எதிர்பார்த்த அச்சுறுத்தல் இல்லையென்றால், ஓர் அசாதாரணச் சட்டம் நீடிக்கத் தேவையில்லை என்ற ஒரு பிரிவும் இதில் அடங்கும். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் போல, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் இப்பிரிவு இல்லை.*

**காலனிய காலத்திலிருந்து சமகாலம் வரை**

**காலனிய காலம்:** *1818 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வங்காள ஒழுங்குமுறைச் சட்டம்தான் காலனிய இந்தியாவின் முதலாவது தடுப்புக் காவல் சட்டம் ஆகும். அரசின் பாதுகாப்பை பாதுகாப்பது என்ற பெயரில், அது தனிநபர்களை தனிப்பட்ட கட்டுப்பாடின் கீழ் வைத்துக்கொள்வதற்கு அதிகாரம் அளித்தது. ''எந்த நீதி விசாரணைக்கும் போதுமான காரணங்கள் இருக்க வேண்டிய அவசியமில்லை.'' 1818 ஒழுங்குமுறைச் சட்டம் இறுதியாக இந்தியா முழுமைக்கும் விரிவாக்கப்பட்டு, 1927 வரை நடப்பில் இருந்துவந்தது. அது விடுதலைக்கு முந்தைய இந்தியாவில் தேசியவாதத்தின் மீது அனுதாபம் கொண்டவர்களைக் காவலில் வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது.*

**சமகாலம்:** *இந்தியாவில் உள்ள அனைத்துத் தடுப்புக்காவல் சட்டங்களும் எதிர்ப்பைச் குற்றச் செயலாக்கும் இந்த ஒழுங்குமுறைச் சட்டத்தின் கோட்பாடுகளையே பிரதிபலிக்கின்றன. இன்றைய சாதாரண சட்டத்தில் சந்தேகத்துக்கு இடமிருந்தால் குற்றம் நிரூபணமாகாது என்ற பிரிவு அதில் இல்லை.*

**காலனிய காலம்:** *இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 1919 - 1935 (1946 இல் காலாவதியானது) பிரிட்டனிலிருந்து போர்க்கால அவசரச்*

சட்டங்களாக இருந்தன. இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்திலேயே, அரசாங்கம் ''பிரிட்டிஷ் இந்தியாவின் பாதுகாப்பு பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பராமரிப்பது, இந்திய அரசுகள் அல்லது அன்னிய நாடுகளுடன் மாட்சிமை தங்கிய மன்னரின் உறவுகளைப் பராமரிப்பது, பழங்குடிப் பகுதிகளில் அமைதியைப் பராமரிப்பது, அல்லது போரைத் திறம்பட நடத்துவது ஆகியவற்றுக்குப் பங்கம் விளைவிக்கும் செயலில்'' ஈடுபடும் எவரையும் தடுப்புக் காவலில் வைக்கும் அதிகாரத்தை எடுத்துக்கொண்டது.

**சமகாலம்:** *சுதந்திர இந்தியா 1962 இல் அதன் சொந்த இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தை வரைவு செய்தது. இந்த போர்க்கால அவசரநிலை தடுப்புக் காவல் சட்டம் இரண்டாம் எழுத்திலும் உணர்விலும் உலகப்போரின் போதான 1939 ஆம் ஆண்டின் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்துடன் ஒத்திசைந்ததாகவே இருந்தது. 1962 ஆம் ஆண்டின் சட்டம் சீன வமிசாவழி இந்தியர்களுக்கு எதிராக, பெரும்பாலும் மேற்கு வங்கவாசிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஒருமாதம் வரை நீடித்தபோதிலும், அப்போது சிறைவைக்கப்பட்டவர்கள் அதற்குப் பிறகும் பலமாதங்கள் சிறையிலேயே கழித்தனர்.*

**காலனிய காலம்**: *ரௌலட் சட்டம், சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்களை, குறிப்பாக, 'பாதிக்கப்பட்ட பகுதிகள்' என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில், இரண்டு ஆண்டுகள் வரை தடுப்புக் காவலில் வைப்பதற்கு அதிகாரம் அளித்தது, ஆனால் அந்தச் சட்டம் 'அராஜகவாத மற்றும் புரட்சிகர இயக்கங்களைக்' கட்டுப்படுத்துவதற்கு என்று அறிவிக்கப்பட்டாலும், அதற்கு எந்த வரையறையையும் குறிப்பிடவில்லை.*

*மேல் முறையீடு செய்யவோ, வழக்கறிஞர் மூலம் வாதிடவோ அந்தச் சட்டத்தின்படி உரிமை இல்லை. அந்தச் சட்டத்தின் போர்க்கால கொடூரமான அதிகாரங்களை சாதாரண காலத்திற்கும் விரிவாக்கியது. 1920 களில் காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்துக்கு ரௌலட் சட்டம் இட்டுச் சென்றது.*

**சமகாலம்:** *ரௌலட் சட்டத்தில் உள்ளடங்கிய அதிகாரங்களும், அது இயற்றப்பட்ட சூழ்நிலைகளும் பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் (1985-1995), பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (2001-2004) ஆகியவற்றுகுப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 'அராஜகவாத மற்றும் புரட்சிகர இயக்கங்கள்' என்பதற்கு ரௌலட் சட்டம் விளக்கம் அளிக்காதது போலவே,*

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்திலும் ‘சட்டவிரோத’ என்பதற்கு போதிய விளக்கம் அளிக்கப்படவில்லை. அதன் ‘பாதிக்கப்பட்ட பகுதிகள்’ என்பது எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் நீட்டித்துக்கொள்வதற்கு வழிவகுத்தது. ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம், தடா சட்டம் ஆகியவற்றுக்கு ரௌலட் சட்டமே முன்னோடியாக இருந்துள்ளது.

**காலனிய காலம்:** 1930-களின் குடிமக்களின் கீழ்ப்படியாமை இயக்கத்தின் போது, காவல்துறையின் அடக்குமுறை அதிகாரங்கள் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டுத் தீவிரப்படுத்தப்பட்டன. எடுத்துக்காட்டாக, சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்பட்ட அமைப்புக்களைத் தடை செய்யும் அதிகாரமளிக்கும் சட்டம் இயற்றப்பட்டது. நீதிமன்ற ஆணையின்றித் தேடுதல் நடத்துவது, காலவரம்பின்றி காவலில் வைத்திருப்பது, தேசியவாதச் செய்தித்தாள்களைத் தடை செய்வது, சட்டவிரோதமானது என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சங்கங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது ஆகியவற்றுக்கும் இந்தச் சட்டங்கள் அதிகாரமளித்தன.

**சமகாலம்:** சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் மேற்கண்ட சட்டங்களின் பிரதிபலிப்பாக இருக்கிறது. இது சில அமைப்புக்களை சட்டவிரோதமானது என்று அறிவிக்கவும், தடை செய்யவும், குடிமக்களின் சில சங்கங்களைத் தேர்ந்தெடுத்து மறுபரிசீலனைக்கு வாய்ப்பின்றித் தடை செய்யவும் அதிகாரம் அளிக்கிறது.

**காலனிய காலம்:** காலனி அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரை-தன்னாட்சி அதிகாரம் கொண்ட மாகாண அரசாங்கங்களை நிறுவி, அவற்றுக்குத் தடுப்புக் காவல் சட்டங்கள் இயற்றும் அதிகாரத்தை அளித்தது. தொடக்கத்தில், காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கங்கள் அத்தகைய சட்டங்கள் இயற்றுவதை எதிர்த்தன. ஆனால் இறுதியாக அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு பிரிட்டிஷ் வழியையே சார்ந்திருந்தன.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 1939 காலாவதியான பிறகு, மாகாண அரசாங்கங்கள் அதே சட்டத்தை ‘பொதுமக்கள் பாதுகாப்பு சட்டங்கள்’ என்ற பெயரில், அவசரநிலை இல்லாத நேரங்களிலும் தடுப்புக் காவலில் வைக்கும் அதிகாரம் கொண்டவையாக இயற்றிக்கொண்டன.

‘‘அரசாங்கத்தைத் தூக்கியெறியும் நோக்கத்துடன் வன்முறையில் ஈடுபடும், சதிசெய்யும், தயாரிப்புச் செய்யும், அல்லது வன்முறையில் ஈடுபட முயற்சி செய்யும் எந்த நபரையும்’’ கையாளுவதற்கான எந்த அவசரச் சட்டத்தையும் அறிவிக்கும் அதிகாரம்

*ஆளுநர்களுக்கு அளிக்கப்பட்டது. 1935 ஆம் ஆண்டின் சட்டத்தின்படி தலைமை ஆளுனருக்கு (கவர்னர் ஜெனரல்) அளிக்கப்பட்ட இந்த விரிவான அதிகாரங்கள் ''முசோலினியையே பொறாமைப்பட வைப்பவை'' என்ற வின்ஸ்டன் சர்ச்சிலின் புகழ்பெற்ற விமர்சனத்திற்கு இட்டுச் சென்றன.*

**சமகாலம்:** *காலனிய அரசு ஒவ்வொரு இந்தியனும், ஆட்சியைச் சீர்குலைக்கும் குற்றச்செயலில் ஈடுபடக் கூடியவனாகவும் ''சட்டவிரோதியாகவும்'' இருப்பான் என்றே கருதியது. இந்த மனபோக்கு விடுதலைக்குப் பிந்திய இந்தியாவிலும் மிகவும் மோசமாகத் தொடர்கிறது.*

**காலனிய காலம்:** *இந்தியாவின் வைசிராயாக இருந்த லின்லித்கெள பிரபு, காந்தி தொடங்கிய ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தை நசுக்குவதற்கு, 1942 ஆகஸ்டு 15 அன்று ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தைப் பிறப்பித்தார். அந்தப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.*

*அந்தச் சட்டம் தெரிவித்ததாவது: ''எந்த ஒரு நபருக்கு எதிராகவும் வன்முறையைப் பயன்படுத்துவதில், கைது செய்யும், காவலில் வைக்கும், கைது செய்யும்போது தேவைப்பட்டால் மரணத்தை விளைவிக்கும் அதிகாரம் உள்ளது.''*

**சமகாலம்:** *விடுதலைக்குப் பிறகு 1954 இல் நாகா கிளர்ச்சி தொடங்கியது. அந்த இயக்கத்தை நசுக்குவதற்காக 1958 இல் நேருவின் அரசாங்கம் ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தைக் கொண்டுவந்தது. ''எங்குமே பலமற்ற அரசாங்கம் செயல்பட முடியாது. எங்கு வன்முறை இருக்கிறதோ, என்ன காரணமாக இருந்தாலும் சரி, அது அரசாங்கத்தால் அடக்கப்படவேண்டும்'' என்று சர்ச்சில், லின்லித்கெள ஆகியோரின் கூற்றுக்களையே நேருவும் எதிரொலித்தார்.*

*நாகலாந்தில் இந்தியப் படைவீரர்கள் கட்டவிழ்த்துவிட்ட கொடுஞ்செயல்கள் பிரிட்டிஷ் படைகள் இந்தியாவில் புரிந்த அதே அளவுக்கு இரக்கமற்ற கொடூரத்தன்மை கொண்டவையாக இருந்தன. அப்போதிருந்து, ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் வடகிழக்கு, பஞ்சாப், மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

*நன்றி:* Scroll.in

9

# கூன்பாண்டியன்- அலாவுதீன் உத்தௌஜி- திருஞான சம்பந்தர்

**- யுகன்**

கி. பி. 13 ஆண்டுவாக்கில் நபிகள் நாயகத்தின் பேரன் இமாம் உசேன் அவர்களின் வம்சத்தில் தோன்றிய அலாவுதீன் உத்தௌஜி என்றழைக்கப்பட்ட மார்க்க அறிஞர் இறை அழைப்பின் நிமித்தம் இந்தியாவுக்குள் வந்து கேரளம், இலங்கை வழியாக தமிழகத்தின் அதிராம்பட்டணம் வந்து பின்னர் மதுரை கோரிப்பாளையம் கிராமத்தில் தங்கி இஸ்லாத்தைப் பரப்பத் தொடங்குகிறார். அப்போது மதுரையில் ஆட்சியிலிருந்த கூன்பாண்டியன் இம்மகான் பற்றிக் கேள்விப்பட்டு தனக்கு இருக்கின்ற நெடுநாள் வயிற்றுவலியைத் தீர்க்க கோருகிறார். அவரும் இறைவனிடம் பிராத்தனை செய்து நீரை அருந்தக் கொடுக்கிறார். சில நாட்களில் கூன்பாண்டியனுக்கு வயிற்றுவலி குணமாகவே அகமகிழ்ந்த மன்னன் அலாவுதீன் உத்தௌஜியிடம் தங்களுக்கு என்ன செய்யவேண்டும் எனக் கேட்கிறான். அலாவுதீன் தன்னிடம் இருந்த 14,000 பொற்காசுகளைக் கொடுத்து கோரிப்பாளையம், சொக்கிகுளம், பீ.பீ. குளம், கண்ணனேந்தல், திருப்பாலை, சிறுதூர், சொற்குளிப்பட்டி, சோளிக்குடி, பூனாரி உள்ளிட்ட 9

கிராமங்களைத் தனக்கு கிரையம் எழுதித்தரச் சொல்கிறார். அவ்வாறே வழங்கி செப்பேட்டுப்பத்திரத்தை எழுதிக்கொடுத்தார் கூன்பாண்டியன்.

15 ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்கர் மன்னர்கள் ஆட்சிக்குட்பட்டபோது நாயக்கர் மன்னர்களில் ஒருவரான வீரப்ப நாயக்கர் (1592 -1595) ஆளுகையில் இருக்கும்போது அரசு ஊழியர்களுக்கும் தர்கா நிர்வாகத்திற்கும் அலாவுதீன் உத்தௌஜி அவர்களுக்கு வழங்கப்பட்ட கிராமங்கள் தொடர்பாக பிணக்கு ஏற்பட தர்கா நிர்வாகம் வீரப்ப நாயக்க மன்னரிடம் கூன்பாண்டியனது விலைப்பிரமாண செப்பேடுகளைக் கொடுக்க அதை ஏற்றுக்கொண்ட நாயக்க மன்னர் அதை மறு உறுதி செய்து கல்வெட்டு ஒன்றையும் எழுதி தர்கா நிர்வாகத்திற்கு அக்கிராமங்கள் சொந்தம் என்பதை நிறுவினார். *(பார்க்க: மதுரை டவுன், கோரிப்பாளையம் ஹஜ்ரத் காஜா சையத் சுல்தான் அலாவுதீன் அவுலியா அவர்கள் வாழ்க்கை வரலாறு)* இக்கல்வெட்டும் மேற்கண்ட செய்தியும் கோரிப்பாளையம் தர்காவில் காணப்படுகிறது. தமிழக அரசு தொல்லியல் துறையும் அதை அறிவிப்பு செய்து செய்திப் பலகை ஒன்றையும் வைத்துள்ளது.

**கூன்பாண்டியனும் திருஞானசம்பந்தரும்**

பக்தி இலக்கிய கால மூலவர் என்றும் சமண - பவுத்த புறச்சமயங்களைத் தமிழின் துணை கொண்டு விரட்டியத்தவர் என்றும் சைவ வரலாற்று அறிஞர்களால் விதந்தோதப்படும் ஞானசம்பந்தர் பாண்டிய நாட்டில் தழைத்தோங்கி நிற்கும் சமணத்தை வீழ்த்தி சமண ஆதரவாளரான கூன்பாண்டியனின் சூலை நோயை விரட்டி அவரை சைவத்தினராக மாற்றியதாகத் திருத்தொண்டர் புராணம் கூறுகிறது. திருஞான சம்பந்தரின் காலத்தைப் பொருத்தவரை அவரை ஏற்போரும் மறுப்போரும் 7 ஆம் நூற்றாண்டு என்றே சொல்லிவருகின்றனர். ஆனால் திருத்தொண்டர் புராணம் எனும் பக்தி இலக்கியங்கள் தவிர அவரது காலத்துக்கு துணைச் சான்றுகளாக கல்வெட்டுகள், செப்பேடுகள், வழக்காற்றுக்கதைகள் என்பது போன்ற புறச் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. கிடைக்கும் சான்றுகளைப் பொருத்தவரை மகேந்திர பல்லவனுக்கு கிடைக்கும் சான்றுகள் வழியே திருநாவுக்கரசரும் அவரின் சமகாலத்தவராக புராண வழியாக திருஞான சம்பந்தர் சொல்லப்படுகிறரே தவிர வேறு ஏதுமில்லை. ஆனால் ஞான சம்பந்தரால் குணப்படுத்தப்பட்டதாக அறியப்படும் கூன்பாண்டியனுக்கு கல்வெட்டுச் சான்றுகள் செப்பேடுகள் கிடைத்துள்ளன. ஆனால் அவை 13 ஆம் நூற்றாண்டு என்பதாக அறியத்தருகின்றன.

பல ஆயிரம் தேவாரப்பாடல்கள் ஞானசம்பந்தரால் பாடப்பட்டபோதும் ‘வாழ்க அந்தணர்’ எனத் தொடங்கும் தேவாரப்பாடல் ஒன்று முதன்முதலாக உடையார் பாளையம் கோவிந்தபுத்தூரில் உத்தமசோழன் காலத்தில் கட்டப்பெற்ற சிவன்கோயிலில் உள்ள மூன்றாம் இராஜேந்திரன் கல்வெட்டில் (கி.பி. 1248) காணப்படுகிறது. *(கா. இராஜன், கல்வெட்டியல், பக். 22.)* சைவத்தின் தொன்மையை முன்கொண்டு செல்வதற்காக சமயக்குரவர்களின் பாடல்ளை முன்னிழுத்துக் செல்லப்படுகிறதே தவிர வரலாற்றுச் சூழலுடன் எவ்விதத்துடனும் அப்பாடல்கள் பொருந்திப் போகவில்லை. பக்தி இலக்கியத் தேவைக்கான காலச்சூழலைப் பொறுத்தவரை சோழர் எழுச்சிக் காலத்துக்கான பண்பாட்டு இயக்கமாக செயல்பட்டது என்கிற வரையறுப்பின்படி ஞானசம்பந்தரை அக்காலத்திற்கு முன்கொண்டு செல்ல காரணம் ஏதுமில்லை.

ஞானசம்பந்தர் காலத்து கூன்பாண்டியனும் அலாவுதீன் உத்தௌஜி காலத்து கூன்பாண்டியனும் வெவ்வேறு அரசர்களாக இருக்கமுடியாதா என்ற கேள்வி எழலாம். கூன்பாண்டியன் என்ற பெயர் அவர் முதுகு கூன் விழுந்திருந்ததால் கூன்பாண்டியன் எனப்பெயராயிற்றே தவிர அவரது இயற்பெயர் நெடுஞ்செழியன். அதேநேரத்தில் 7 ஆம் நூற்றாண்டில் கூன்பாண்டியன் என்ற பட்டப்பெயர் கொண்ட மன்னர் ஒருவர் இருந்து அவருக்கு வயிற்றுவலி ஏற்பட்டு வேற்றுமதத்தை சேர்ந்த ஒருவர் அவரை குணமாக்கியது போல 13 ஆம் நூற்றாண்டில் கூன்பாண்டியன் என ஒருவர் இருந்து அவருக்கும் வயிற்று வலி ஏற்பட்டு பிற மதத்தவரால் குணமாக்கப்பட்டார் என்று வரலாற்றில் ஏற்பட்டிருக்க இயலாது என்றே நம்ப வேண்டும்.

கோரிப்பாளையம் தர்கா கல்வெட்டை ஆராய்ந்த தொல்லியலாளர் திரு. வெ. வேதாசலம் அவர்கள் 7 ஆம் நூற்றாண்டு கூன்பாண்டியன் இவர் அல்ல என்றும் திருப்பு பகுதி பவித்திர மாணிக்கம் என்ற பகுதியில் சோவாச் சாமந்தப்பள்ளி என்ற பள்ளிமாறவர் மகன் சுந்தரபாண்டியன் (1238 - 1255 ) என்கிறார். ஆனால் இம்மன்னனுக்கு கூன்பாண்டியன் என்ற பட்டப்பெயர் குறிப்பிடப்படவில்லை. கல்வெட்டில் சுந்தரபாண்டியன் எனக் குறிப்பிடப்படாது கூன்பாண்டியன் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகவே கூன்பாண்டியன் என்கிற மன்னன் 13 ஆம் நூற்றாண்டவராகத்தான் இருக்க வேண்டும் என்பது கருதுகோளாக கொள்ளமுடிகிறது. கூன்பாண்டியன் மற்றும் அக்கால சுந்தரபாண்டியன் என்ற பெயர் கொண்ட பல மன்னர்களது வரலாறு ஆய்வுக்குரியதாகிறது.

வரலாறு நெடுகிலும் இது போன்று சமயப் பூசல்களின் பின்னே எழுதப்படும் புனைகதைகளில் இன்னொரு மதத்தின் புகழ்ச் செய்திகளை தங்களது மதத்தினதாக சொல்லப்படுவது இந்திய - தமிழக சமய வரலாற்றுச் செய்திகளில் ஏராளமாகக் காணப்படுகின்றன.

சமணத்தின் பல கதைகளை வைதீகம் எடுத்தாண்டது போல இசுலாத்தின் செய்திகளையும் சைவம் எடுத்திருக்கலாமோ என்ற ஐயத்தை கூன்பாண்டியன் பற்றிய செய்திகள் எண்ண வைக்கிறது.



புகழ் பெற்ற மாபலிச் சக்ரவர்த்தி கதையை மாற்று வரலாறு நோக்கில் எழுதிச் செல்லும்போது அயோத்திதாசர் பாணாழ்வார் பற்றியும் சிறிய அளவில் எழுதிச்செல்கிறார். மாபலிச் சக்கரவர்த்தியின் மகன் பெயர் திருப்பாணர். திருப்பாணர் பௌத்த அரசராகவும் மகள் அலர்மேலு தங்கை பௌத்த பிக்குணியாகவும் இருந்தனர். திருப்பாணர் ஒரு கட்டத்தில் இல்லறம் துறந்து பௌத்தநெறியில் நின்று திரிசிரபுரம் அழகர் என்னும் அரங்கர் சங்கத்தில் சேர்ந்தான். அதாவது இன்றைய ஸ்ரீரங்கத்திலுள்ள இன்றைய ரங்கர் கோயிலான அரங்க விகாரில் இருந்த சங்கத்தில் சேர்ந்தான். அக்காலத்தில் பல இடங்களிலும் பௌத்தத்தைக் கைப்பற்றி முன்னேறி வந்த மிலேச்சர்களான வேடதாரி பிராமணர்கள் பாணன் பற்றி கதையும் மதிப்பும் மக்களிடம் வழங்கி செல்வாக்கு பெற்றிருந்ததால் அவற்றை முற்றிலும் நிராகரிக்காமல் முடியாமல் அவற்றை திரித்து தங்கள் நோக்கத்தையும் அதில் கலந்து கைப்பற்றிப் பரப்பினார்கள் (முனைவர் ஸ்டாலின் இராஜாங்கம், வரலாறாக்கப்படும் புனைவுகள், மானுடம், மே-ஜூலை, பக். 15) என்று சொல்வதையும் மேற்சொன்ன செய்திகளுடன் இணைத்துப்பார்க்கவேண்டும்.

பாண்டிய மன்னனுக்காக வாங்கி வந்த பரிகள் இரவில் நரியான கதை மாணிக்கவாசகர் காலத்தில் நடந்தது அல்ல என்றும் அக்கதை அதற்கு முன்பிருந்தே தமிழகத்தில் வழக்கில் இருந்து வந்த கதை என 'மாணிக்கவாசர்: காலமும் கருத்தும்' என்ற தனது ஆய்வு நூலில் தெரிவிக்கிறார் முனைவர் பத்மாவதி. பிரபலமான கதைகளை பின்னாளில் வைதிக சமயத்தைச் செல்வாக்குப் பெற வைக்கும் நோக்கில் நாயன்மார்கள் ஆழ்வார்களின் வரலாற்றை தொகுக்கப்படும் காலத்தில் இணைத்துவிடுவது வழக்கமான ஒன்றாக இருந்து வருவது கவனிக்க முடிகிறது.

கௌதம புத்தரின் எதிர்ப்பாளர்களாக ஆறு குருமார்கள் இருந்தார்கள். அவர்கள் பூரணகாசிபர், மக்கலிகோசலர், அஜித கேசம்பளி, பகுட கச்சாயனர், நிகந்த நாத புத்திரர், சஞ்சய பெலட்டிபுத்திரர் என்பவர்கள். இந்த அறுவரும் வைசாலி நகரத்தாரால் தங்கள் நாட்டில் ஏற்பட்டிருந்த கொள்ளை நோயைத் தீர்ப்பதற்காக வரவழைக்கப்பட்டு அவர்களால் அந்நோய் நீக்கப்படாமல் போகவே, பகவான் புத்தரை வைசாலி நகரத்தார்கள் அழைக்க அவர் அங்கு சென்று அந்நோயைப் போக்கினார். ***(மயிலை சீனி. வேங்கடசாமி, கௌதம புத்தர், பக். 149)*** இச்செய்தியில் இருந்து பல்வேறு அவைதிக மதப்பிரிவினரும் நோய்களைக் குணப்படுத்துவது என்பதைத் தத்தமது அறநெறிகளைப் பரப்புவதற்கான உத்திகளாக வைத்திருந்தனர் என்பதும் அவைதிக மதப்பிரிவினரின் பேரறங்களில் ஒன்றான மருத்துவம் சார்ந்த அறநெறிப் பரப்புரைகள் மூலம் ஏற்பட்ட செல்வாக்கை வீழ்த்துவதற்கு பின்னாளில் அச்செய்திகளை தத்தமது வைதிக மதப் பரப்புதலுக்கு ஏற்பத் திரிபு செய்து பரப்பி வந்ததும் மேற்கண்ட செய்திகள் மூலம் அறியமுடிகிறது.

**பேச: 900 35 98 674**

10

# நீலப் பொருளாதாரமும் மீனவர் இன அழிப்பும்

## மெய். சேது ராமலிங்கம்

நீலப்பொருளாதாராம் என்பது கடலுக்குள்ளும் மற்றும் சமுத்திரங்களுக்குள்ளும் மீன்பிடிப்பு, கடல் அலையில் இருந்து மின்சாரம் எடுத்தல், கடலுக்கு அடியில் உள்ள கனிம வளங்களைச் சுரங்கம் தோண்டி எடுத்தல் கடல் தாவர உயிரினங்களில் இருந்தும் மருந்துப் பொருட்களைத் தயாரிக்க அனுமதி அளித்தல் உள்ளிட்ட 13 வகை தொழில் திட்டங்கள் உலகெங்கும் தொடங்கப்பட்டுள்ளன. இதில் கடலுக்குள்ளே செயற்கையாக பாத்திகள் கட்டியும் கூண்டு வைத்தும் மீன் குஞ்சுகளை வளர்த்து ஏற்றுமதியாக்கும் திட்டமும் உள்ளது. இதனால் மீனவரல்லாத சமூகங்கள் முக்கியமாக பெரும் நிலவுடமையாளர்கள், கார்ப்பரேட்டுகள் மீன்பிடிக்க இறங்கியுள்ளன. அவர்களுக்கு மானியமும் அளிக்கப்பட்டு உள்ளது.

இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டியது பாரம்பரிய மீனவர்களுக்கு மீன்பிடிப்பு ஒரு தொழில் மட்டுமின்றி அது அவர்களின் பிரிக்க முடியாத

வாழ்வியல் பண்பாடாகும். மீனவர்கள் என்பது பிறப்பினால் அல்ல, அவர்களின் தொழிலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாலும் தொன்மையான குடிமக்கள் என்பதாலும் இவர்கள் இந்தியாவில் சிறப்பானதும் முக்கியமானதுமான இடத்தைப் பெறுகிறார்கள்.

சிறிய அளவிலான மீனவர்கள், பிற மீனவர்கள் ஆகியோர் அனைவரையும் மீன் பிடிப்பிலிருந்தும் கடற்கரையிலிருந்தும் வெளியேற்றுவதுதான் நீலப் பொருளாதாரத்தின் நோக்கமாகும். வெளியேற்றிவிட்டுக் கடல் வளங்களையும் கடற்கரைகளையும் முழுக்கவே பன்னாட்டுக் கம்பெனிகள், கார்ப்பரேட்டுகளிடம் தாரை வார்ப்பதுதான் நீலப் பொருளாதாரம். இதை நீலப் புரட்சி என்றும் பிரதமர் நரேந்திரமோடி வர்ணித்தார்.

அந்த நீலப் பொருளாதாரத் திட்டங்கள்தான் கார்ப்பரேட்டுகளின் பெருங்கனவாகும்.

உலகளவில் கடல், கடற்கரைகள், நீர்நிலைகள், மலைகள், கனிம வளங்கள் போன்ற இயற்கை வளங்களை தொழில் திட்டங்களுக்காகச் சுரண்டுவது என்ற நிலை மாறிவிட்டது. இதற்கு அடுத்த நிலையாக இயற்கை வளங்களையே மூலதனமாக்கி கொள்ளை இலாபம் அடிப்பது என்ற போக்க வேகமாக வளர்ந்து வருகிறது. இதற்காக நீலப் பொருளாதார திட்டம் என்ற பெயரில் பிரம்மாண்டமான திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாகவே கடலர் மீன் மற்றும் பிற உயிரினங்கள் வளர்ப்பு என்ற கொள்கையானது கொண்டு வரப்பட உள்ளது. இக்கொள்கையின் முன்வரைவு வெளியிடப்பட்டுள்ளது. இக்கொள்கையானது அதிகாரப்பூர்வமாகவே கடலை வணிக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தலாம் என்று அறிவிக்கிறது. ஏன் இந்த நிலை ஏற்பட்டது? எதற்காக நீலப் பொருளாதாரமும் தேசிய கடல் மின் வளர்ப்பு (தே.மீ.வ) கொள்கையும் கொண்டு வரப்பட்டுள்ளது? இவற்றின் பின்புலமுள்ள அரசியல் காரணிகள் என்ன? இங்கு இவற்றின் பின்புலத்திலுள்ள அரசியல் பொருளாதார காரணிகளை அறிந்த பின்னர், தே.மீ.க. வளர்ப்பு கொள்கையின் முக்கிய அம்சங்களை மட்டும் காண்போம்.

நாம் வாழ்கின்ற சமூக அமைப்பு முதலாளிய சமூக அமைப்பாகும். 24 மணிநேரமும் நம்மை அறியாமல் சுவாசிப்பது போலவே இலாபம் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவது இச்சமூக அமைப்பின் அடிப்படைத்தன்மையாகும். முதலாளிய உற்பத்தி தொடங்கிய சென்ற நூற்றாண்டுகளிலிருந்தே சந்தைக்கான பிரச்சனைகள் தொடங்கியது.

முதலாளிய உற்பத்தி முறையில் தேவைக்காக அன்றி இலாபத்திற்காக மட்டுமே உற்பத்தி செய்து குவிப்பது அதன் ஒருங்கிணைந்த அம்சம். அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளை விற்க உள்நாட்டில் சந்தைகள் கிடைக்காமல் அவை தேங்கத் தொடங்கியது. அது உலகப் பொருளாதார நெருக்கடியாக வெடித்தது. இந்நெருக்கடிகளைத் தீர்க்க நாடுகளின் சந்தைகளை பிடிக்கப்போய் அது முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களாக முடிந்தது அனைவரும் அறிந்த விசயமே.

இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்னர், மீண்டும் சந்தைக்கான பிரச்சனை தலை தூக்கியபோது அது வளரும் நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்ட ஏற்றத்தாழ்வான வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் தீர்த்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் மூலமாக தீர்க்கப்படாமல் சந்தைப் பிரச்சினை நீடித்ததால் வளரும் நாடுகள் மீது புதிய தாராளவாத பொருளாதாரக் கொள்கைகள் திணிக்கப்பட்டன.

**இந்தியச் சூழல்**

இந்தியாவைப் பொருத்தவரை, புதிய தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகள் அமல்படுத்தப்பட்ட பின்னர், அந்நிய மூலதனம் வெள்ளமாகப் புகுந்து நாட்டையே சூறையாடுவதாகவும் நாடு காலனி நாடாக மாறுவதாகவும் போராட்டக் குரல்கள் எழுந்தன. ஆனால் நடந்ததோ அதற்கு எதிர்மாறானது.

இந்திய ஆளும் வர்க்கங்கள் புதிய தாராளவாதக் கொள்கைகளை தங்களின் நலன்களுக்கேற்பப் பயன்படுத்தி வளர்ந்தன. இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், இந்தோனேசியா, தாய்லாந்து உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகளிலும் ஆப்பிரிக்க நாடுகளிலும் இந்தியா மூலதனமிட்டு தொழில்கள் தொடங்கியது. அது மட்டுமின்றி ஆயுதங்களையும் இந்திய அரசு ஏற்றுமதி செய்து வருகிறது. ஏகாதிபத்திய நாடுகள் இயற்கை வளங்களையே மூலதனமாக கையாளத் தொடங்கியபோது இந்தியாவும் அந்த வரிசையில் சேர்ந்து கொண்டது.

**மூலதனமான இயற்கையும், விளைவுகளும்**

முதலில் நீர்வளத்தை வணிகமயமாக்கி அதை பெரும் மூலதனமாக்கிக் கொள்ளை இலாபம் ஈட்டி வருவதைத் தொடர்ந்து மணல், கனிம வளங்கள், வளங்கள், கடற்கரை என்ற வரிசையில் தற்போது கடலை மூலதனமாக்கிக் கூறுபோடத் தொடங்கியுள்ளனர்.

இயற்கையை மூலதனமாக்கி அது முதலீடு செய்யப்படும்போது கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு இயற்கையை மீண்டும் மறுமுதலீடு செய்து அதைப் பெருக்க முடியாது. அதாவது

மூலதனம் - இலாபம் - மறுமுதலீடு - இலாபம் -மறுமுதலீடு என்று இடைவிடாது தொடரும் இந்த சுழற்சியில் இயற்கையை மீண்டும் மீண்டும் மறுமுதலீடு செய்ய முடியாது. ஏனெனில் இயற்கை என்பது அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபி அல்ல. இயற்கையை மூலதனமாக்கிச் சுரண்டப்படும்போது ஏற்படும் பேரிடர்கள் நமது கற்பனைக்கெட்டாதவை.

**தொழில் நுட்பம்தான் தீர்வா?**

இயற்கை மூலதனமாக்கப்படும்போது ஏற்படும் கடும் பாதிப்புகளுக்குத் தீர்வாக ஆளும் வர்க்கங்கள் தொழில்நுட்பங்களை முன்வைக்கிறார்கள். உதாரணமாக கார்ப்பரேட்டுகள் முன்வைக்கும் பசுமை தொழில்நுட்பமும் சரி, பூமி சூடேற்றத்திற்குக் காரணமாக உள்ள கால நிலைமாற்றத்திற்கும் தீர்வாக முன்வைக்கப்படும் தொழில்நுட்பமும் சரி அறிவியல் பூர்வமற்றது. சுற்றுச்சூழல் நெருக்கடியையும் அதனால் ஏற்படும் பேரிடர்களையும் ஒருபோதும் தொழில்நுட்பம் தடுக்காது. அது தீர்வும் ஆகாது. பசிக்குத் தீர்வாக மரபணு மாற்ற விதைகளை தொழில்நுட்பத்தை வைக்கிறார்கள். ஆனால் கடலைச் சுரண்டுவதினால் ஏற்படும் சூழலியல் நெருக்கடிகளுக்குத் தீர்வாக அவர்கள் தொழில்நுட்பத்தை வைக்க முடிவில்லை. அது முடியாது என்பதை உணர்ந்துள்ளனர்.

**(கடலை) கொள்ளையடிப்பதற்கு ஒரு கொள்கை**

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தேசியகடல் மீன் வளர்ப்பு கொள்கை முன்வரைவின் முகப்புரையில் (தே.மு.வ) கொள்கையின் இலக்காக தேசத்தின் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்காகக் கடல் உணவு உற்பத்தியை நிலைத்த வகையில் உறுதிப்படுத்துவது, அதன் மூலமாகக் கடற்கரை சமூகத்தினர் கூடுதல் வருவாய்க்கும் இவர்களை தொழில் முனைவோராவதற்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதாகும்.

தே.மீ.வ கொள்கை முன்வைக்கும் மூல உத்தியானது ( Strategy ) நிலைத்த முறையிலும் பொறுப்பான முறையிலும் கடல் உணவ உற்பத்தியை அதிகரிப்பது என்றும், சமூக பொருளாதார வளர்ச்சியையும், உணவு, ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பையும் பாலின சமூகத்துவத்தையும் உறுதிப்படுத்துவதாகக் கூறுகிறது.

கொள்கையின் இலக்கம் நோக்கமும் நல்ல நோக்கத்தைக் கொண்டதாக இருப்பது சரிதான். ஆனால் கொள்கையின் தொலைநோக்கும் (Vision), செயல் பணியும் (Mission) அதற்கு எதிர்மாறாக உள்ளது மட்டுமின்றி, இது போன்ற நல்லெண்ண மூடுதிரையை விலக்கி உண்மை முகத்தை வெளிக்கொண்டு வந்துவிடுகிறது. கடல் பண்ணை உணவு உற்பத்தியின் வளர்ச்சி

குழந்தைப் பருவத்தில் இருக்கிறது என்றும் அவற்றுக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது என்றும் கூறி கடல் மீன் மற்றும் பிற விலங்குகள் வளர்ப்பதற்கான தொழில்நுட்பங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றை வணிகமயமாக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறது. கடல் மீன் மற்றம் இதர விலங்குகள் உற்பத்தியானது மற்ற நாடுகளில் வளர்ந்து வருவதாகவும் கூறுகிறது.

**கொள்கை குறித்த விளக்கம்**

கடல் மீன் மற்றும் பிற உயிரினங்கள் வளர்ப்பு என்பது இறால் வளர்ப்பின் சிறப்புப் பகுதியாகும். இதில் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கடல்வாழ் தாவரங்களையும் உயிரினங்களையும் கடலிலும் அலைகள் உள்ள பிற நீர்நிலைகளிலும் வளர்ப்பதும் அடங்கும்.

குஞ்சு பொறிப்பகம் போன்ற வசதிகளுடன் கடல் நீரைப் பயன்படுத்துவதற்காக கடற்கரையில் வசதிகளை ஏற்படுத்துவதும் இதில் அடங்கம் என்று விளக்கமளித்துள்ளது. இதில் பொருளாதார ரீதியாக முக்கியத்தும் வாய்ந்த கடல் வாழ் தாவரங்களையும் உயிரினங்களையும் செயற்கை முறையில் வளர்ப்பது என்பது கார்ப்பரேட்டுகளின் நலனுக்கானது என்பது மறைவானது அல்ல, வெளிப்படையானதாக உள்ளது.

கடல் மீன் வளர்ப்பில் 1) செய்கையாக மீன் பிடிப்பு, 2) மீன் பிடிப்பு, 3) அழிந்து வரக்கூடிய அபாயகரமான நிலையிலுள்ள கடல் வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பது, 4) கடல் உணவு அல்லாத இனங்களான கடல்பாசி, கடல் புற்கள், உயிரியல் எரிசக்தி, உயிரியல் இரசாயனப் பொருட்கள் உள்ளிட்டவற்றை பண்ணையில் வைத்து உற்பத்தி செய்வது மற்றும் கடல் வாழ் ஆடம்பர வண்ண மீன்கள் மற்றும் முத்து சிப்பிகள் போன்றவற்றை பண்ணை முறையில் வளர்ப்பதும் விவரிக்கப்பட்டுள்ளது.

**மீனவ விவசாயி - ஒரு இன அழிப்பு**

இதில் முக்கியமானதும் அபாயகரமானதுமான விசயம் என்னவெனில், தேசிய கடல் மீன் வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைவரையும் மீனவ விவசாயிகளாக அழைக்கலாம் என்று குறிப்பிடுகிறது. மீனவ விவசாயிகள் என்பது மீனவரல்லாத மற்ற சமூகத்தினரை மீன்பிடிக்க அனுமதிக்கும் பதமாகும். இதன் மூலம் மீனவர்கள் யார் என்ற கேள்வி எழுப்பி மீனவர்கள் இனத்தையே அழிப்பதாகும்.

இன்னொரு பக்கம் மீனவர் அல்லாத பிற சமூகத்தினரை மீன்பிடிக்க அனுமதிப்பதால் பெரும் கார்ப்பரேட்டுகள் நிலவுடையாளர்கள், விவசாயிகள், தொழிலதிபர்கள், கம்பெனிகள்

இதில் இறங்குவார்கள். இதனால் மீனவர்களுக்கும் பிற சமூகத்தினரும் பெரும் மோதல்கள் ஏற்படலாம். இறுதியில் பணபலம், அதிகார பலம் உள்ள பிற சமூகத்தினரிடம் கார்ப்பரேட்டுகளிடமும் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக உள்ள மீனவர்கள் தோற்க நேரிடலாம். இதனையடுத்து மீனவர்கள் பிழைப்பு தேடி வேறு வேலைகளுக்குச் செல்ல நிர்பந்திக்கப்படுவர். ஆக மீனவர் இனத்தின் அழிப்பு என்பதே மீனவ விவசாயி என்ற வார்த்தையின் உள்ளார்ந்த பொருளாகும். மீனவரல்லாத மற்ற சமூகத்தினருக்கு மீன்பிடிப்பில் இறங்குவதை ஊக்குவிக்க மானியத்தையும் வழங்கி வருகிறது அரசு என்பது குறிப்பிடத்தக்கது.

**கற்பிக்கப்படும் நியாயங்கள்**

நாட்டின் ஊட்டச்சத்துத் தேவைக்கு பாரம்பரிய முறையில் பிடிக்கப்படும் மீன் இனங்கள் போதவில்லை. அது குறைந்து வருவதற்கு மாற்றாக செயற்கையான முறையில் கடல் மீன் வளர்ப்பு தேவைப்படுவதாகவும், அது வேகமான முறையில் வளர்ந்து வருவதாகவும் கூறுகிறது. உள்நாட்டு குட்டைகளிலும் நீர் நிலைகளிலும் மேற்கொள்ளப்படும் இறால் உற்பத்தி 1951இல் 0.75 மில்லியன் டன்களாக இருந்தது. 2017இல் 4.9 மில்லியன் டன்களாக வளர்ந்து இவ்வரிசையில் இந்தியா, உலக நாடுகளில் மூன்றாவது இடத்தில் உள்ளது. இதே போல கடல் சார்ந்த இறால் உற்பத்தி கடந்த சில ஆண்டுகளாக 0.5 மில்லியன் டன்களாக அதிகரித்து வருகிறது.

கடல்மீன் வளர்ப்பில் இறால் உற்பத்தியானது மிக வேகமாக வளர்ந்து வரும் துறை என்று குறிப்பிடுகிறது. 2016இல் கடல் மீன் வளர்ப்பு 28.7 மில்லியன் டன்கள் மீன் உணவை அளித்தது. இது உலகின் மீன் உணவு உற்பத்தியில் 35.8 விழுக்காடாகும். மொத்த கடல் மீன் வளர்ப்பு உற்பத்தியில் கடல்பாசி உள்ளிட்டு 58.7 மில்லியன் டன்களாகும். இது உலக உற்பத்தியில் 53.4 விழுக்காடாகும்.

இதுவரை கண்ட விபரங்கள் கடல் மீன் வளர்ப்பு எவ்வளவு இலாபம் கொழிக்கும் தொழிலாக வளர்ந்து வருகிறது என்பதற்கு சான்றாகும். இதுவே கடலும் சமுத்திரங்களும் மூலதனமாக மாற்றப்படுவதற்கான முக்கிய காரணமாகும். இந்நிலையில், இந்தியா 2030க்குள் 18 மில்லியன் டன்கள் மீன்கள் உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது 10 மில்லியன் டன்கள் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. கூடுதல் 8 மில்லியன் டன்கள் முழுமையான அளவில் இறால் தொழிற்சாலைகளின் உற்பத்தியிலிருந்தே எடுக்கப்பட உள்ளது. எனவே கடலும், உள்நாட்டின் நீர்நிலைகளும் வேட்டையாடப்படுவது உறுதிப்படுத்தப்படுகிறது.

இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் கூடுதல் தேவையானது இறால் உள்ளிட்ட கடல் மீன் வளர்ப்பின் மூலமாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். அது ஒன்றே ஒரே வழியாக உள்ளது என்று கூறுகிறது. இங்கு சமூகத்தின் வளர்ச்சிக்கு முதலாளியம் ஒன்றே தீர்வு என்று ஆளும் வர்க்கங்கள் கூறி வருவதை வலியுறுத்துவதாக உள்ளது.

**கடலை கூறுபோடும் திட்டம் (Marine Spatial Plans - MSP)**

கொள்கை (7.3)ல் மத்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி, மாநில அரசுகள் கடலின் இடத்தைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். அதாவது கடலை பகுதி பகுதியாகப் பிரித்து கடலில் கூண்டு வைத்து மீன் மற்றும் பிற கடல்வாழ் உயிரினங்கள், இறால் வளர்ப்பது, மூங்கில் பாத்தி கட்டி கடல்பாசி வளர்ப்பது போன்ற திட்டங்களை மேற்கொள்ளப்பட வேண்டும். கடலை தனித் தனிப் பகுதியாகக் கூறுபோடும் திட்டம் இது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

**குத்தகை விடுவதற்கான கொள்கை**

உள்நாட்டு நீர்நிலைகளில் பாத்திகட்டி மீன்வளர்ப்பு, இறால் வளர்ப்பு உள்ளட்டவற்றை அந்தந்த ஊர்களின் உள்நாட்டு அரசாங்கங்கள் மேற்கொள்ளும். கடல்களை குத்தகைக்கு விடுவதை கடற்கரை மாநில அரசுகள் மேற்கொள்ளும். இதற்கான அதிகாரங்கள் முறையே மாநில அரசுகளுக்கும் ஊராட்சி அரசாங்கங்களுக்கும் அளிக்கப்படும்.

கடல்பாசி வளர்ப்பில் (9.6) முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் அடையாளங் காணப்பட்டு, அவற்றுக்கான தொழில்நுட்பம் அமல்படுத்தப்படும். அதன் மூலம் உணவுக்கானதும் அது அல்லாததுமான கடல்பாசி வகைகள் வளர்க்கப்படும்.

**குஞ்சுகளும் உணவுகளும்**

நோய் எதிர்ப்பு குஞ்சுகளுக்கான வங்கிகளும் உருவாக்கப்படும். இதற்கும் நோய் எதிர்ப்பு பூச்சிக்கொல்லி எதிர்ப்பு உள்ளடக்கத்துடன் மரபணு மாற்றியமைக்கப்பட்ட விதைகளுக்கும், ஹார்மோன் ஊசி போடப்பட்ட பிராய்லர் கோழி குஞ்சுகளுக்கும் எந்தவித வேறுபாடுகளும் இல்லை. இவ்வகை மீன்கள் வளர்ந்து மற்ற இயற்கை மீன் இனங்களுக்கு மத்தியில் பரவினால் விபரீத விளைவுகள் ஏற்படும். இது தனியே ஆய்வு செய்யப்பட வேண்டிய விசயம்.

உணவைப் பொருத்தவரையில் செத்த மீன் குஞ்சுகளை உணவாகப் பயன்படுத்துவது கைவிடப்பட்டு அதற்குப் பதிலாக தாவரங்கள் மற்றும் பிற உயிரினங்கள் பயன்படுத்தப்படும்.

இறந்த மீன்களைப் பயன்படுத்துவதைக் கைவிட்டு உயிரினங்களையோ தாவரங்களையோ பயன்படுத்தினாலும் அவை நிலத்தில் ஊடுருவி நிலத்தடி நீரைப் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**நிதி மற்றும் காப்பீடு**

கடலில் கூண்டு கட்டி மீன் மற்றும் பிற உயிரினங்களை வளர்ப்பதை ஊக்குவிக்க நபார்டு நிறுவனம் நிதி உதவியும் மானியமும் அளித்து ஊக்குவிக்கிறது. அந்த நிறுவனம்தான் மீனவ விவசாயிகளுக்கு மானியமும் அளித்து வருகிறது என்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.




கடலில் கூண்டு வைத்து மீன் மற்றும் பிற உயிரினங்கள் வளர்ப்பது ஆபத்து மிகுந்ததாகும். புயல், சூறாவளி போன்ற இயற்கைப் பேரிடர்களால் கூண்டுகள் உடைந்து விடும் அல்லது அலையில் அடித்துச் செல்லப்படும் அபாயம் உண்டு என்பதால் இதுவரை எந்த நிறுவனமும் காப்பீடு அளிப்பதற்கு முன்வரவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இறுதியாக கொள்கையில் குறிப்பிடப்படும் முக்கிய அம்சங்களே கடலும் உள்நாட்டு நீர்நிலைகளும் இலாபத்திற்காகச் சூறையாடப்படப் போகிறது என்பதை தெளிவாக்குகிறது. இது கடல், கடற்கரை மற்றும் மீனவர்களை அழிக்கும் கொள்கையாகும். இப்புவியின் பிரமாண்டமான சூழல் அமைப்பான கடலுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள போராகும். இதை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்?

11

# சுளுந்தீ :
# காலந்தோறும் பற்றிப் படரும் அதிகாரத்தின் பெருநெருப்பு

இரா. மோகன்ராஜன்

சுளுந்தீ ஒரு இலக்கியமாக்கப்பட்ட ஆவணம். ஆவணமாக்கப்பட்ட இலக்கியம். ஒரு ஆவணம் இலக்கியமாக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் இது புனைவுகளாக்கப்பட்ட வரலாறல்ல. வரலாற்றை அதன் போக்கில் காலம், இடம், நிகழ்வு என இணைக்கப்பட்ட நிகழ்வுகளின் தொகுப்பு. இரத்தமும், சதையுமாக கடந்தகாலங்களில் இதே நிலத்தில் உலவிய உயிர்களின் கடந்த காலங்களின் இதய துடிப்பு.

ஒரு காலக்கட்டத்தின் வரலாற்றை சொல்வது என்பது அந்த காலக் கட்டத்திற்குச் செய்யும் நீதி மட்டுமல்ல. வரலாற்றை நேர்மையாகப் அணுகுவற்கான ஒரு ஒழுங்கும் கூட. வரலாற்றை யாருடைய பார்வையிலிருந்து பார்ப்பது என்பதற்கு சுளுந்தீ ஒரு எடுத்துக்காட்டு. அதிகார நடுவத்தை மக்களின் பார்வையிலிருந்து சொல்வதுதான் ஒரு வரலாற்று களத்தின் நீதியாக இருக்க முடியும். அந்த வகையில் சுளுந்தீ ஒரு மக்கள் இலக்கியம். ஒரு மக்கள் ஆவணம். ஆம் மக்களைப் பற்றி பேசும் ஆவணங்கள் அரிது அதைக் கண்டறிதல் அதனினும் அரிது. சுளுந்தீ

மக்களைப் பற்றி பேசாத காலத்தில் மக்கள் பற்றி பேசுவது அதன் சிறப்பு.

வரலாற்றின் மிக முக்கியமான சமூக அரசியல், கலாசார திருப்பங்களின், சரிவுகளின், வீழ்சிகளின், எழுச்சிகளின் காலத்தில் சுளுந்தீ நடுவம் கொள்கிறது. தமிழ் நிலத்தின் அறியப்படாதக் கதைக்களனை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது சுளுந்தீ.

அதிகாரம் காலந்தோறும் நிலத்தையும், அந்த நிலத்தின் எளிய மக்களையும் எவ்வாறு சூறையாடிச் செல்கிறது என்பதை சுளுந்தீ புதிய பார்வையில் வெளிச்சம் பாய்ச்சுகிறது.

பாண்டியர்கள் வாரிசுரிமைப் போரில் நுழைந்த வியஜயநகர ஆட்சியாளர்கள் அவர்களை வீழ்த்தி, தமிழகத்தில் நுழைகிறார்கள். பண்டிய பேரரசுகளின் கீழிருந்த சிற்றரசுகள் விஜயநகரத்திற்கு கப்பம் கட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. கதைக்களம் அவர்களின் நுழைவாயிலான பன்றிமலை(கொடைக்கானல்) வேடசந்தூர் பகுதிகளைக் கொண்டிருக்கிறது. வேட்டுவக்குல சிற்றரசு வீழ்ந்தைத் தொடர்ந்து அந்த பகுதிகளை முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டு சுல்தான்களிடம் பின்பு ஆங்கிலேயரிடம் அவ்வாட்சியின் எஞ்சிய அதிகாரம் வீழும் வரையிலான காலம் கவிச்சியுடன் பதிவாகிறது.

விஜயநகர அரசு சுல்தானிடம் வீழவும், அவ்வரசின் தமிழக ஆட்சியாளர்கள் தமக்கென ஒரு ஆட்சியை அமைத்துக் கொள்கின்றனர். மண்டலங்களாகப் பிரிக்கப்பட்ட பகுதிகளின் கீழ் தளபதிகளே குறு மன்னர் களாகிறார்கள். அவர்கள் அரண்மனையார் என்று அழைக்கப்படுகிறார்கள்.

தமிழ் நிலமானது, பாண்டியர் காலத்தில் இருந்த குல, பண்பாட்டு வழக்கங்கள் விஜயநகர ஆட்சிக்காலத்தின் எஞ்சிய பகுதியில் மேலும் இறுக்கமடைகிறது. மேலிருந்து கட்டமைக்கப்பட்ட அதிகாரம் மக்களின் அன்றாட வாழ்வை தீர்மானிப்பதாக இருக்கிறது. தொழிலுக்கமய வாழும் குலங்கள் தமது எல்லைகள் மீறாமல் தக்கவைத்துக் கொண்டே சுரண்டும் அரசியலை வெறும் கடந்த காலம் என்றோ நாயக்கர் ஆட்சியென்றோ சுருக்கிவிட முடியாது. அதிகாரத்திற்கும், சுரண்டலுக்குமான தொடர்பும் இயல்பும் கால எல்லைகளுக்கு அப்பாலானதாகும்.

குலங்கள். அவற்றின் கலாசாரா, தொழில் வேற்றுமைகள் ஒரு பக்கம் இருக்க இக்குலங்களை இணைக்கும் பீடம் ஒன்று இருக்கிறது. அதற்கென குல குரு ஒருவர் இருக்கிறார். அவர் குலங்கள் தமக்குள் கொண்டிருக்கும் எல்லைகள் மீறாமல் பார்த்துக் கொள்கிறார். பீடங்கள் இயல்பாகவே ஆன்மிகத் தன்மை கொண்டிருக்கின்றன. மக்கள் செல்வாக்கை, சொல்வாக்கைக் கொண்டிருக்கின்றன. குலகுரு சமூக

மன்னராக இருக்கிறார். அரசியல் அதிகாரம் படையணிகள் கொண்ட மன்னருக்கு இணையானவராக இருக்கிறார். மன்னருக்கு சமதையாக பல்லக்கில் செல்பவராக இருக்கிறார். எனவே மன்னர்களுக்கும், குருபீடங்களுக்குமானத் தொடர்பும், இணைவும் வெறும் சமூக சிக்கல் சார்ந்ததல்ல அது அதிகாரத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. அது அரசியலுடன் தொடர்புடையதாக இருக்கிறது.

குலங்கள் தமக்கென விதிக்கப்பட்ட எல்லைகளுக்குள்ளாக வாழ்வதை குலகுரு உறுதி செய்பவராக இருக்கிறார். குலங்கள் தமது தொழில் அல்லது சமூக எல்லைகளை மீறும் போது அதுபற்றிய முறைபாடுகளைச் சட்டம் ஒழுங்காக மன்னர் முன் கொண்டு செல்பவராக இருக்கிறார். மன்னரோ மக்கள் குலங்களில் இருக்கவும், நீக்கவுமான இறுதி அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார்.

குல நீக்கம் என்பது நில நீக்கமாக இருக்கிறது. நில நீக்கம் என்பது சமூக நீக்கமாகவும், இருப்புக் குறித்து சதா கேள்வியெழுப்பும் ஒன்றாக இருக்கிறது. குல நீக்கம் ஒருவகையில் பொருளாதார நீக்கமாகும். சமூக தகுதியிழப்பாகும். நீக்கும் அதிகாரம் குல குருவிற்கு அல்லாமல் மன்னருக்கு தரப்பட்டிருக்கும் அரசியலானது, சமூக படிநிலையை உறுதி செய்வதாக இருக்கிறது. பாண்டியர் காலத்தில் குல நீக்கம் என்பது சமூகத்திலிருந்து தள்ளி வைப்பதாக இருக்க, அது நாயக்கர் காலத்தில் சமூக குற்றமாக மாறுகிறது. தண்டனை தரும் ஒன்றாக மாறுகிறது.

குல நீக்கம் என்பது குல ஒழுக்கம் என்பதைக் கடந்து சமூக ஒழுக்கம், சட்ட, ஒழுங்கு என்பதாக நீட்சி பெறுகிறது. குல ஒழுங்கை மீறுதல் என்பது அரசதிகார ஒழுங்கை மீறுவதாகிறது.

அதற்கேற்றார்போல மனு தர்மம் சமூக ஒழுங்குக்கான ஓர் நீதி முறையாக இருக்கிறது. சுளுந்தீ காலத்தில் பார்ப்பனர்கள் அவ்வதிகாரத்தை முழுமையாகப் பெற்றிருக்கவில்லையாயினும் அதற்கான தொடக்கத்தை கொண்டிருக்கிருக்கிறது. மனு நீதியை நடைமுறை படுத்தும் சகல அதிகாரங்களையும் பின்னாளில்தான் பார்ப்பனர்கள் பெறுகிறார்கள். குல நீக்க குற்றங்களுக்குள்ளானவர்களின் நிலங்கள், கோவில்களுக்கும் பிறகு அது அரண்மனைகளுக்கும் பின்னர் அவை பார்ப்பனர்களிடமும் சென்று சேரும் மனுநீதியால் புதிய அதிகார நடுவங்களாகப் பிற்காலங்களில் பார்ப்பனர்கள் உருவாகிறார்கள் என்பதை அதற்கு முன்னரான காலங்களைக் கொண்டு சுளுந்தீ உறுதிபடுத்துகிறது.

பாண்டியர் காலத்தில் நிலங்கள் கோயிலுக்குரியதாக இருக்கிறது. கோவிலிருந்து நிலங்களை குத்தகையாகப் பெறுவோர் உழவு செய்பவர்களாக வரி செலுத்துபவர்களாக இருக்கிறார்கள்.

நாயக்கர் காலத்தில் நிலம் அரண்மனைகளுக்குரியதாக மாறுகிறது. குல நீக்கம் செய்யப்பட்டவர் நிலங்கள் அரண்மனைக்கு செல்லும் அரசியல் முக்கியமானது. நிலபறிப்பின் பிறிதொரு வடிவமாக குலநீக்கம் இருப்பதை மறுக்க முடியாது.

தமிழ் குலங்களை நீக்கியும், விலக்கியும், சேர்த்தும், பிரித்தும், கலைப்பதுமான அரசியலில் நாயக்க சிற்றரசுகள் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முயல்வதே அவர்களது இறுதிகாலம் வரையிலான அதிகார அரசியல் வரலாறாக இருக்கிறது.

தமிழ் குடிகளின் குல நீக்கம் என்பது விசயநகர வீழ்சியின் பின்னணியில் மேலும் தீவிரமடைகிறது. தில்லி சுல்தான்களிடம் அவ்வாட்சி வீழவும் விசயநகரக் குடிகள் தமிழ் எல்லைகளுக்குள் நுழையவும் இங்குள்ள அவர்களது பிரதேச மன்னர்களும், அரண்மனைகளும் மண்ணின் மைந்தர்களைக் குல நீக்கம் செய்து அந்த நிலங்களை விசயநகர மக்களுக்கு கொடுக்கிறார்கள். குலநீக்கமானவர்கள் விசய நகர மன்னர்களை எதிர்க்கும் எஞ்சியப் பாண்டிய குறுநில வாரிசுகளுடனோ அல்லது தில்லியின் பிரதேச அரசான செஞ்சி சுல்தான் படைகளிலோ போய் தஞ்சமடைவதன் வழி தமது எதிர்ப்பினைச் சொல்பவர்களாக இருக்கிறார்கள்.

அந்த எதிர்ப்பில் மருத முத்து ஆசாரி இன்றய அரசபயங்கரவாத எதிர்ப்பின் எதிர்புரட்சியின் சுளுந்தீ கங்காக சுடர் விடுகிறான். கரந்தடிப்படை கொண்டு அரசபடைகளை வெருட்டுவதில் மருத முத்து ஆசாரி ஒரு செகுவராவாக, பிடலாக, பிரபாகரனாக வரலாற்றின் முன் சென்று பாக்கிறோம்.

''எங்கள எல்லாம் குலநீக்கம் செஞ்சதாச் சொல்லி, நஞ்சை நெலத்த கதலி நரசிங்கப்பெருமாள் கோயிலுக்குத் தானம் செய்த்தாகச் சொன்னார்கள். ஆனால் அந்த நெலத்த பூராவும் புதுசா இங்க குடிவைச்ச வடுக சனங்க உழவடை செய்யிறாங்க(பக்.-173)

''மழ குறைவாப் பேஞ்சுது, அரண்மனை விதித்த வரியோ அதிகம். நாங்க கொடுக்குறத வாங்கிட்டுப் போங்கண்ணு திட்டவட்டமா சொல்லிருக்கான் இடமலக்குடி கட்டகாமன் குடும்பன். இதனால அவன குல நீக்கம் செஞ்சு, நஞ்ச நெலங்கள சாஸ்திரி கோட்டையில் இருக்கிற பிராமணர்களுக்கு மானியமாகக் கொடுத்தாங்க'. (பக்-103)

காலந்தோறும் நிலங்கள் பார்ப்பனர்களிடமும், நாயக்கர்களிடமும் போய் சேருவதும், அவர்களை அண்டி பிழைக்கும் ஏனைய மேல்சாதிகள் புதிய தனக்காரர்காக உருவாவதுமான அதிகார அரசியல், இன்றைய அதிகார அரசியலுடன் மட்டுமல்ல, சமூக அரசியலுடனும் வைத்துப் பேசப்பட வேண்டிய ஒன்றாகும்.

'முறை தவறி கலியாணம் முடிப்பதைத் தடுக்க, ஒவ்வொரு குலமும் அவங்க முன்னோர்கள முன்நிறுத்தி முறை பிரிப்பது நடைமுறையில இருக்கு, பலரும் முன்னோர்கள நெனச்சுப் பார்த்துச் சொல்லத் தெரியல. இதனால நாடெங்கும் முறைப் பிரச்சன பெரும் பிரச்சனயா இருக்கு. இதுக்குத் தீர்வாக, மாசிக்களரி அன்னைக்கு அவங்க அவங்க பங்காளிக ஒன்னாக்கூடி உறவு பார்த்து முறை பிரிச்சுக்க மன்னர் உத்தரவிட்டுள்ளாரு. குலசாமி தெரியலேனா அரண்மனையாரின் குலதெய்வமான காமாட்சி அம்மனையும், அங்காளப் பரமேஸ்வரியையும் கும்பிட்டு, உறவு முறை பாத்து முறை பிரிக்க மன்னர் குடிசபையைக் கூட்டி கேடாங்கி நாயக்கர், பூப்பண்டாரம் மூலமாகச் சனங்களுக்கு சொல்லி அனுப்புறாங்க. அரண்மனையார் வணங்கும் தெய்வத்த கும்பிட்டா அவங்களுக்கு உடனடியாக உழவடை நெலம் கிடைக்குது.(பக்-159)

குல நீக்கத்தைப்போல குலதெய்வத்தை அறிதல் குல முன்னோர்களை அறிதல் என்பது தனது தொழிலை தனது சமூக இடத்தை அறிதல். சமூக இடத்தை அறிதல் என்பது தன்னை அறிதல் தனது குல, சாதி எல்லையை அறிதல் என்பதாகும். தற்போது நடைமுறைபடுத்தப்பட்டிருக்கும் குடிசன உரிமைக்கு, குடிசனச் சட்டத்திருத்தம் என்பனவற்றுக்குச் சற்றும் குறைந்ததல்ல அன்றைக்குக் குலச்சான்று அளித்தலாகும். இன்றைக்கு குடிசன உரிமை திருத்தம், சில குறிப்பிட்ட மதத்திற்கு மட்டும் என்று வரையறுக்கும் குடியுரிமை சட்டத்தின் நேற்றய வடிவமே குலமறிதல் சட்டம் என்று சொல்ல முடியும். குலங்களை பிரித்தல், நீக்குதல் வரையறுத்தல் என்ப அதிகாரவர்க்கத்தின் பழைய உத்திகளில் ஒன்றேயாகும் என்பதை இன்றைய அரசியலுடன் சேர்த்துப் புரிந்து கொள்ள முடியும்.

'சிவன் சொத்துக் குல நாசம்' என்பார்கள். கீழத் தஞ்சை வட்டாரத்தில். உழவடை நெல்லை கோயிலுக்கு கொடுக்காமல், வரி செலுத்தாமல் ஏமாற்றினால் அக்குடும்பம், அல்லது அக்குலம் தழைக்காது என்பது ஒரு நம்பிக்கை. ஆனால் மெய்யாகவே கோயிலுக்கானப் பங்கை கொடுக்காது போனால் நிலம் பறிக்கப்பட்டு, குல நீக்கம் செய்யப்படுவதையே இது குறிக்கிறது என்பதை சுளுந்தீ உறுதிபடுத்துகிறது.

குல நீக்கம் என்பது ஒரு சமுக அரசியல், சமூக இழிவு. அது குலங்களின் கீழாகக்கூட அவர்களை வைத்திருக்கவில்லை. ஊர் விலக்கம், சாதி விலக்கம் போல அது ஒரு சமூக விலக்கமாக இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மனித விலக்கமாக, மனுகுல விலக்கமாக இருக்கிறது. குல விலக்கமானர்வகளைக் கொல்லும் அதிகாரத்தை அரண்மனைகள் கொண்டிருக்கின்றன. சமூகத்தின் எந்த நீதியும் அவர்களுக்கு கிடையாது. பகலில் நடமாடவும்

இரவில் சுளுந்தீ வெளிச்சத்தில் கூட அவர்கள் தம்மை இனம் காட்டக்கூடாத தண்டனைக்குறியவர்களாக இருக்கிறார்கள். மனிதர்களாக இருப்பதே தண்டனைக்குறியதாகிறது. மிக எளிதில் சமூகத்தின் விளிம்பில் அல்லது அதற்கு அப்பால் அவர்களைத் தள்ளி வைக்கிறது குல விலக்கம்.

குடியானவர்களிடம் கற்றாளைப் புதருக்கு அப்பால் நின்று 'சாமி!!' என்றழைத்துக் குரல் வழி உரையாடுவது மட்டுமே அவர்களுக்கான ஒரே வெளி தொடர்பாக அனுமதிக்கப்படுகிறது. நிலமற்றவர்கள் புவியற்றவர்கள். புவியற்றவர்கள் எதுவுமற்றவர்கள். அவர்களது இருப்பிற்கு எந்த பொருளுமிருப்பதில்லை. இழப்பதற்கு எதுவுமற்றவர்கள் காலந்தோறும் எதிர்புரட்சியாளர்களாக இருப்பதன் அரசியலைச் சொல்கிறது சுளுந்தீ.

குல நீக்கம் எளிதானதாக இருப்பது போல குல சேர்ப்பு அத்தனை எளிதானல்ல என்ற அரசியலைப் புரிந்து கொள்ள முடிகிறது. குல சேர்ப்பு என்பது மீண்டும் நீக்கப்பட்டக் குலத்திலேயே இணைவதாகும். இணைக்கப்படுவதாகும்.

'இடுப்பளவு வெட்டப்பட்டக் ஒன்பது குழிகளில் நிறைந்திருக்கும் சாணிக் கரைசலில் முங்கி எழ வேண்டும். அதில் பாதி பேர் இறந்துவிடுவதுண்டு. தப்பித்தவர்கள் குளித்துவிட்டு வந்து வரிசையாக நிற்க, பட்டக்காரங்க ஒவ்வொருத்தர் காலுல விழுந்து வணங்க வேண்டும். பட்டக்காரங்க கையில் வச்சிருக்கும் செருப்பாலக் காலில் வீழுந்தவன் தலையில் அடிப்பாங்க அதன் பிறகே அந்த நபர் குலத்தில் சேர்க்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார். (பக்-72)

குல சேர்ப்பு எளிமையாக இருக்க முடியாது, கூடாது என்பதைத்தான் குலத்தில் மீண்டும் சேர்க்கும் நாயக்கர் கால சடங்குகள் உறுதிபடுத்துகின்றன.

அரண்மனைக்கு எதிராக சதி செய்தவர்கள் கரட்டின் உச்சியில் எல்லோரும் பார்க்கச் சங்கிலியால் தொங்க விடுவார்கள் இவர்களை காக்கா, கழுகு கொத்தி திண்ணும். பிறகு யாதொருவரும் அரண்மனைக்கு எதிராக மூச்சுவிடமாட்டார்க்கள். மிக கொடிய இந்த தண்டனையானது அக்காலத்தில் குல நீக்கமானவர்களில், குறிப்பாக அய்ம்பது வயதுக்கு கீழானவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இது அவர்களது புரட்சியை ஒடுக்கவும், சுல்தான் படைகளில் சேர்வதையும் ஒரு சேர தடைசெய்தது.

குல நீக்கமானவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த செஞ்சி சுல்தான்கள் குல நீக்கமானவர்களுடன் சரிக்குச் சமமாக அமர்ந்து உணவருந்துவது. தோளில் கைபோட்டு பழகுவது என்பன குல நீக்கமானவர்களிடையே புதி உள்ளொளியை பாய்ச்சுகின்றன.

முகமதியர்களின் பேதமற்ற நட்பு அவர்களை குல நீக்கத்திலிருந்து ஆசுவாசப்படுத்துவதாக இருக்கிறது. இதன் மறுதலையாக கன்னிவாடி அரண்மனையிலுள்ள அரபிய வெடிப்படையினர் குல நீக்கமானவர்களில் பெண் எடுக்கும் போக்கு பிற்கால முகமதியர் குலம் தோன்றுதையும், அவர்கள் குல நீக்கம் செய்யப்பட்டவர்களுடன் வைத்துக் கொண்ட உறவு இசுலாமியர் குறித்த இன்றைய பார்வையுடன் வைத்து ஒப்பு நோக்க வேண்டிய ஒன்றாகும்.

ஆனால் இவையெல்லாம் குடிகளுக்குதான். அரண்மனைகளுக்கல்ல என்பதைதான் விருப்பாச்சியார் அரண்மனையார் அரபு பெண்ணை அரசியாக ஏற்றதும் பேகம் அரசியாக மாறியதுமாகும். குடிகளுக்கான எந்த சட்டங்களும் அரண்மனைகளுக்குப் பொருந்துவதில்லை என்பது காலந் தோறுமான நீதியாகவே இருக்கிறது.

நிலம் சமூக இருப்பை உறுதி படுத்துவது போல சுளுந்தீ அவ்விருப்பைக் கேள்விக்குள்ளாக்குவதாக இருக்கிறது. சுளுந்தீ என்பது தன்னுள் எரிக்கப் பயன்படும் எண்ணெய் சுரப்பைக் கொண்டுள்ள மரவகை என்றாலும் அது புரட்சியின் அணையா கங்குகளைக் கொண்டதாக இருக்கிறது. பண்டுவத்தில் அதை நிலத்தில் வைத்துப் பதப்படுத்தும் போது இரும்புக் கடப்பாரைப் போன்று பாறையைப் பிளக்கும் கருவியாகிறது. அது பறையை மட்டுமல்ல அதிகாரத்தையும் அசைத்துப் பார்க்குமென்பதால் அது தடை செய்யப்பட்ட ஒன்றாகிறது. குடிசனப்படைகள் கூட தடி மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டக் காலத்தில் குடியானவர்கள் அடுப்பு மூட்டுவதற்கு கூட சுளுந்தியின் அரண்மனைத் தடையின் அரசியல் மிகத் தெளிவானதாகும்.

கோயிலில் எரிந்து கொண்டிருந்த சுளுந்தீ அரண்மனைக்குள்ளும், அரண்மைனை நியமித்த தீ கொளுத்தியிடமும் அடக்கி வைக்கப்பட்ட அரசியலின் கதையைத்தான் சுளுந்தீ ஆவணப்படுத்துகிறது. தீக்கொளுத்திகள் புதிய அதிகார நடுவங்களாக உருவாகிறார்கள்.

பண்டுவம் என்ற மருத்துவத்திற்குப் பயன்படும் செந்தூரம், குங்குலியம் போன்றவை வெடி பொருளாகவும் பயன்படுவதை அறியும் அரண்மனை அதிகாரவர்க்கம் அவற்றிற்கு தடைவிதிக்கிறது. வெடி என்பது வெடிதான் அது யாரிடம் இருக்கிறது என்பதான் முக்கியம் அந்த வகையில் அய்யப்படும் யாதொருவரையும் கொல்லும் நீதியை உருவாக்குகிறது வெடி பற்றியப், புரட்சி பற்றிய அச்சம். கன்னிவாடி அரண்மனை அதிகாரத்தால் சிரச் சேதங்களுக்கு ஆளாகினர் அரண்மனைக்கு எதிராகக் கலகம் செய்யக்கூடும் என்ற ஒற்றை

அனுமானத்தில் குல நீக்கமானவர்கள், செந்தூரம் என்ற மருந்து, வெடி-மருந்தாகும் என்பதால் அதைப் பயன்படுத்தும் பண்டுவர்கள், அவர்களுடன் குடியானவர்களும், கொல்லி மலையில் வாழ்ந்த பல சித்தர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்த அச்சத்தின் விளைவால் பண்டுவத்தில் செந்தூர மரபு அழிபடுகிறது. அதிகாரவர்க்கத்தின்முன் செந்தூரம் மட்டுமல்ல குங்குலியம் மட்டுமல்ல பண்டுவம் அறிந்த நாவிதர்களும் அழிபடுகிறார்கள் என்பதைத்தான் சுளுந்தீ தமது ஆதாரச் சரித்திரமாக ஆவணப்படுத்துகிறது.

நாவிதர்கள் அரசியல் முக்கியத்துவத்தை சமூக முக்கியத்துவமாக மாறுவதை மிக கவனமாக அரண்மனைகள் கட்டுப்படுத்துகின்றன. நாவிதர்கள், நாவிதர்களின் சவரக்கத்திகள் எதிரிகளிடமும் உண்டு என்ற அரண்மனை அரசியல் தத்துவமே அவர்களைக் கூட்டம் கூட்டமாகக் கொல்வதற்கான அதிகாரவர்க்கத்தின் நீதியைக் கொண்டிருக்கிறது. அனல்வாத, புனல்வாதமில்லாமலே கழுவேற்றபடும் நாவிதர்களின் படுகொலைகள் சுளுந்தீ ஆவணக் களமெங்கும் குருதிக் கவிச்சியுடன் இரைந்துகிடக்கின்றன.

பாண்டிய அரசில் நாவிதர்கள், ஏகாலி, செம்மான், தச்சன் உள்ளிட்டோர் தகுதி திறமைக்கேற்ப படையணிகள் இருந்தனர். ஆனால் விசயநகர ஆட்சியல் குல தொழில் கட்டாயமாகிறது. நாவிதர்கள் அரண்மனை சேவர்களாக இருப்பதால் அவர்கள் அரசியல், அதிகார முக்கியத்துவம் பெறுகிறார்கள். அவர்கள் வெறும் நாவிதம் செய்வதால் மட்டும் அந்த முக்கியத்துவத்தைப் பெற்றுவிடவில்லை என்பதைத்தான் சுளுந்தீ பதிவு செய்கிறது. ஓர் ஆவணம் இலக்கியமாகும் என்பதை அல்லது இலக்கியம் ஆவணமாகும் என்பதை இப்படித்தான் சுளுந்தீ நமக்குச் சொல்கிறது.

சவரக்கத்தியுடன் பண்டுவம் அறிந்த நாவிதன் பண்டிதனாவதும், அவன் அரண்மனை முக்கியத்துவம் பெறுவதுடன், குதிரையில் வலம் வரும் அனுமதியைப் அதிகாரவர்க்கத்திடம் பெறுவதும் அக்காலச் சமூக சூழலில் எளிதானதல்ல. அவ்வாறே போர் படைகளில் சேர்வதும், போர்க் கலைகளைக் கற்பதும் அரண்மனைக் குற்றமாகும். அவர்களுக்கு சமூக மரியாதை என்ற ஒன்றே கிடையாது.

சவரக் கத்தி, மழிப்பதைப் போலவே உயிரைக் காப்பாற்றும் மருத்துவக் கத்தியாக, மகத்துவக் கத்தியாக இருப்பது சமூகக் குற்றம் என்பது சுளுந்தீ காலத்தில் மட்டுமல்ல இன்றைக்குமான சமூக, அதிகாரவர்க்க நீதியாகும். நேற்றைக்கு சுளுந்தீ இன்றைக்குத் தீப்பெட்டியாக மாறியிருக்கிறது. சமூகம் அப்படியேதான் இருக்கிறது.

குதிரை இன்றைக்கு இரண்டு, நான்கு சக்கர வாகனங்களாக மாறியிருக்கிறது. அவை குதிரைச் சக்தியாக மதிப்பேற்றப்பட்டிருக்கிறது. மாறியிருக்கிறது. யார் மருத்துவராகலாம், யார் ஆகாக்கூடாது. என்பதன் சமூக அரசியல் அதிகார நீட்சியை நேற்றய சுளுந்தீ கொண்டிருக்கிறது.

குல நீக்கத்தையும், சவரக்கத்திகளையும் இன்றைக்கும் அதிகாரவர்க்கமே தீர்மானிக்கின்றன. யார் எதை செய்ய வேண்டும் என்ற குலப்பண்பாடு இன்றுமிருக்கிறது. பண்டுவம் அறிந்தவர்கள் கொல்லப்படும் நீதி இன்றைக்குமிருக்கிறது. பண்டுவ அறிவை கைப்பற்றியவர்களின் வாரிசுகள் இன்றுமிருக்கிறார்கள். கல்வி சுளுந்தீ இன்றைக்கும் சுடும் ஒரு கால மெய்.

நாயக்கர் கால பண்பாடு சமர்கிருதமயமாகிய அதே வேளை பார்ப்பனர்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள் என்ற அரிதலுடன் இந்த ஆவணத்திற்குள் பயணிக்க வேண்டியிருக்கிறது. பாண்டியர் கால நாவிதர்கள் குலங்களின் ஆண்,பெண்களுக்கு திருமணத்தை முன்நின்று நடத்துபவர்களாக இருக்கிறார்கள். பின்னர் அந்த இடங்கள் யாரால் கைப்பற்றபட்டன என்பதை சுளுந்தீ நமது அறிவுக்கு விட்டுவிடுகிறது. சொல்லப்படாத இணைக்கப்படாத, கால நிகழ்வின் மவுனத்திற்கிடையே குல குருக்களின் இடத்தையும், மடங்களின் இடத்தையும் ஏன் அரண்மனைகளின் இடத்தையுமே பார்ப்பனியம் கைப்பற்றிக் கொண்ட வரலற்றை சுளுந்தீ வெளிச்சம் போட்டுக் காட்டத்தான் வேண்டும் என்பதில்லை. அதன் வரலாறு நம் கண்முன்னேயுள்ளது.

குலத்தை மீறுதல் என்பது ஆகப்பெரியக் குற்றமாக கருதப்படுவதுடன், அந்த குற்றத்தின் ஆகப்பெரிய தண்டனையைப் பெண்களே சுமக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சுளுந்தீ பெண்கள் பக்கந்தோறும் தூக்கிச் சுமக்க முடியாத துயரத்துடன், கண்ணீருடன் அலையுறுவதை கனத்த மனதுடனே கடக்க வேண்டியிருக்கிறது. பெண் நிலத்துடன் பிணைக்கப்படுவதற்கு முன் அவள் குலத்துடன் பிணைக்கப்பட்டவளாக இருக்கிறாள். அவளது சூல் பை குலபிறப்பை உறுதிபடுத்தும் உறுப்பாக அதிகாரத்துடன் இணைக்கப்பட்டதாக இருக்கிறது. இது எல்லா குலத்துப் பெண்களுக்கும் பொதுவான நீதியாகும்.

குலங்கள் தளர்ச்சியுற்ற காலத்தில் அது நிலத்துடன் தொடர்படுகிறது. குலத்தின் இடத்தை நிலம் பெறுகிறது. பெண்ணுடல் நிலத்தில் வேர் கொள்கிறது. சூல்பையும், நிலமும் வேறு வேறல்ல நிலத்தின் மீதான உரிமை பெண்ணின் மீதான உரிமை என்பன ஒன்றே. குலத்துடன் முன்பு நிலம் தொடர்புடையதாக இருந்தது போலவே

அவை இரண்டுடனும் பெண் என்றைக்கும் விலங்கிடப்பட்டவளாகவே இருக்கிறாள். சுளுந்தீ பெண்கள் காலத்தால் வேறுபட்டவர்கள், பெண்கள் என்ற வகையில் இன்றைக்குமானவர்கள்.

நாவிதப் பெண்கள் பண்டுவம் அறிந்த மருத்துவச்சியாக இருக்கிறார்கள். அந்தப்புறப் பெண்களின் பாலியல் நோய்களுக்கும் குழந்தைப் பேற்றுக்கும் மருத்துவம் பார்ப்பவர்களாக இருக்கிறார்கள். பெண்களுக்கு இடைச்சவரம் செய்கிறார்கள். ராமபண்டுவனின் பெண்டாட்டி வல்லத்தாரை அப்படியானவளாக இருக்கிறாள். அரண்மனையும், ஆணாதிக்கமும் அவளை மென்று துப்புகின்றன. அவ்வாறே அந்தப்புரங்களின் கதையும், சதிராட்டப் பெண்களின் கதையும் சுளுந்தீயை அனைக்க முடியாமல் ஆவியாகிப் போய்விடுகின்றன.

பெண்கள் தம்மை மீட்டுக் கொண்டு வந்த சரித்திரம் சுளுந்தீயிலும் சுள்ளென்று சுடுகிறது. வாடன், செங்குலத்து மாடன் என இரு எளிய மனிதர்களை தமது சதியால் மோதவிட்டு அரண்மனை தனது அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதை தொடக்கத்திலும். நூலின் இறுதியிலும் பதைபதைப்புடன் முன்நிறுத்துகிறது. அதிகாரம் என்பது தொடர்ந்து எளிய மனிதர்களை மோதவிட்டு அவர்களது உயிர்களைக் குடித்து மேலும் முன்னநகர்கிறது. நகரும் என்பதற்கு காலம் ஒரு தடையல்ல என்பதை சுளுந்தீ கால வெளிச்சத்தில் முன் வைக்கிறது.

சுளுந்தீ ஆவணமெங்கும் குல நீக்கமானவர்கள் அலைவுறுகிறார்கள். அல்லல் படுகிறார்கள் அவர்களது ஆற்றா அழு கண்ணீர் கொதிநீராகிவீழுகிறது. சுளுந்தீயின் பெரு நெருப்பில் அவர்கள் ஒளிந்து வாழ்வதும் இடம்பெயர்ந்து கொண்டே இருப்பதுமான வாழ்வு பொற்காலங்கள் என்று சொல்லப்பட்டவற்றின் மீது தீ அள்ளி கொட்டுக்கிறது. நாயக்கர் கால குல நீக்கம் அதனை எதிர்த்த குலங்களின் மீது மதங்களின் ஆற்றுபடுத்துதல்கள் ஏசுசபையின் வரவு மேலும் குலநீக்கத்தினையும், சனங்கள் வரி செலுத்துவதையும் நீதிபடுத்துகிறது என்றால் பின்னாளில் ஆங்கிலேயர் வரவுவும் சுரண்டலுக்குமான நீதியை ஏசு சபை பெற்றுத்தருகிறது. குல நீக்கம் குற்றபரம்பரைச் சட்டமாகத் தொடர்கிறது. ஆளுபவர் மாறுகிறார்கள் அதிகாரம் ஒன்றுதான் என்பதையே சுளுந்தீயின் வரலாறு பேசுகிறது.

மக்களின் ஆற்றாது அழுத கண்ணீர் தேய்க்கும் படை என்ற அறவுரைக்கு அப்பால் மதம் அந்த இடத்தை கைப்பற்றிக் கொண்டு நிறுவனமாகும் போது இறுகத் தொடங்குகிறது. அது அதிகாரத்தின் பிறிதொரு கிளையாகிறது. கடவுள் என்பதும் ஆள்பவரும் வேறு

வேறல்ல என்ற மதங்களின் கதையாடல், அரசியல் ஆன்மிகம், ஆன்மிக அரசியல் புரட்சியின் கங்குகளை நீர்த்துப்போகச் செய்கிறது. மதத்திற்கும், அதிகாரத்திற்கமான தொடர்பு சுளுந்தீக்களை பரவவிடாமல் தடுக்கிறது.

பன்றிமலை சித்தர் எஞ்சிய சமண மருத்துவத்தின் அல்லது சமண குருவின் வழி தோன்றலாகவே தோன்றுகிறது. எனினும் சைவ சமயத்தவராகவே அறியப்படுகிறார். அரண்மனையார்களும், அரண்மனை யாரின் பெண்டு பிள்ளைகளும் அவர் முன் வீழ்ந்து வணங்குகிறார்கள். அவர் ஒரு தேசாந்தரி. அதிகாரம், குலம் எல்லாவற்றையும் புறந்தள்ளி மனிதர்களை அடையாளம் காட்டும், மனிதத்தை அடையாளம் காட்டும் சுளுந்தீயின் மையச்சுடராக ஒளிர்கிறார். சுளுந்தீயின் மக்கள் ஆன்மிகமாக பன்றிமலை சித்தர் இருக்கிறார்

சுளுந்தீ ஒரு மெய் புனைவா, அல்லது புனைவு போன்ற மெய்யா என்றால் இரண்டுமில்லை அது ஒரு மெய். கால மெய் என்று சொல்லத் தோன்றுகிறது. கல்வெட்டுக்களையும், கால மெய்களையும், செம்புபட்டயங்களையும், ஆவணங்களையும் இணைத்துச் செல்லும் ஒரு கோட்டுச் சித்திரம். சித்திரம் மெய். கோடு மெய்யை, சித்திரத்தை இணைத்துச் செல்லும் வடிவம் கொடுக்க முயற்சிக்கும் ஒரு ஏற்பாடு. வரலாற்று மெய்யை அதன் காலத்தின் நீதியில் நின்று பேசியிருக்கிறார் முத்துநாகு. கடும் உழைப்பும், அர்ப்பணிப்பும் அதை சாத்தியப்படுத்தியிருக்கிறது. சுளுந்தீ என்பது நெருப்பின் நேற்றய வடிவம். இன்றைக்கும் சுடும் பெரு நெருப்பு.

நூல்-சுளுந்தீ, ஆசிரியர் - இரா. முத்துநாகு
வெளியீடு: ஆதி பதிப்பகம், விலை- 480/-
15, மாரியம்கோவில் தெரு, பவித்திரம்,
திருவண்ணாமலை - 606806
அலைபேசி - 99948 80005

# மானுடம் வென்றதம்மா ..!

இனிய உதயம் ஜனவரி 2020 இதழின் சிற்றம்பலம் பகுதியில் மானுடம் வென்றதம்மா என்ற தலைப்பில் மூத்த பத்திரிகையாளர் திரு. கோவி. லெனின் அவர்கள் மானுடம் காலாண்டிதழின் கடைசி இரு பருவகால இதழ்களின் தலையங்கம் உள்ளிட்ட கட்டுரைகள் சிலவற்றையும் எடுத்து மிகச்சிறப்பான அறிமுகத் திறனாய்வாக எழுதியிருக்கிறார்.

“அச்சு ஊடகங்கள் தட்டுத்தடுமாறும் சூழலில், கனமான கட்டுரைகளுடன் காலாண்டிதழ் என்பது பெரும் சவாலான பணிதான். மண்ணைக் காக்கும் மனதிடமும், மக்களின் எதிரிகளை அடையாளப்படுத்தும் ஆவேசமும் கொண்டோருக்கு சவால்களும்கூட சாதனைகளாகும். மானுடம் ஆசிரியர் குழுவிடம் மனதிடமும் ஆவேசமும் இருப்பதை அதன் உள்ளடக்கத்தில் காணமுடிகிறது’’ என்ற பத்திரிகையாளர் கோவி. லெனின் அவர்களின் புகழாரம் மானுடம் தன் பணியைச் இடையறாதும் செவ்வனேயும் மனதிடத்துடனும் செய்து முடிக்க உத்வேகம் அளிப்பதாகவே ‘மானுடம்’ கருதுகிறது.






சமூக-அரசியல்-பண்பாட்டுக் காலாண்டிதழ்
மானுடம்
சான்றோர்க்கு அணி

## விளம்பரக் கட்டண விபரம்

| | |
|---|---|
| பின் அட்டை (வண்ணம்) | ரூ. 5000/- |
| முன்பின் உள் அட்டை (வண்ணம்) | ரூ. 3000/- |
| உள்பக்கம் (கருப்பு வெள்ளை) | ரூ. 1000/- |

---

## நன்கொடை / சந்தா விபரம்

| | |
|---|---|
| புரவலர் நன்கொடை | ரூ. 3000/- |
| ஆயுள் சந்தா (12 ஆண்டு) | ரூ. 2000/- |
| ஆறாண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| மூன்றாண்டுச் சந்தா | ரூ. 500/- |
| தனி இதழ் | ரூ. 50/- |

விளம்பரக் கட்டணம் / சந்தா நன்கொடைகள்
அனுப்ப வேண்டிய வங்கி எண்

**M. KALIRASU, A/c No. 017901000047679**
**IFSC : IOBA0000179, Indian Overseas Bank,**
**Ilayankudi Branch.**
பேச: ***89403 46154***

வாழ்த்துக்களுடன்....

# தமிழன்

## தொலைக்காட்சி

## உலகத் தமிழர்களின் மனசாட்சி



**திரு. கா. கலைக்கோட்டுதயம்**

நிறுவனர்

## தமிழன் கலைக்கூடம்

#3, 5 ஆவது தெரு. அவ்வை திருநகர்,

விருகம்பாக்கம், சென்னை - 600 092.

+91-44-2479 5411, 2479 7047, 2479 4801

www.tamilantelevision.com info@tamilantelevision.com

www.facebook.com/thamizhantholaikkaatchi

www.twitter.com/tamilantv

www.youtube.com/user/Thamilan Television